# தொழிற்கருவிகள்: ஒரு மொழியியல் நோக்கு

# (Occupational Implements: A Linguistics Study)

CPL 681803

முனைவர் சா. சுந்தரபாலு

# தொழிற்கருவிகள்: ஒரு மொழியியல் நோக்கு

# (Occupational Implements: A Linguistics Study)

முனைவர் சா. சுந்தரபாலு

சித்தன் பதிப்பகம்
17, மாமாகுடி, மேலவெளித் தெரு,
மாமாகுடி அஞ்சல், தரங்கம்பாடி வட்டம்
நாகை மாவட்டம் - 609 301.
கைபேசி : 97157 69995

விலை ரூ. 100

தொழிற்கருவிகள்: ஒரு மொழியியல் நோக்கு ● ஆசிரியர் : சா.சுந்தரபாலு ● © சா.சுந்தரபாலு ● முதல் பதிப்பு : ஜூலை 2009 ● வெளியீடு : சித்தன் பதிப்பகம், 17, மாமாகுடி, மேலவெளித்தெரு, மாமாகுடி அஞ்சல், தரங்கம்பாடி வட்டம், நாகை மாவட்டம் - 609 301, கைபேசி: 97157 69995 ● அட்டை, நூல் வடிவமைப்பு: கவிஞர் ஆனந்தகுமார், கந்த மங்கலம் ● கணிப்பொறி அச்சு: அஜய் கம்ப்யூட்டர்ஸ், அண்ணாமலை நகர், சிதம்பரம் ● அச்சாக்கம்: மயூரா அச்சகம், கோவை - 641 009.

Occupational Implements: A Linguistics Study ● Author : S. Sundarabalu ● © S.Sundarabalu ● Language : Tamil ● First Edition : July 2009 ● Size : Demy 1 x 8 ● Paper : 70 GSM Maplitho ● Pages : 160 ● Published by Sittan Publications, 17, Mamakudi, Melaveli Street, Mamakudi Post, Tharangampadi Taluk, Nagai Dist. - 609 301.Phone: 97157 69995. ● Typesetting : Ajay computers, Annamalai Nagar, Chidambaram ● Wrapper design : Kavingar AnandhaKumar, Kandamangalam ● Printed at Mayuraa Offset Printers, Coimbatore - 641 009.

**Price Rs. 100**

என்னுள் குருவாக இருந்து வழிநடத்திய
பேராசிரியர் **அகத்தியலிங்கனார்**
அவர்களுக்கும்

வழி நடத்தும்
பேராசிரியர் **என். இராஜசேகரன் நாயர்**
அவர்களுக்கும்

இந்நூலைக்
காணிக்கையாக்குகிறேன்

Prof. Dr. G.Thiruvasagam
Vice - Chancellor

BHARATHIAR
UNIVERSITY
State University
Coimbatore - 641 046
South India



நாள் : 10.07.2009

# அணிந்துரை

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"

என்று கூறிய மகாகவி அதே மூச்சில் தமிழ் மொழியை மேலும் வளப்படுத்தும் நோக்கில்

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

இறவாப்புகழுடைய புதுநூல்களைத் தமிழ்மொழியில் இயற்றிட வேண்டும். உலகில் அதற்கேற்ற விதத்தில் தமிழ்மொழியின் சொல்வளத்தையும் தொடரமைப்பு வளத்தையும் மேம்படுத்த வேண்டியது இன்றியமையாத செயல்களில் ஒன்றாகும். சொல்வளத்தை மேம்படுத்தும் பணியைப் பல நிலைகளில் நாம் மேற்கொள்ளலாம். புதுச்சொற்களை தமிழ்மொழியின் ஒலியமைப்புக்கும் இலக்கண அமைப்புக்கும் ஏற்ற விதத்தில் ஆக்கிடுதல். நாடு முழுவதும் பேசப்பட்டு வரும் தமிழ்மொழியின் வட்டார, சமுதாயக் கிளைமொழிகளை ஆராய்ந்து அவற்றில் பயன்படுத்தப்பட்டு வரும் சொற்களை அவ்வாறோ அல்லது தக்க முறையில் பொருள் விரிவாக்கம் செய்தோ பயன்படுத்துதல், அயல்மொழிச் சொற்களை நம் மொழியின் இலக்கண அமைப்பிற்கு ஏற்ற விதத்தில் மாற்றியமைத்து அல்லது அவ்வாறே பயன்படுத்துதல் போன்ற பல்வேறு விதிமுறைகளைச் சொல்லாக்க உத்திகளாக மொழித்திட்டமிடுதலில் விளக்கிடுவர் அறிஞர் பெருமக்கள்.

அந்தக் கண்ணோட்டத்தில் இளைஞர் முனைவர் சா. சுந்தரபாலு அவர்கள் தொழிற்கருவிகள் ஒரு மொழியியல் நோக்கு என்னும் தனது முதல் முயற்சி நூலில் தமிழ்நாட்டில் வழக்கிலுள்ள - குறிப்பாகப் பழந்தொழில்களில் ஒன்றான விவசாயத் தொழில் செய்வோரின் வழக்கிலுள்ள விவசாயக் கருவிகள் தொடர்பான சொற்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இம்முயற்சியின் மூலம் தமிழ்மொழியின் பல்வேறு கிளைமொழிகளில் வழக்கிலுள்ள தொழில்சார் சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளதோடு எவ்வெச் சொற்கள் எவ்வெவ் மாற்றங்களுக்கு ஆளாகியிருக்கின்றன என்பதை மொழியியல் கொள்கைகளின் அடிப்படையில் ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். தமிழ்மொழியின் சொல்வளத்தைப் பெருக்கும் முயற்சிகளில் ஒன்றாக இதனைக் கருதலாம்.

இவ்விளைஞரின் முதல் முயற்சி வெற்றியடைய இவர் மேலும் பல ஆய்வு நூல்களையும், கட்டுரைகளையும் வெளியிடவும் வாழ்த்துகிறேன்.

(க. திருவாசகம்)

Ph (O) : 091-422-2422439, (R) : 091-422-2422500, Fax : 091-422-2422387,
E-mail : vc@b-u.ac.in, website :www.b-u.ac.in

Dr. N. RAJASEKHARAN NAIR, Ph.D.
PROFESSOR, C.A.S. IN LINGUISTICS
DEPUTY CO-ORDINATOR, UGC-SAP
ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR - 608 002
TAMILNADU

245, III SOUTH CROSS ROAD
MARIYAPPANAGAR
ANNAMALAINAGAR - 608 002
✆ : 04144 - 238247 (R)
: 04144 - 237331 (O)
E-mail : rajasekharan245@yahoo.co.in

# FOREWORD

**Occupation implements: A Linguistic Study** authored by **Dr. S. SUNDARABALU** contains ten scholarly articles. He worked as Project Fellow in the UGC Major Research Project entitled, "A Study of Dialect Variation in Tamil Agricultural Vocabulary" which was carried out at CAS in Linguistics, Annamalai University for three years in which I was the Principal Investigator. During that period he collected primary data belonging to agriculture from various parts of Tamil Nadu. Based on this he has published a few research papers. The materials included in this volume contain orginal data with analysis. He has highlighted the importance of the vocabulary items in all the articles especially in manvetti and uḻavaaram.

The explanation given in each article gives new ideas and knowledge to the readers. This volume will be a welcome addition to the areas of dialectology and lexicography.

I congratulate the author for bringing out this volume in a creditable manner.

Rajasekharan

**(N. Rajasekharan Nair)**

# என்னுரை

நூல் என்பது மரத்தின் கோணலை அகற்றப் பயன்படுவது போன்று அகத்தின் கோணலை அகற்றப் பயன்படவேண்டும். ஒரு நூல் அனைவரையும் திருப்திப்படுத்துமா என்பது காலத்தின் போக்கையும், சுவைஞனின் அணுகுமுறையையும் பொருத்தது. இந்நூலும் அப்படித்தான். யாருக்காவது, எங்கேயாவது, தேடிக்கொண்டிருக்கும் ஒருவருக்குப் பயன்பட்டால் என் எழுதுகோலின் வெற்றி அங்கே இருக்கும். இன்றே பயன்படுமா ஐம்பது ஆண்டுகள் கழித்துப் பயன்படுமா என்பது மொழித்தாய் என்னை ஏற்றுக்கொள்ளும் கால நிர்ணயத்தைப் பொறுத்தது.

நூல்கள் எழுதும்போது களப்பணியில் சென்று கண்டதையும், கேட்டதையும் எழுதுவது அல்லது சுயமாகச் சிந்தித்துக் கற்பனையில் விரிந்ததைப்படைப்பது அல்லது ஏற்கனவே வெளியிட்டதை வைத்து யார், யார் என்ன கூறியிருக்கிறார்கள், நான் என்ன கூறுகிறேன் என்பதை எழுதுவது. இந்த அமைப்பில் இந்நூல் மூன்றையும் உள்ளடக்கியது. நான் இந்நூலின் கருக்காக எத்தனை அளவில் என்னை அர்ப்பணித்து உழைத்தேன் என்பது என் மனதிற்கும், இறைமனதிற்கும் மட்டுமே தெரிந்த விஷயம். இந்நூலின் எல்லாத் தரவுகளும் உங்களிடமிருந்து எடுத்ததுதான். நீங்கள் யோசித்து எழுதாமல் இருக்கிறீர்கள். சிலபேர் எழுதி வெளியிடாமல் இருக்கிறார்கள். நான் இரண்டு வேலையையும் செய்துவிட்டேன். இந்நூல் மேலைநாட்டார் விதிமுறையைக் கொண்டு விளக்காமல், இருப்பதைப் பதிவு செய்ய முற்பட்டிருக்கிறது. முதல் குழந்தையைச் சுமப்பவளுக்கு ஆர்வம் மிகுதியும், அனுபவம் குறைவாகவும் தான் இருக்கும். இரண்டாவது குழந்தைக்கு அது நிவர்த்தி செய்யப்படும்.

மொழியியல் கருத்துகளை என்னுள் விதைத்த பேராசிரியர் மொழிஞானி செ.வை. சண்முகனார் அவர்கள் என்னிடம் அடிக்கடி கூறுவார்கள். பெரிய தலைப்பை வைத்து சிந்திக்கும்போது மனச்சோர்வு தான் ஏற்படும். சிறிய தலைப்பில் ஆழமாகச் சிந்திக்கும்போது மனம் விரிவடையும் என்று, அது போலத்தான் இந்நூலும் என் மனதை விரிவடையச் செய்தது.

இந்நூலில் உள்ள பல கட்டுரைகள் அனைத்தும் முன்பே பல கருத்தரங்க மலரில் வெளிவந்துள்ளன. அக்கட்டுரைக்காக ஒவ்வொரு முறையும் நேரடிக் களப்பணியில் சென்று, கேட்டு, சில நேரங்களில் அக்கருவியை விலைகொடுத்து வாங்கியும் அதைப்பற்றி எழுத நேரிட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உழவாரக் கட்டுரை வாசிக்கும் போது அக்கருவியையே நேராகப் பார்வையாளருக்குக் காட்ட நேரிட்டது. அதுபோன்று தரவுகளைப் பதிவு செய்வதற்கும் உழைப்பதற்கும் மனம் சோர்வடையாதவன்.

இந்நூல் ஒரு சிறிய கருவைத் தாங்கிக் கொண்டு பத்துத் தலைப்புகளில் பயணம் செய்கிறது. ஆங்காங்கே வட்டார வழக்குச் சொற்கள் பொதுமொழியிலிருந்து விலகி எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் என் பகுதி வழக்குச் சொற்களும் மிகுந்திருக்கலாம். கருவிகளை வைத்து விளக்கம் கொடுக்கும்போது அவசியம் படம் தேவைப்படுகிறது. அதற்காக ஏற்புடைய இடங்களில் படமும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் முதன்மைக் கரு பேராசிரியர் என். இராஜசேகரன் நாயர் அவர்கள் முதன்மை ஆய்வாளராகவும், இணைப்பேராசிரியர் எஸ். இராஜா அவர்கள் துணை ஆய்வாளராகவும் கொண்டு, பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடன் நடந்த தமிழக வட்டாரவழக்கு வேளாண் கலைச்சொல் ஓர் ஆய்வு என்ற முதன்மைத் திட்டத்தில் தரவு சேகரிப்பாளராக மூன்று ஆண்டுகள் பணியாற்றியபொழுது தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் நேரடியாகப் பார்த்து ஆய்வுசெய்ய நேரிட்டது. அப்போது ஏற்பட்ட அனுபவமே இப்புத்தகத்தின் அடிக்கோள். இப்பணியில் பணியாற்ற வாய்ப்பளித்த அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறைக்கும், பல்கலைக்கழக மானியக்குழுவிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலுக்குச் சிறந்ததொரு அணிந்துரை வழங்கிச் சிறப்பு சேர்த்த பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் மாண்பமை முனைவர் க. திருவாசகம் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மற்றும் பல ஆலோசனைகள் வழங்கிய பாரதியார் பல்கலைக் கழக மொழியியல் துறை இயக்குனர் முனைவர் சி. சிவசண்முகம்,

பாரதியார் பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர், பேராசிரியர் இராம. பழனிவேல் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். பிழைத்திருத்தம் செய்து, ஆலோசனை வழங்கிய பேராசிரியர் த. பரசுராமன் (புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி) அவர்களுக்கு நன்றி.

இன்னும் தமிழகத்தில் வட்டார வழக்கு ஆய்வுகளும், வட்டார வழக்குச் சார்ந்த மொழியியல் ஆய்வுகளும் முழுமைபெறாத, அச்சார்பு ஆய்வாளர்களின் கண்ணில் படாத எத்தனையோ களங்கள் நிறைய உள்ளன. நாம் சங்க இலக்கியங்களையே ஆய்வு செய்தால் வருங்கால சங்க இலக்கியங்களை யார் உருவாக்குவது, பதிவு செய்வது, நாம் தான் செய்தாக வேண்டும். என்னைத் தனிமைப்படுத்தி எழுத்தாளனாக, சமுதாயப் பொறுப்பு உள்ளவனாக மாற்றிய என் மாமாகுடி மண்ணிற்கும், தரமான சுந்தரபாலுவை ஈன்று புறந்தந்த தந்தை கோ. சாமிக்கண்ணு, தாய் பவுணம்மாள், என்னுள் உயிரில் புகுந்து என்னை இயக்கும் துணைவி மா. மல்லிகா, எனது வளர்ச்சிக்காக உழைத்த ஆசிரியப்பெருமக்கள், நண்பர்கள், தமிழக விவசாயிகள் அனைவருக்கும் நன்றி. இப்புத்தகப் பணிக்கு பல்வேறு வகைகளில் இருந்து உதவி செய்த கணிப்பொறி உதவியாளர் திரு.த.ஆனந்தகுமார், நேர்த்தியாக அச்சிட்ட கோவை மயூரா அச்சகத்தார் ஆகியோருக்கும் நன்றி.

1–7–2009

மாமாகுடி

சா. சுந்தரபாலு

# சுருக்கக்குறியீடு

| | | |
|---|---|---|
| தூத். | – | தூத்துக்குடி |
| மது. | – | மதுரை |
| திரு. | – | திருவாரூர் |
| நாக. | – | நாகப்பட்டிணம் |
| பெ. | – | பெரம்பலூர் |
| தரு. | – | தருமபுரி |
| ராம. | – | ராமநாதபுரம் |
| வே. | – | வேலூர் |
| தஞ். | – | தஞ்சாவூர் |
| நாம. | – | நாமக்கல் |
| கட. | – | கடலூர் |
| கோ. | – | கோவை |
| கன். | – | கன்யாகுமரி |
| சிவ. | – | சிவகங்கை |
| தூத்.–ஜமீன் | – | தூத்துக்குடி, ஜமீன்கோடாங்கிப்பட்டி |
| தூத்.–வர | – | தூத்துக்குடி – வரதராஜபுரம் |

# பொருளடக்கம்


1. விவசாயக் கருவிகள் 13

2. வேட்டைக் கருவிகள் 45

3. மண்வெட்டி 59

4. கழி 66

5. உழவாரம் 84

6. அளவைகள் 91

7. விவசாயக் கலைச்சொற்களில் மனித உடல் உறுப்புச் சொற்கள் 106

8. கருவிகளின் தொழில் நுட்ப வளர்ச்சியும் மொழிப் பாதிப்பும் 117

9. தரகுத் தொழிலும் - மதிப்பீட்டு எண்களும் 132

10. கருவிகளின் அகராதி அமைப்பு 130

# 1. விவசாய கருவிகள்

வேளாண் தொழிலில் வழங்கப்படும் கலைச்சொற்களை ஆய்வு செய்வதும், அதன் வட்டார வழக்கு வேறுபாட்டுச் சொற்களைப் பதிவு செய்வதும், அதனை அகராதி வடிவில் அமைப்பதும் தற்போது நிகழ்ந்து வருகின்ற ஓர் ஆய்வு. தொழில் புரட்சியின் காரணமாக இவ்வேளாண் தொழில் படிப்படியாக குறைந்தும், புதிய தொழில்நுட்பக் கருவிகள் பெருக்கத்தால் வேளாண் கருவிகளின் பயன்பாடு குறைந்தும், அவை மறைந்தும் வருகின்றன. தமிழர்களின் முக்கியத் தொழிலான வேளாண்மையின் கருக்களையும், கருவிகளையும் பதிவு செய்வதும், பாதுகாப்பதும் அதனை அகராதி வடிவாக அமைப்பதும் தமிழர்களின் தலையாயப் பணி. இக்கட்டுரையில் சில கருத்துக்களை ஆய்வு செய்தும், சில கருக்களை பதிவு செய்யவும் முயற்சி செய்யப்பட்டுள்ளது. தற்போது நடை பெற்றுவரும் இத்தொடர்பான ஆய்வுகளில் வட்டாரவழக்குச் சொற்களைப் பதிவுசெய்து வருகின்றனர். இக்கட்டுரை அடுத்த முயற்சியாக சென்று வார்த்தையில் வட்டார வழக்கு வேறுபாடு இருப்பது போன்று அதன் கருவி வடிவத்திலும் வேறுபாடு இருப்பதைப் பதிவு செய்தும் அதனை வட்டாரத்திற்கு வட்டாரம் ஒப்பிட்டும் அதன் வடிவமாற்றத்தை எந்த விதிமுறைகளில் அடக்கலாம், அடங்கும்; அகராதியில் அச்சொற்களை அமைப்பது போன்று அக்கருவிகளின் வடிவவேறுபாட்டையும், வடிவமாற்றத்தையும் அகராதியில் எப்படி அமைக்கலாம் என்பது போன்ற கருத்துக்களையும் இக்கட்டுரை விளக்கும்.

### தமிழகத்தில் செய்யப்படும் பயிர் வகைகள் மற்றும் நில அமைப்பு

தமிழகத்தில் பெரும்பான்மையாக விவசாயத் தொழில் நடைபெற்று வருகின்றது. இம்மாநிலத்தில் மொத்தம் 31 மாவட்டங்கள் உள்ளன. இந்த 31 மாவட்டங்களிலும் பல்வேறு மண் அமைப்புகள் இருந்தாலும் அத்தனையிலும் உள்ளடக்கிய பயிர் வகைகளை, நிலப்பிரிவுகள் வைத்து வகைப்படுத்தலாம்.

**நன்செய்** (wet land). கரும்பு, வாழை, வெற்றிலை, நெல் போன்றவை பயிரிடப்படும் நிலம்.

**புன் செய்** (Dry land). தானியப்பயிர்கள், பருத்தி, நிலக்கடலை, போன்றவை பயிர்செய்யப்படும் நிலம்

**தோட்டம்** (Garden land). இஞ்சி, மஞ்சள், கிழங்குவகைப்பயிர்கள் காய்கறி, காபி, தேயிலை, மிளகு போன்றவை பயிர்செய்யப்படும் நிலம்

இந்த மூன்று வகையான நிலங்களிலும் மேற்குறிப்பிட்டவை அல்லாமல் மேலும் பல பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

## நில அமைப்பு

தமிழக நில வகைகளை விவசாயத்துறை பயிரின் தன்மையை வைத்து மூன்று வகையாகப் பிரித்திருக்கிறது. அவை:

| | | |
|---|---|---|
| நன்செய் நிலம் | – | wet land |
| புன்செய் நிலம் | – | Dry land |
| தோட்டம் | – | Garden land |

இவ்வகையான பகுப்பு முறை அவர்களின் ஆய்வுக்குப் பொருத்த முள்ளதாக அமைகின்றது. ஆனால் விவசாயக் கருவிகளின் செயல்பாடுகளை வைத்துப் பொதுமைப்படுத்தும்போது சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள நிலங்களைப் பற்றி அகராதி விளக்கத்தில் பார்க்கின்ற போது இவ்வாறு கிடைக்கின்றன.

**நன்செய்** பெ. (ஆறு, ஏரி முதலியவற்றின் மூலம்) பாசனவசதி பெற்று நெல் பயிரிடப்படும் நிலம் (wet land), புன்செய் பெ. மழையால் கிடைக்கும் நீரைக் கொண்டு சாகுபடி செய்யப்படும் நிலம், Dry land.

**புன்செய் பயிர்** பெ. (நெல் அல்லாத) கம்பு, சோளம் போன்ற புன்செய் நிலப் பயிர் Dry crop such as millet, maize etc...

**தோட்டப்பயிர்** பெ. மேட்டுப்பாங்கான நிலத்தில் நீர் பாய்ச்சி விளை விக்கும் பயிர் Garden land crop

**தோட்டக்கலை** பெ. (1) பூ, காய், பழம் ஆகியவற்றைத் தரும் செடிகளையும், மரங்களையும் வளர்த்துப் பராமரிக்கும் முறை. gardening, (2) மேற்கூறிய முறைபற்றியப்படிப்பு harticulture,

**தோட்டக்கால்** பெ. புன்செய் பகுதியில் கிணற்றுப்பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படும் நிலம் garden land.

**தோட்டம்** பெ. 1. மலர்ச் செடிகள் அல்லது (சிறிய அளவில்) காய்கறிச் செடிகள் பயிரிடப்படும் இடம். garden (Adjacent to a house) தோட்டத்தோடு கூடிய வீடு விலைக்கு வருகிறது. (2) (காய்கறிச் செடிகள், கரும்பு, வாழை முதலியவை) பெருமளவில் பயிரிடப்படும் இடம் plantation, estate, காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம், வாழைத் தோட்டம், (க்ரியா அகராதி).

இவ்வாறு நன்செய், புன்செய், தோட்டம் போன்ற நிலப் பயிர்களுக்கு க்ரியா அகராதி விளக்கம் அளிக்கின்றது. எனவே,

**(i) Dry land -** புன்செய் நிலம்

Garden land - புன்செய் பகுதியில் கிணற்று நீர் மூலம் சாகுபடி செய்யக் கூடிய நிலம்.

**(ii) Wet land -** என்பது முழுவதும் சேற்றுத் தன்மை கொண்டதாக இருக்கும்.

புன்செய் (dry land) – புழுதித் தன்மைக் கொண்டதாக இருக்கும்.

தோட்டம் (Garden land) – புழுதியும் இருக்கும், சேற்றுத் தன்மையும் இருக்கும்.

நன்செய் (wet land) – கோடைக் காலங்களில் அந்நிலத்தை புழுதி நிலமாக மாற்றி சாகுபடி செய்வதும் உண்டு. எனவே,

| | | |
|---|---|---|
| நன்செய் (wet land) | – | புழுதித் தன்மை<br>சேற்றுத் தன்மை |
| தோட்டம் (garden land) | – | புழுதித் தன்மை<br>சேற்றுத் தன்மை |
| புன்செய் (dry land) | – | புழுதித் தன்மை |

இந்த வகையான மண் தன்மைகளை விவசாயக் கருவிகள் கொண்டு பொதுமைப் படுத்துவதற்காகப் பயிரின்தன்மைகளை வைத்துப் பிரிக்காமல் மண் தன்மை வைத்தே பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் கூறப்படும்,

நன்செய் (wet land) – என்பது சேற்றுத் தன்மையைக் குறிக்கும்.

புன்செய் (Dry land) – என்பது புழுதித் தன்மையைக் குறிக்கும்.

1. எந்த நிலம், பயிராக இருந்தாலும், சேற்றுத் தன்மையாக இருக்கின்ற போது பயன்படும் கருவிகள் 2. சேற்றுத் தன்மை இல்லாமல் புழுதித் தன்மையாக இருக்கும்போது பயன்படும் கருவிகள் என்று இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது.

## கலைச்சொல் என்பது

**கலைச் சொல்** பெ. ஒவ்வொரு துறையிலும் வழங்கும் கோட்பாட்டுக்கான சொல். (பொதுவான பொருளில் வழங்காத) துறைச் சிறப்புச் சொல், technical term. word used in special fields என்று க்ரியா அகராதி விளக்கம் அளித்துள்ளது. கலைச்சொல் என்பது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட பொருளைத் தருவதாக ஒரு குழுவால் பேசப்படும் சொல்.

இவ்வாறு பயன்படும் சொல்லைக் கலைச்சொல் என்கிறோம். உதாரணமாக, வேளாண் தொழிலில் பயன்படும் சொற்களை எடுத்துக் கொண்டால் விவசாயத்தில் 'ஏர்க்கலப்பை உழும் போது கலப்பை சாய்ந்து விடாமல் இருக்க கைப்பிடித்திருக்கும் பகுதியை 'மோழி' என்று அழைக்கின்றனர்.

இச்சொல்லை மற்ற எந்த இடத்திலும் பயன்படுத்துவதைப் பார்க்க முடியாது. மற்ற இடங்களில் கைப்பிடித்திருக்கும் பகுதியை கைப்பிடி என்றே அழைக்கின்றனர். ஆனால் விவசாயத் தொழிலுக்கு சென்றவுடன் அவ்விடத்தை மோழி என்ற சொல்லால் வழங்குகின்றனர். இதனால் இதனை வேளாண் துறை சார்ந்த கலைச் சொல் என்றே கூறலாம்.

## தொழில் கலைச் சொற்கள்

தொழிற் கலைச்சொற்கள் ஒவ்வொரு தொழிலிலும் பயன்படுத்துகின்ற சிறப்புச் சொல். தச்சுத் தொழில், மண்பானைத் தொழில், பொற்கொல்லர் தொழில், செங்கல் சூளைத் தொழில் போன்ற பழைய, புதிய துறைகளான கணிப்பொறித்துறை போன்ற ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு விதமான கலைச் சொற்களை பயன்படுத்துகின்றனர்.

பொதுவாக ஒரு மொழியைப் பேசும்போது இவ்வகையான கலைச் சொற்களைத் தவிர்த்தும், இத்துறை சம்பந்தப்பட்ட சூழல் வரும் போது இக்கலைச் சொற்கள் தொடர்பில்லாத ஒருவருக்கு புரியாதபோது பொருள் புரிவதில் தடுமாற்றமும், மொழித்தொடர்பின்மையும் ஏற்படுகின்றது. புதிய தொழில் உற்பத்தி பெருகுவதால் மொழிக்கு புதிய சொற்கள் கிடைக்கின்றன. புதிய கருவியும், சொல்லாக்கமும் பிறக்கின்ற போது அக்கருவி அனைத்து இடங்களிலும் ஒரே வடிவமாக இருந்தாலும் மக்கள் அதன் சொற்களை உள்வாங்கி திரும்ப கூறுகின்றபோது அவர்களுக்கு இருக்கின்ற மொழி சூழல் தன்மைப் பொறுத்தே வெளிப்படுத்துகின்றனர்.

உதாரணமாக

பவர் டில்லர் – சேறு அடிக்கும் சிறிய இயந்திரம்.





இவ்வண்டியை ஓரிடத்தில் 'டில்லர்' வண்டி என்றும் ஓரிடத்தில் 'கைட்ராக்டர்' என்றும், ஓரிடத்தில் 'கைவண்டி' என்றும், ஓரிடத்தில் சின்ன 'வண்டி' என்றும் வழங்குகின்றனர். அதே போன்று செங்கல் சூளையில் பத்து எண்ணிக்கைக் கொண்ட கல்லின் தொகுப்பை (செங்கல் சூளையில்) 'கட்டாயம்' என்றும், நாற்றுமுடி பத்து சேர்ந்த எண்ணிக்கையை 'மூட்டு' 'குப்ப' என்றும் அழைக்கின்றனர். பவர் டில்லர் எல்லா இடங்களிலும் ஒரே வடிவமாக இருந்தாலும் அதற்காகத் தனி ஒரு பெயர் வைத்து அறிமுகம் செய்தாலும் மக்கள் அவர்கள் சூழலுக்குத் தக்கவாறே அதன் பெயரை உள்வாங்கி மாற்றி உச்சரிக்கின்றனர்.

அதே போன்று பத்து என்ற எண்ணிக்கை எல்லா இடங்களில் இருந்தாலும் அதனை விடுத்து, அந்தத் தொழிலின் சூழலுக்குத் தக்கவாறு வெளிப்படுத்துகின்றனர். எனவே தொழில் கலைச்சொற்களை அந்தந்த சூழலுக்குத் தக்கவாறு பயன்படுத்துகின்றனர். மேலும் ஒரு சொல்லை ஒவ்வொரு துறை சேர்ந்தவர்கள் எடுத்து கையாளும் போது வேறு வேறு பொருளைக் கொடுக்கின்றது.

'மாலை' என்ற சொல் பொது மொழியில் மாலை (Evening), அணிந்து கொள்ளும் மாலை என்று இரு வகையில் இருந்தாலும் விவசாயத்தில் கலைச் சொற்களாக மாறி வரும் போது

மாலை (பெ.) கோடைக்காலங்களில் வயலை ஆழப்படுத்துவதற் காகவும், மண்ணை இடம் மாற்றம் செய்வதற்காகவும், நீண்டவரிசையில் பெரிய பெரிய கட்டிகளைப் பெயர்த்து அடுக்கி வைத்த தொகுப்பு. (மாலைஎடு–வி.)

என்ற பொருளையும்,

செங்கல் சூளையில்

மாலை பெ. களத்தில் அறுத்து வைத்த கல்லைப் பெயர்த்து ஒன்றன் மீது ஒன்றாக (சன்னல் போன்று) காய்வதற்காக அடுக்கி வைத்த தொகுப்பு. (மாலை வை – வி.) என்ற பொருளிலும் கையாளுகின்றனர். எனவே பொது மொழியில் ஒரு சொல் ஒரு பொருளைத் தந்தாலும் துறை சார்ந்த சொல்லாகப் பயன்படும் போது வேறு, வேறு கலைச் சொல்லாக மாறியும் பொருள் தருகின்றது.

(i) ஒவ்வொரு துறைக்கென்றும் வெவ்வேறு சொற்கள் இருக்கின்றன.

எ.கா. பொனையல் – பத்து எண்ணிக்கை கொண்ட நாற்று முடியின் தொகுப்பு (விவசாயம்)

கட்டாயம் – பத்து எண்ணிக்கைக் கொண்ட சுடாத பச்சைக் கல்லின் தொகுப்பு (செங்கல் சூளைத் தொழில்)

(ii) பொது மொழியில் ஒரு பொருளையும், அதே சொல் துறையைச் சார்ந்த இடத்தில் வேறு பொருளையும் தருகின்றன.

மாலை (பெ.) 1. கட்டிய பூக்களின் தொகுப்பு. 2. மண் கட்டியைப் பெயர்த்து நீண்ட வரிசையில் அடுக்கிய தொகுப்பு. 3. மாலைப் பொழுது. 4. செங்கல் சூளையில் பச்சைக் கல்லை காய வைக்க அடுக்கி வைத்த தொகுப்பு.

எனவே, சொற்கள், பொது மொழியில் ஒரு பொருளையும் துறை சார்ந்த இடத்தில் வேறொரு பொருளையும் கொடுக்கின்றன.

## விவசாயக் கருவிகளும், வட்டார வழக்குச் சொல்லும்

வட்டார மொழி என்பது பொது மொழியிலிருந்து ஒலிப்பு முறையாலும், சொற்களாலும், இலக்கண அமைப்பாலும் சற்றே வேறுபாடு உடையதும் நாட்டில் குறிப்பிட்ட நிலப் பகுதியைச் சார்ந்தவர்களால் மட்டும் பேசப்படுவதுமான மொழிவகை. [Language variety (spoken by the people of a region, of a country or by a class of its people) dialect, local usage, register (criya)].

| | | பொருள் |
|---|---|---|
| (i) | நாத்த– வெளம்பு (திருச்.) | நாற்று முடியை நடவு நடும் |
| | நாத்த– விசுறு (நாக.) | வயலில் பரவலாக விழுமாறு |
| | நாத்த– வெளாம்பு (மது.) | தூக்கி வீசிப்போடுதல். |
| (ii) | நாத்த – புடுங்கு (திரு.) | வயலில் நடும் பொருட்டு |
| | நாத்த– அடி (பெ.) | நாற்றை வேர் அறுபடாமல் |
| | நாத்த– பறி (தரு.) | பறித்தல் |
| | நாத்த– அரி (இராம.) | |

இவ்வாறு வட்டாரத்திற்கு வட்டாரம் ஒரே செயலுக்குக் கூறப்படும் சொற்களின் ஒலிப்பு முறை மாறுபடுவது போன்று வட்டாரத்திற்கு வட்டாரம் கருவிகளிலும், வடிவத்திலும் மாறுபாடு உள்ளது.


கருக்கருவா (இராம)


பன்னருவா (தூத்.)


அறப்பருவா (நாக.)



களக்குச்சி (தூத்.)



களக்கொட்டு (நாக.)



களக்கட்டு (வேலு.)

## சொற்கள் அமைப்பு

விவசாயக் கலைச் சொற்களின் சொல்லமைப்புத் தன்மைகளை விளக்கி அதன் பின் சொல்/ கருவிகளின் வட்டாரத் தன்மைகளை விளக்கலாம்.

## ஒருசொல் பல பொருள்

இவ்விவசாயக் கலைச்சொற்களில் மிகுதியாக ஒரு சொல் பல பொருள் சொற்கள் அமைந்திருக்கின்றன.

உதாரணமாக

(i) 1. மாலை: கோடைக் காலங்களில் வயலை ஆழப்படுத்துவற்காகவும், மண்ணின் தன்மையை மாற்றுவதற்காகவும் நீளமான வாக்கில் மண் கட்டிகளைப் பெயர்த்து எடுத்து வரிசையாக அடுக்கி வைத்தல்.

2. (செங்கல் சூளையில்) அறுத்து விட்ட பச்சைக்கல்லை காய வைக்கும் பொருட்டு சுத்தம் செய்து ஒன்றன் மீது ஒன்றாக (சன்னல் போன்று) வரிசையாக அடுக்கி வைத்தல்.

(ii) கலப்புக் கதிர் (பெ).

1. சாகுபடி செய்த பயிரில் ரகம் மாறிவரும் நெற்கதிர்.

2. நெற்பயிரில் (அனைத்துப் பயிரிலிருந்து) கதிர்வராமல் அங்கொன்றும், இங்கொன்றும் வரும் நெற்கதிர்.

(iii) சால் (பெ).

1. நிலத்தில் ஏர் உழும் போது குறிப்பிட்ட அளவு நீள்வட்ட வடிவில் பிரித்துக் கொள்ளும் சிறு பிரிப்பு

2. ஏர் உழும் போது நிலத்தில் கொழு கிழிக்கும் நீண்ட பள்ளம்.

(iv) தாளடி (பெ).

1. அறுத்து விடப்பட்ட வயல்

2. ஒரு விவசாயக் காலம்

**(v)** பட்ரபோடு (வி).

1. ஆறடி உயரத்திற்கு மேலாக உள்ள கருங்கல் தூணை நட்டு அதன் மேற்பரப்பில் பரண் அமைத்து தானிய மூட்டைகளை அடுக்கி அதன் மேல் வைக்கோல் போர் போட்டு (தானியங்களை) பாதுகாக்க அமைத்தல்.
2. போர் போன்றவை போடும் போது அடிப்பகுதியில் நீர், கரையான் போன்றவற்றால் பாதிப்பு ஏற்படாதவாறு மரம், கருங்கற்களால் தடுப்பு போடுதல்.
3. தானியங்களை ஓரிடத்தில் குவியலாக ஒன்று சேர்த்தல்.

## ஒரு பொருள் குறித்த பல சொல்

இவ்விவசாயக் கல்லைச்சொற்களில் மிகுதியாக ஒரு பொருள் குறித்த பல சொல் வருகின்றன. இத்தொழில் சொற்களில் மிகுதியாக வட்டார வழக்குச் சொற்கள் இருப்பதால் ஒரே செயல்பாடு ஒரே பொருளுக்கு (object) பல வகையான தனிச்சொற்களும், ஒலி மாற்றம் பெற்ற சொற்களும் வருகின்றன.

உதாரணமாக

1. ஏரு கட்டு, ஏரு பூட்டு; நிலத்தை உழுவதற்காக கலப்பையில் மாட்டினை பூட்டுதல்.
2. கட்ட வண்டி, பார வண்டி – முழுவதும் மரத்தால் செய்து சுமை ஏற்றி மாடு இழுக்கக் கூடிய நாட்டு வண்டி.
3. பொனையல், கலசம் – பத்து நாற்று முடி கொண்ட தொகுப்பு.
4. கருக்கருவா, அறப்பவருவா – நெற்பயிரை அறுவடை செய்வதற்காக பயன்படும் உள்பகுதியில் கருக்கை உடைய அருவா. இவ்வாறு ஒரு பொருள் குறித்த பலசொற்கள் மிகுதியாக வழக்கில் உள்ளன.

## பல பொருள் குறித்த ஒரு சொல்

விவசாயக் கலைச்சொற்களில் பல பொருள் குறித்த ஒரு சொல் மிகுதியாக உள்ளன. அவை உதாரணத்துடன் கீழே வருமாறு:

உதாரணம்:

1. **(i)** ஏரி : பாத்தி பிரிக்கும் போது பாத்திக்கு கரையாக ஏற்படுத்தப் பட்டிற்கும் மண் முட்டு/ வரப்பு.
   **(ii)** ஏரி, நீர் நிலை
2. **(i)** ஒர –60 மரக்கால் தானிய அளவை சேர்ந்த தொகுப்பு.

(ii) ஒர – பல அடுக்குகளாகச் சேர்த்துக் கோர்க்கப்பட்ட தானியக் குதிரில் உள்ள ஒரு அடுக்கு (தஞ்)

(iii) ஒர – சுடு மண்ணில் செய்த தானியம் சேமிக்கும் கொள்கலன் (தரு)

(iv) ஒர – 60 ஜோடி தேங்காய் (அ) 120 தேங்காய் கொண்ட தொகுப்பு (தஞ்)

3. (i) ஒரலு – நெல் குத்தும் போது தானியங்கள் சிதறாமல் இருப்பதற்காக உரலின் மேல் வைக்கப்படும் (கொடியில் பின்னப்பட்ட) கவசம். (வே.)

(ii) ஒரலு – வாழை மரத்தின் வேர் பகுதியில் இருக்கும் தடித்த கிழங்கு.

4. (i) கட்டு – பெ. 100/150 நாற்று முடிக்கொண்ட தொகுப்பு.

(ii) கட்டு – வி. பொருளைத் தொகுத்து கயிற்றால் இறுக்குதல்.

(iii) கட்டு – வி. நீர் செல்லும் வழியை கரை அமைத்துத் தடுத்தல்.

(iv) கட்டு – வி. ஏரில் மாட்டைப் பூட்டுதல்.

5. (i) கம்பு – உணவாகப் பயன்படும் தானியம்

(ii) கம்பு – பெ. மூங்கில் குச்சி.

விவசாயக் கலைச்சொற்கள் மிகுதியாக கூட்டு சொற்களின் தன்மையைக் கொண்டுள்ளன.

உதாரணம்

மண்வெட்டி: அரகொட்டு, முழுகொட்டு, கோடிமண்வெட்டி

கலப்பை: மரக்கலப்பை, போஸ்ட்டு கலப்பை, முள்ளுக் கலப்பை, ஒன்பது கலப்பை, பல்லுனி கலப்பை.

## தனிச்சொற்கள்

விவசாயக் கலைச்சொற்களில் தனிச்சொற்களும் உள்ளன.

உதாரணம்

| வார்த்தை | | பொருள் |
|---|---|---|
| சால் | – | கலப்பையால் உழுத பள்ளம் |
| ஏர் | – | உழுவதற்குத் தயார்படுத்தி மாடு பூட்டிய கலப்பை |
| கொழு | – | கலப்பையில் நிலத்தை உழக் கூடிய கொழு |
| கூட | – | மூங்கில் குச்சிகளால் பின்னப்பட்ட கூடை |

சேர் – நீர்விட்டுப் பண்படுத்திய மண்.

போன்ற தனித்த வார்த்தைகளும் மிகுதியாக உள்ளன.

## கூட்டுச்சொல்

விவசாயக் கலைச்சொற்களில் தனித்து இருப்பது போல் கூட்டுச் சொற்களும் மிகுதியாக உள்ளன.

உதாரணம்

| வார்த்தை | | பொருள் |
|---|---|---|
| சேறு உழு | – | நீர் வைத்த நிலத்தில் ஏர் பூட்டி உழுது சேராக்குதல். |
| சாலு புடி | – | கலப்பையால் நீளமான வாக்கில் உழுது பள்ளம் ஏற்படுத்துதல். |
| குழிபோடு | – | பள்ளம் தோண்டுதல். |
| கள கொல்லி | – | களைகளை அழிப்பதற்காகப் பயன்படும் ரசாயன மருந்து |
| களத்து மேடு | – | தானியத்தைத் தூற்றி சுத்தம் செய்யும் மேட்டுப் பாங்கான திடல் பகுதி. |
| எடத்து நெவத்தடி | – | இடது (பக்கம் உள்ள) மாட்டின் கழுத்தில் வைக்கப்படும் நுகத்தடியின் பக்கம். |
| ஊணு கம்பு | – | வாழை மரம் சாயாமல் இருக்கப் பயன்படும் கம்பு. |
| கல் கெணறு | – | கல்லால் கட்டப்பட்ட கிணறு |
| தாய் வாய்க்கா | – | வயலுக்கு நீர் பாய்வதற்காகப் பயன்படும் பெரிய வாய்க்கால். |
| நாத்து விடு | – | முளைக் கட்டிய விதையைப் பதப்படுத்திய நாற்றங்காலில் தெளித்தல். |

## எழுத்து வழக்குச் சொற்கள்

விவசாயக் கலைச் சொற்களில் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் ஒரே ஒலிப்பு உடைய சொற்கள் மிகுதியாக வருகின்றன.

| எழுத்துத் தமிழ் | | பேச்சுத்தமிழ் |
|---|---|---|
| மண்வெட்டி | – | மண்வெட்டி |
| ஏர் | – | ஏர்/ஏறு |
| காண் | – | காண் |

| | | |
|---|---|---|
| சாக்கு | – | சாக்கு |
| தாள் | – | தாள் |
| துண்டு | – | துண்டு |
| பத்தாயம் | – | பத்தாயம் |
| சோளம் | – | சோளம் |
| சும்மாடு | – | சும்மாடு |
| பூட்டாங்கயிறு | – | பூட்டாங்கயிறு |

## கடன் சொற்கள்

விவசாயக் கலைச்சொற்களில் கடன் சொற்கள் மிகுதியாக உள்ளன.

உதாரணம்:

டிராக்டர் (tractor)
பட்லர் கலப்ப (Butler Plough)
யூரியா (urea)
பவர் டில்லர் (Power Triller)
கள மிஷின் (Weed machine)
பெட்டு (Bed (river bed))
ரவுண்டு (round)

## எதிர்ச்சொல்

1. அண்ணாத்திவிடு – (வி.) தலை கீழாக இருந்த மாட்டு வண்டியை (நுகத்தடி இணைந்த பகுதி தரையில் இருக்கும் படி) நிமிர்த்தல்.

கொட அடி – வி. வண்டியை, நுகத்தடி இணைந்த பகுதி மேலேயும் பின்பகுதி கீழேயும் இருக்கும்படி தலைக்கீழாகச் சாய்த்தல்.

2. அடைத்தல்
   திறத்தல்

3. எடத்து நெவத்தடி
   வலத்து நெவத்தடி

4. கால் மாடு (வைக்கோல் திரைக்க போட்ட மூன்று பிரியும் இணையாத பகுதி)

↓

தலமாடு – அவ்வாறு போட்ட பிரிவில் இணைந்த பகுதி.

## கருவிகளின் அமைப்பு ஒற்றுமையும் வடிவ மாறுபாடும்

ஒரு செயலுக்குப் பயன்படும் கருவிகளை வட்டார வழக்கு நோக்கில் ஒட்டு மொத்த தமிழகத்திலும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் அமைப்பில்

(Structure) ஒற்றுமையையும் அதன் வடிவத்தில் (shape) மாறுபாட்டையும் காண முடிகிறது.

எ.கா. மண்வெட்டி; அறப்பருவா

இந்த இரு பொருளையும் ஒட்டு மொத்த தமிழக வட்டாரக் கருவிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால்,


மம்புட்டி (ராம.)


மம்பட்டி (தூத்.)


மமுட்டி (நாக.)


கருக்கருவா (ராம.)


பன்னருவா (தூத்.)


அறப்பருவா (நாக.)

இவ்விரு படத்திலும், அமைப்பில் ஒற்றுமை இருப்பினும், அதன் வடிவத்தில் சில மாறுபாடுகள் உள்ளன.

மண் வெட்டியின் கைப்பிடி மரத்தாலும் வெட்டும் பகுதி இரும்புத் தகட்டாலும் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. அதன் அமைப்பில் கைப்பிடி நீளம், குட்டையாகவும், அடிப் பகுதியில் பூண் போட்டும் போடாமலும் மாறுபாடுகள் உள்ளன. ஆனால் ஒட்டு மொத்த வடிவத்தில் ஒற்றுமை காணப்படுகின்றது.

## வட்டார ஒப்பிடு

ஒரே செயல்பாட்டிற்குப் பயன்படும் கருவிகளை எடுத்துக்கொண்டு தமிழக வட்டாரக் கருவிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சொற்களில் ஒலி மாற்றம் நிகழ்ந்துள்ளது. கருவிகளின் வடிவத்திலும் மாறுபாடு உள்ளது. ஆனால் தஞ்சாவூரிலும் ஏர் உழுதல் உண்டு வேலூரிலும் ஏர் உழுதல் உண்டு. இந்த இரண்டு மாவட்டத்திலும் ஏர் உழுதல் ஒரே செயல்பாடாக இருந்தாலும் அவர்கள் பயன்படுத்தும் பொருள்கள் மிகுதி/ குறைவாக வட்டாரத்திற்கு வட்டாரம் உள்ளது. (பார்க்க – தஞ்சை– வேலூர் ஒப்பீடு).

ஒரு வட்டாரத்தில் செயல்படும் செயலுக்கு உள்ள கருவிகளின் பெயர்களை எடுத்துக் கொண்டு மற்ற மாவட்டத்தில் ஒப்பிட்டுப் பார்த்தால் அதே ஒலிப்பு முறையில் சொற்கள் இல்லை என்றாலும் அதன் வடிவம், செயல்பாட்டில் தொடர்புடைய மாற்றுக் கருவிகள் ஒட்டு மொத்த தமிழகத்திலும் உண்டு.

எ.கா.



கருக்கருவா (ராம.) பன்னருவா (தூத்.) அறப்பருவா (நாக.)

**அருவா**



**சட்டக் கலப்பை**

மேற்கண்ட கருவிகளில் வடிவம் மாறுபட்டாலும் எல்லா வட்டாரத்திலும் இக்கருவியும், சொற்களும் வழக்கத்திலுள்ளன. (பார்க்க – வாளி) அல்லது அதற்கு இணையாக வேறொரு கருவிகள் இடம்பெறும்.

உதாரணமாக ஊட்டிப் பகுதியில் அனைத்து விவசாய நிலங்களிலும் திண்ணை அமைப்பு முறைச் சாகுபடி தான் நடைபெறுகிறது. சிறிய சிறிய இடமாகப் பிரித்துக் கொண்டு சாகுபடி செய்வதால் ஏர் பூட்டி நிலத்தை உழுவது கடினமான செயலாக உள்ளது. தஞ்சை பகுதியில் உள்ள திடல் பகுதியை மண் வெட்டியால் கொத்தி நிலத்தைத் தயார் செய்வது போன்று ஊட்டிப் பகுதியில் ஏர் உழும் செயல்பாட்டையும் சேர்த்து முள்ளு என்ற ஒரு கருவி பயன்பாட்டில் உள்ளது. மண்வெட்டி என்ற ஒரு தனிக்கருவி அவ்விடத்தில் இருந்தாலும், முள்ளு என்ற கருவி நிலத்தைத் தயார் செய்வதற்கு மிகுதியான பயன்பாட்டில் உள்ளது. அந்த முள்ளு போன்ற

கருவி தஞ்சை பகுதியில் இருப்பதில்லை. ஆனால் ஒரு கருவிக்கு இணையாக தொடர்புள்ள வேறொரு கருவி உண்டு. இவ்வாறு வரும் கருவிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. ஒரு கருவி போன்று வடிவம் மாறுபட்ட மற்றொரு கருவி.
2. ஒரு கருவிக்கு இணையான மற்றொரு கருவி.
3. ஓரிடத்தில் உள்ள கருவி மற்ற இடத்தில் புதிய/ குறைவான கருவி.

முதலாவாதாக

**I.** ஒரு கருவி போன்று வடிவம் மாறுபட்ட மற்றொரு கருவி:

1. தஞ்சாவூர் தருமபுரி மண்வெட்டி





மண்வெட்டி

2. நாகை தஞ்சாவூர்

(நெல் அளக்கும் அளவைக் கருவிகள்)



பறை



வாளி

**II.** ஒரு கருவிக்கு இணையான மற்றொரு கருவி

(நீர் இறைக்கும் கருவிகள்)

1. நாகை தூத்துக்குடி



எறகூடை



எறவட்டி

2. தஞ்சை ஊட்டி

(களை எடுக்கப் பயன்படும் கருவிகள்)



களக்கொட்டு



களக்கொத்து

3. தஞ்சை – திருநெல்வேலி

சட்டக்கலப்பை அல்லகை

(சேற்றை சமப்படுத்தும் கருவிகள்)

4. தஞ்சை தூத்துக்குடி

(தானிய சேமிப்பு களன்கள்)



குருது (குதுரு)



இருவாசல்

III. ஒரு வட்டாரத்தில் பயன்பட்டு வரும் கருவி மற்ற வட்டாரங்களில் இல்லாது இருத்தல் அல்லது பல வட்டாரங்களில் இல்லாத கருவி சில வட்டாரத்தில் மிகுதியாக / புதியனவாக இருத்தல்.

## ஏர்பூட்டி உழுவதற்குப் பயன்படும் பொருள்கள் :

| வேலூர் | ஒலிப்புமுறை | தஞ்சாவூர் | ஒலிப்பு முறை | பொருள் |
|---|---|---|---|---|
| காளை/பசு | ஒழவு மாடு | காளை | ஒழவு மாடு | உழவிற்குப் பயன்படும் மாடு |
| கலப்பை | கலப்ப | கலப்பை | கலப்ப | நிலத்தை உழுவதற்குப் பயன்படும் உழுகருவி |
| மெண்டுகோல்* | மெண்டுகோல் | – | – | நுகத்தடியையும் கலப்பையையும் இணைத்துக் கட்டப் பயன்படும் சிறுகழி |
| தும்பு/ பூட்டாங் கயிறு | தும்பு/பூட்டாங் கயிறு | பூட்டாங் கயிறு | பூட்டாங் கயிறு | நுகத்தடியில் மாட்டை இணைத்துக்கட்டப் பயன்படும் கயிறு |
| நுகத்தடி | நொகத்தடி | நுகத்தடி | நொகத்தடி | ஏரில் மாட்டைப் பிணைப்பதற்காக மாட்டின் இருகழுத்திலும் வைத்துப் பிணைக்கப் பயன்படும் தடித்த உருண்டை வடிவ மரத்தடி |
| ஏர்கயிறு | ஏர் கவுறு | வட கயிறு/சங்கிலி | வட கயிறு/சங்கிலி | நுகத்தடியையும் கலப்பையையும் இணைத்துக்கட்டப் பயன்படும் கயிறு/ இரும்புச் சங்கிலி |
| ஏர்புல்லு* | ஏர்புல்லு | – | – | நுகத்தடியையும் ஏர்காலையும் இணைக்கப் பயன்படும் சிறுகட்டை |
| உழவுகோல் | ஒழவு கோல் | உழவுகோல் | ஒழவுகோல் | ஏரில் பூட்டிய மாட்டை ஓட்டப் பயன்படும் சிறுகம்பு |

*மேற்கண்ட அட்டவணை'யில் உள்ள 'மெண்டு கோல்' 'ஏர்புல்லு' மற்ற இடங்களில் காண முடியவில்லை.

கடலூர், பரமத்திவேலூர் போன்ற பகுதிகளில் எருமை மாட்டை உழவுமாடாக பயன்படுத்துகின்றனர்.

மேலும் அதனை + – குறியீடு மூலம் இவ்வாறு விளக்கலாம்.

| கருவிகள் | வேலூர் | தஞ்சை |
|---|---|---|
| காளை (உழவு மாடு) | + | + |
| பசு (உழவு மாடு) | + | – |
| மெண்டுகோல் | + | – |
| தும்பு/பூட்டாங்கயிறு | + | + |
| நொகத்தடி | + | + |
| ஏர் கயிறு | + | – |
| ஏர் புல்லு | + | – |
| உழவு கோல் | + | + |
| சங்கிலி | – | + |






எனவே விவசாயக் கருவிகளை ஒட்டு மொத்த வட்டாரங்களோடு இணையாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது மேற்கண்டவாறு மூன்று பகுப்பு முறையில் அமைவதைக் காண முடிகிறது.

## கருவிகளின் வகைப்பாடுகள்

ஒட்டுமொத்த கருவிகளையும் ஒப்பிட்டு வகைப்படுத்தும் போது கீழ்கண்ட நான்கு காரணங்களில் அமைகின்றன.

### I. வார்த்தையில் ஒற்றுமையும் பொருளின் வடிவம் மாறுபடலும்

விவசாயக் கருவிகளை ஒட்டு மொத்தமாக ஒப்பு நோக்கும் போது இவ்வொற்றுமை கிடைக்கிறது. (வட்டாரம் என்பதைவிட மாவட்டமாக எடுத்துக் கொண்டால் விளக்குவது சுலபம்.)

**உதாரணமாக;**

மரக்கா என்ற அளவைக் கருவியை எடுத்துக் கொண்டால் தமிழ்நாடு முழுவதும் எல்லா வட்டார அமைப்பிலும் இச்சொல் காணக்கிடைக்கின்றது. மரக்கா என்ற இச்சொல்லிற்கு க்ரியா அகராதி

**மரக்கால்** பெ. 1. (தானியம் அளக்கும் முகத்தலளவையில்) எட்டு லிட்டர் கொண்ட அளவு, a measure of eight litres. 2. மேற்குறிப்பிட்ட அளவு குறிப்பிட்ட மரத்தாலான (அல்லது) உலோகத்தாலான கொள்கலன், The measure of the above capacity. இவ்வாறு விளக்கம் அளித்துள்ளது. தற்போது தமிழகத்தின் பெரும்பான்மை வட்டாரங்களில் மரக்கால் என்ற அளவைக் கருவி மரத்தால் வடிவமைக்கப்படவில்லை. கீழ்ப்பகுதியில் கால்களும் பொருத்தப் படவில்லை. இதைப் பார்த்தால் இது ஒரு காரணப் பெயராகத்தான் இருந்திருக்க வேண்டும்.

தற்போது கேரளாவில் மரக்கால் என்பது மரத்தால் செய்து கீழ் பகுதியில் கால்கள் பொருத்தப்பட்ட அளவைக் கருவியாக இன்றும் பயன்பட்டு வருகிறது. ஆகவே முற்கால தமிழக விவசாயிகளிடம் மரத்தால் செய்து கால்கள் பொருத்தப்பட்டக் கருவியே பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டும். இங்கு தற்போது மரக்கால் என்ற சொல் மட்டுமே வழக்கத்தில் நிலைத்து, அதன் உண்மை வடிவக்கருவி இன்று வேலை சுலபத்தின் காரணமாக உலோகத்தின் மாற்று வடிவம் பெற்று வழக்கத்தில் உள்ளது எனலாம்.

மரக்கா என்ற வார்த்தை எல்லா மாவட்டங்களிலும் பயன்பட்டு வந்தாலும் அதன் அளவையும், கருவியின் வடிவமும் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபாடாக உள்ளது. அக்கருவியின் வடிவம் புதுமையாக்கப்பட்டாலும் வட்டார மக்களின் சூழ்லுக்கு தக்கவாறே வடிவமைக்கின்றனர். ஒரு பொருளின் வார்த்தை மக்களுக்கு மக்கள் மாற்றம் பெற்றாலும் அக்கருவியின் வடிவத்தை அந்தத் தொழில் செய்யும் மக்களே வடிவமைப்பது இல்லை. அக்கருவி எங்கோ ஓரிடத்தில் வடிவமைத்தாலும் அச்சூழலுக்கு ஏற்பவே அவர்களும் வடிவமைத்து தருகின்றனர்.

உதாரணமாக;



தஞ்சாவூர் மரக்கா (நான்குபடி கொண்டது)



வேலூர் மரக்கா (வடிவமும் அளவும்)



தூத்துக்குடி மரக்கா (எட்டுப்படி கொண்டது)

எல்லா இடங்களிலும் இக்கருவியை மரக்கா என்றே கூறுகின்றனர். வார்த்தையில் தான் ஒற்றுமையே தவிர அதன் அளவுகளிலும், வடிவத்திலும் ஒற்றுமை கிடைக்கவில்லை. க்ரியா அகராதியில் மரக்கா என்ற சொல்லுக்கு அளித்த விளக்கம் எட்டு லிட்டர் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் பழக்கத்தில் இருக்கும் மரக்கா நான்கு படி கொண்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மரக்காவின் கொள்ளளவை ஒப்பு நோக்கினால் எட்டு லிட்டர் கொண்ட ஒரு மரக்காவாக எங்கோ ஓரிடத்தில் இருக்கலாம். இதில் தெளிவாக மரக்கா என்ற ஒரு சொல்லின் பொருளும், வடிவமும் வட்டாரத்திற்கு வட்டாரம் மாற்றமாக உள்ளது. இதைக் கொண்டே வட்டார வழக்கின் அகராதி தேவையை உணர முடியும்.

## கலப்பை

இதே போன்று வட்டாரத்திற்கு வட்டாரம் "மரக்கலப்பை" என்ற வார்த்தை ஒன்றாக இருந்தாலும் அதன் வடிவம் வட்டாரத்திற்கு வட்டாரம் மாற்றம் பெற்றதாகவே உள்ளது. எல்லா வட்டாரத்திலும் மரத்தால் செய்யப்பட்ட நாட்டுக் கலப்பையை மரக்கலப்பை என்றே அழைக்கின்றனர். வடிவத்தைப் பார்க்கின்ற போது மாற்றம் பெறுகின்றது.

நாகப்பட்டினத்தில் உள்ள மரக்கலப்பையும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள மரக்கலப்பையும் அவர்களது ஊரில் உள்ள தச்சரே செய்கின்றனர். அவர்கள் இருவரும் ஒரே கைத்தொழிலைச் செய்தாலும், அவர்கள் அந்த வட்டார சூழலுக்குத் தக்கவாறே வடிவத்தை அமைக்கின்றனர்.

**கலப்பை**



நாகப்பட்டினம்



தருமபுரி



தூத்துக்குடி

எனவே இவ்வட்டார வழக்கு விவசாயச் சொற்களில் வார்த்தை ஒன்றாக இருந்தும் வடிவத்தில் மாற்றம் இருக்கின்றது.

## 2. வடிவம் வேறாக இருந்து வார்த்தையும் வேறாக இருத்தல்

அடுத்த விளக்கமாகச் சில கருவிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் வட்டாரத்திற்கு வட்டாரம் வடிவம் வேறாகவும், வார்த்தையும் வேறாக உள்ளது.

**உதாரணமாக:**

கதிர்களை அறுவடை செய்யப் பயன்படும் கருவிகளை இடத்திற்குத் தக்கவாறு வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர். அதே போன்று இடத்திற்குத் தக்கவாறு வடிவத்திலும் வேற்றுமை காணக் கிடைக்கின்றது. தஞ்சையிலும் நெல் அறுக்கத்தான் பயன்படுகிறது. அதே போன்று தூத்துக்குடியிலும் நெற்கதிர் அறுக்கத்தான் இக்கருவி பயன்படுகிறது.

தஞ்சையில் 'அறப்பருவா' என்றும், ராமநாதபுரத்தில் 'கருக்கருவா' என்றும் தூத்துக்குடியில் 'பன்னருவா' என்றும் அழைக்கின்றனர். எப்படி சொற்களில் வேற்றுமை கிடைக்கின்றதோ, அதே போன்று வடிவத்திலும் வேற்றுமை கிடைக்கிறது.



கருக்கருவா (ராம.)



பன்னருவா (தூ.)



அறப்பருவா (நாக.)

## களை எடுக்கும் கருவி

அதே போன்று புழுதி நிலத்தில் போட்ட தானியங்களில் உள்ள களைகளைக் கொத்தி அகற்றுவதற்காகப் பயன்படும் கருவியை, தூத்துக்குடி மாவட்டத்தில் கலகுச்சி என்றும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 'கலக்கொட்டு' என்றும், வேலூரில் 'கலக்கட்டு' என்றும் அழைக்கின்றனர்.



கலகுச்சி (தூ.)



கலக்கொட்டு (நாக.)



கலக்கட்டு (வே.)

எனவே விவசாயக் கலைச்சொற்களில் சில கருவிகளின் வார்த்தையும் வேறாக இருக்கின்றது. அதன் வடிவமும் வேறாக இருக்கின்றது.

## 3. வடிவம் ஒன்றாக இருந்து வார்த்தையில் மாறுபடுதல்

கலப்பையில் இவ்வேற்றுமை கிடைக்கின்றது.



இக்கலப்பையை நாகப்பட்டினத்தில் 'போஸ்டு கலப்ப' என்றும், இதை தேனி மாவட்டத்தில் 'குப்பி கலப்ப' என்றும், அழைக்கின்றனர். வடிவம் ஒன்றாக இருந்தாலும் வார்த்தையில் வட்டாரத்திற்கு வட்டாரம் மாற்றம் உள்ளது.

நாகையில் மண் போன்றவை அள்ளப்பயன்படும் இரும்புச்சட்டியை (பாண்டு) 'இரும்புச் சட்டி' என்றும், தேனி மாவட்டத்தில் இதனை 'சீனாசட்டி' என்றும் அழைக்கின்றனர்.



வீட்டையும், நெற்களங்களையும் கூட்டுவதற்குப் பயன்படும் விளக்கமாறு (துடைப்பம்) அனைத்து ஊர்களிலும் ஒரே வடிவமாக இருந்தாலும், அதன் வார்த்தை வட்டாரத்திற்குத் தகுந்தவாறு மாற்றமாக உள்ளது.

**உதாரணம்:**

வெளக்கமாறு (தஞ்.)
வாளிப்புமாறு (தூத்.–ஜமீன்)
வாரியல் (தூத்.–வர.)
மாறு (தூத்.)
கொளஞ்சிமாறு (தூத்.)
சீமாறு (கோ.)

## 4. செயல் / பயன்பாடு ஒன்றாக இருந்து வார்த்தையிலும், வடிவத்திலும் மாறுபடுதல்

விவசாயக் கருவிகளை ஒப்பு நோக்குகின்ற போது வட்டாரத்திற்கு வட்டாரம் தேவை ஒன்றாக இருந்தாலும் அதே தேவைக்கு, அதே பயன்பாட்டுக்கு வெவ்வேறு பொருள்களை வைத்துள்ளனர்.

### நீர் நிலையிலிருந்து இறைக்க

வாய்க்கால் அல்லது சமதளமான பகுதியில் நீர் தேங்கி நிற்பதை இறைப்பதற்கு, நாகை, திருவாரூர் பகுதியில் எறகூடை என்று உள்ளது. அது தகர டின் / கூடையை இருபகுதியிலும் இரண்டு கயிறு கட்டி இரு பக்கத்திலும் நின்று இறைக்கின்றனர். இதற்கு எற கூடை/ டின் என்று

பெயர். ஆனால் தூத்துக்குடி மாவட்டத்தில் இரும்பு தகட்டினால் செய்து வைத்துள்ள கருவிக்கு 'எறவட்டி' என்று பெயர்.

அதே போன்று,

கிணற்றிலிருந்து நீர் இறைக்க தஞ்சைப் பகுதியில் ஏற்றம் என்றும், நாமக்கல், சேலம் பகுதியில் கவல / கமல / ஏத்தம் என்றும் சொல்கின்றனர். தஞ்சைப் பகுதியில் உள்ள ஏற்றத்தை மனிதன் கையால் இழுப்பது. கவல ஏற்றத்தை மாடு கொண்டு முன்னும் பின்னும், வட்டவடிவில் சுற்றி இழுத்து நீர் இறைப்பது என்று வழக்கத்தில் உள்ளது.

எல்லா வட்டாரத்திலும் அறுவடையான நெற்கதிரை கட்டுக்கட்டாக கட்டுவது வழக்கம். அப்படி கட்டுவதற்கு தஞ்சைப் பகுதியில் அறுவடை செய்த அன்று அக்கதிரை எடுத்து நெல் நீக்கி அத்தாளில் (சடை பின்னுவது போன்று) மூன்று பிரிவுத்தாள் எடுத்து திரித்து அதனைக் கொண்டே கட்டு கட்டுவார்கள். அதற்கு பெயர் 'பழுதகயிறு/ஆக்க' அதன் பிறகு அக்கயிற்றைப் பயன்படுத்துவதில்லை. ஆனால் தருமபுரியில் அறுவடை செய்த நெற்கதிரைக் கட்டுக்கட்ட நீண்ட அக்கதிரை எடுத்து நெல் நீக்கி அதனை இருபக்கத்தையும் இணைத்து முடிந்து அதனைக் கொண்டே கட்டு கட்டுகின்றனர்; திரிப்பது இல்லை. இவ்வாறு செயல் பயன்பாடு ஒன்றாக இருந்தாலும் பொருளிலும், வார்த்தையிலும் வேற்றுமை இருக்கின்றது.

## விவசாயக் கருவிகளின் வடிவம் மாற்றம் எவ்வாறு ஏற்படுகிறது

ஒரே மொழி பேசும் நாட்டில் ஒரே தன்மையைக் கொண்ட சூழலில் ஒவ்வொரு வட்டாரத்திலும் அவர்களின் சூழலுக்கு ஏற்ப மண் வளத்திற்கேற்ப பழக்க வழக்கங்களும், செயல்பாடுகளும் மாற்றமடைகின்றன.

சாதி, இனம், மதம் போன்ற காரணங்களால் மக்கள் பிரிந்தாலும் விவசாயத் தொழில் கருவியைப் பொறுத்தவரை ஒரே தன்மையைக் கொண்ட கருவிகளைத்தான் பயன்படுத்துகின்றனர். சாதிக்குத்தகுந்தவாறு மொழியில் மாற்றம் இருந்தாலும், மதத்திற்குத்தக்கவாறு மொழியில் மாற்றம் இருந்தாலும், விவசாயத்தைப் பொறுத்தவரை ஒரே வட்டாரத்தை உள்ளடக்கிய அனைத்து இன மக்களும், விவசாயக் கருவிகளில் ஒரே தன்மையைக் கொண்ட கருவிகளையே வைத்திருக்கின்றனர். வட்டாரத்தில் உள்ளடக்கிய மக்களின் சொற்களில் உயர்வு, தாழ்வு இருந்தாலும் கருவிகளில் ஒற்றுமையே உள்ளன. பல சாதி, மதம், இனம் உள்ளடக்கிய ஒரு வட்டாரத்தில் ஒற்றுமை இருந்தாலும் வட்டாரப் பிரிவில் இவ்வட்டாரமக்களுக்கும், அடுத்த வட்டார மக்களுக்கும் வேற்றுமை கிடைக்கின்றது. உயர்ந்த சாதியினராகக்

கூறப்படுபவர்கள் விவசாயத்திற்கு ஒரு கருவியையும், தாழ்ந்த இனமாகக் கருதப்படுபவர்கள் வேறோரு கருவியையும் வைத்திருப்பதில்லை.

உதாரணமாக,

ஒரு வட்டாரத்தில் உள்ள இஸ்லாமிய மதத்தினரும், இந்து மதத்தினரும், கிருஸ்துவ மதத்தினரும் விவசாயம் செய்யும் போது ஒரே செயலுக்கு தனித்தனி கருவிகளை வைத்திருப்பதில்லை. ஒரே வட்டாரத்தில் உள்ள பறையரும், வன்னியரும், அந்தணரும் வேறு வேறு கருவிகளை அல்லது விவசாயக் கலைச்சொற்களைக் கூறுகின்ற போது ஒற்றுமைதான் உள்ளது. கருவிகளை வைத்திருப்பதிலும் ஒற்றுமைதான் உள்ளது. ஆனால் சில ஒலிகளில் இனத்திற்குத் தக்கவாறு மாற்றம் தென்படுகின்றது. எனவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து இன மக்கள் வீட்டிலும் ஒரேத்தன்மை வடிவம் கொண்ட விவசாயக் கருவிகள் தான் உள்ளன. இதே போன்று நாமக்கல் வட்டாரத்தில் அனைத்து பிரிவினர் வீட்டிலும் ஒரே தன்மை வடிவம் கொண்ட கருவிகள் உள்ளன. ஆனால் நாமக்கல்லையும், தஞ்சையையும் ஒப்பிடும் போது வேறுபட்ட வடிவங்கள் அமைகின்றன. இதனை மனதில் நிறுத்தி ஒப்பு நோக்கினால் கீழ்க்கண்ட காரணங்கள் கிடைக்கின்றன.

## கருவிகளின் வடிவமாற்றம்

ஒட்டு மொத்தமாக விவசாயக் கருவிகளை ஒப்பு நோக்குகின்ற போது வடிவமாற்றம் வட்டாரத்திற்கு வட்டாரம் பல காரணங்களால் அமைகின்றன. முக்கியமாக நான்கு காரணங்களைக் கூறலாம்.

I பயிரின் தேவைக்கேற்ப மாறுபடுதல் (பயிர்)

II மண்ணின் தன்மைக்கேற்ப மாறுபடுதல் (மண்)

III மக்களின் பழக்க வழக்கத்திற்கேற்ப மாறுபடுதல் (பழக்க வழக்கம்)

IV தொழிலின் தேவைக்கேற்ப மாறுபடுதல் (தொழில்)

## I. பயிரின் தேவைக்கேற்ப மாறுபடுதல் (பயிர்)

ஒட்டுமொத்த விவாசயக் கருவிகளை ஒப்பு நோக்குகின்றபோது அந்தப் பயிரின் தேவைக்கேற்ப வடிவம் மாறுபடுகின்றது.

'களக்கொத்து' – கரும்பில் உள்ள களையைக் கொத்தி எடுப்பதற்காக ஒரு வகையான கொத்துக் கருவியும் நிலக்கடலையில் உள்ள களைகளைக் கொத்துவதற்கு ஒரு வகையான கருவியும், கிழங்குப் பயிர்களில் உள்ள களைகளைக் கொத்துவதற்கு ஒரு வகையான கொத்துக் கருவியும் பயன்பாட்டில் உள்ளன. களை எடுப்பது என்ற செயல் ஒன்றாக இருந்தாலும் அது பயிரின் தேவைக்கேற்ப மாறுபடுகின்றது.

மண்வெட்டி



(கரும்பிற்கு களைஎடுக்க)



(கிழங்கிற்கு பயிருக்கு களைஎடுக்க)



களக்குச்சி

(மானாவரி நிலப்பகுதி பயிர்களுக்குக் களை எடுக்க)



களக்கொட்டு

(நிலக்கடலை பயிர்களுக்கு களை எடுக்க)



களக்கொத்து

(தோட்டப் பயிர்களுக்கு எடுக்க)

அதேபோன்று கரும்பிற்கு பட்டம் கிழிப்பதற்காக அகலமான கொழு வைத்தக் கலப்பையும், நிலக்கடலை சரக்குப்போடுவதற்கு சாதாரணக் கொழுக் கொண்ட கலப்பையும் பயன்படுகின்றன.

நெல் அறுவடை செய்ய கருக்குள்ள அருவாவும், கரும்பு பயிர் அறுவடை செய்ய கருக்கு இல்லாமல் சுனையுடைய கைப்பிடியுள்ள அருவாவும், வெற்றிலை அறுவடை செய்ய இரும்பில் செய்த ஒரு சிறிய கருவியும், கம்புப்பயிர் அறுவடை செய்ய ஒரு சிறிய கத்திபோன்ற அறுவடைக்கருவியும், கோரைப்பயிர் அறுவடை செய்ய ஒரு வளைந்த நீளமான கருவியும், வாழை அறுவடை செய்ய நீளமான வெட்டருவாளும் பயன்படுத்துகின்றனர்.

1. அறப்பருவா – நெல் அறுவடைசெய்ய



2. கரும்புக்கத்தி – கரும்பு அறுவடைசெய்ய



3. கம்பரக் கத்தி – தானியக்கதிர் அறுவடைசெய்ய



4. கோரைக்கத்தி – கோரைப் பயிர் அறுவடைசெய்ய



5. இருப்புநகம் – வெற்றிலை அறுவடைசெய்ய



## (i) பயிரின் வளர்ச்சிக்கேற்ப மாறுபடுதல்

ஒரு பயிர் வளர்வதற்கேற்ப கருவியும் வடிவம் மாறுபடுகின்றது. "விதைக் கரும்பு" போட்டு முளைத்து முதன் முதலில் கொத்தும்களைக்கு ஒரு வித சிறிய களக்கொட்டும், அப்பயிரின் மண்ணை ஆழமாகக் கிளறிவிட நீண்ட காம்புடைய மண் வெட்டியும், அதன் உள்ளே பட்டம்

கிழிப்பதற்கு குனிந்து வேலை செய்யக்கூடிய அளவில் ஒரு வகை மண்வெட்டியும் பயன்படுகிறது.

கரும்பு பயிருக்கு

களை எடுக்க – களைக்கொட்டு (படம்) (தூ.)



மண்ணைக்கொத்த – சாதாரண மண்வெட்டி (தஞ்.)



பட்டம் கிழிக்க – குனிந்து வேலை செய்யக் கூடிய மண்வெட்டி.



எனவே பயிரின் வளர்ச்சிக்கேற்பவும் கருவியின் வடிவமும் மாறுபடுகின்றது.

## II. மண்ணின் தன்மைக்கேற்ப வடிவம் மாறுபடுதல்

இயற்கைச் சூழலுக்குத் தக்கவாறு அந்த வட்டார மண்ணின் தன்மைக் கேற்ப வடிவம் மாற்றம் பெற்றுள்ளது.

## கலப்பை

தருமபுரியில் உள்ள மலைப்பாங்கான கற்கள் நிறைந்த கடினமான நிலத்தை உழுவதற்கு ஒருவித மரக்கலப்பையும் தஞ்சை போன்ற சாதாரண மண்ணை உழுவதற்கு ஒரு வித வடிவக் கலப்பையும் அமைந்துள்ளன.

தருமபுரி கலப்பை



தஞ்சை கலப்பை



அதே போன்று தூத்துக்குடி மாவட்டத்தில் கடினமாக மண் இறுக்கம் கொண்ட நிலங்களை உழுவதற்கு இரும்பால் செய்த இரட்டைக் கலப்பை கொண்ட வடிவமும் அமைந்துள்ளன.

## பரம்புப்பலகை

(i) தஞ்சை போன்ற சாதாரண சேற்றுப் பகுதியை சரிசெய்ய ஒருவித பரம்புப் பலகையும்

(ii) தருமபுரி போன்ற கடினமான பாறைகள் நிறைந்த சேற்றுப் பகுதியை சரிசெய்ய ஒருவித வடிவ பரம்புப் பலகையும்

(iii) தூத்துக்குடி, தேனி போன்ற மாவட்டத்தில் சேற்றினை சரிசெய்ய ஒரு வித வடிவ பரம்புப் பலகையும் பயன்படுகின்றது.

i) தருமபுரி பரம்புப் பலகை

ii) தஞ்சை பரம்புப் பலகை

iii) தூத்துக்குடி, தேனி பரம்புப் பலகை

உலக மக்களின் மனம் மண்ணின் தன்மைக்கு ஏற்ப வேறுபடுகின்றது. இந்தியாவில் இருக்கும் மக்களின் மன உணர்வும், அமெரிக்காவில் உள்ள மக்களின் மன உணர்வும் ஒன்றாக இருப்பதில்லை ஏன், இந்தியாவிலேயே, தமிழ் நாட்டில் உள்ள மக்களின் மனமும் ஆந்திராவில் உள்ள மக்களின் மனமும் ஒன்றாக இருப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் மதுரைமக்களின் மனமும், தஞ்சாவூர் மக்களின் மனமும், ஒன்றாக இருப்பதில்லை. தஞ்சாவூரிலே கும்பகோணத்தில் வாழும் மக்களின் மனநிலைக்கும், பாபநாசத்தில் உள்ள மக்களின் மனநிலைக்கும் மிகுந்த மாற்றம் உண்டு. இதற்கெல்லாம், என்ன காரணம். அந்தந்த மண்ணின்

தன்மையே மக்களின் மனங்களில் பிரதிபலிக்கின்றது. இவ்வாறு மனங்கள் மாற்றம் பெறுவதற்கு மண்ணின் மாற்றம் தான் காரணம். இந்த மண்ணின் மாற்றத்திற்கு ஏற்றவாறுதானே பயிரும் விதைக்கின்றனர். இதைச் சரியாக மதிப்பிட வேண்டும் என்றால் வெற்றிலையும், புகையிலையும் எல்லா மண்ணிலும் விளைவிக்க முடியாது. அதற்கென்று தனித்தன்மை கொண்ட மண்ணே வேண்டும். மண்ணிற்குத் தக்கவாறு பயிர் மாறுபடுவது போல மண்ணிற்குத் தக்கவாறு கருவிகளும் மாற்றம் பெறுகின்றன. அவ்வாறு ஆனது தான் கீழ்க்கண்டகருவிகளும்

**(i) மண்ணின் பதத்திற்கேற்ப வடிவம் மாறுபடுதல்**

மண்ணைப்பதப்படுத்துவதற்கு அதன் நிலைக்குத் தக்கவாறு வடிவம் மாறுபடுகின்றது.

கலப்பையில்

(1) கரும்பு விளையும் நிலத்தை உழுவதற்கு ஒரு கொழுவையும்

(2) சேறு ஆனபிறகு ஏற்படும் கட்டியை உடைப்பதற்கு ஒரு விதக் கொழு அமைந்தக் கலப்பையும்

(3) சேற்றினை சமப்படுத்துவதற்காகப் பல்லுப்பல்லாக உருண்டை வடிவ சட்டக்கலப்பையும்

(4) அச்சேற்றை சமதளமாக மட்டப்படுத்த பரம்புப் பலகையும் பயன்படுத்துகின்றனர்.

சேற்றின் தன்மை மாற மாற அதன் மேல் பயன்படுத்தும் கருவிகளும் மாற்றம் பெறுகின்றது.

**III. மக்களின் சமூக பழக்க வழக்கத்திற்கேற்ப வடிவம் மாறுபடல்**

இவ்வொப்பீட்டிற்கு அளவைக் கருவிகளை எடுத்துரைக்கலாம். தூத்துக்குடியில் உள்ள அளவைக் கருவிகளுக்கும் தஞ்சையில் உள்ள அளவைக் கருவிகளுக்கும் மிகுந்த மாற்றம் உள்ளது. தூத்துக்குடி மாவட்டம் ஜமீன் கோடாங்கிப் பட்டியில் ஒருவித அளவைக் கருவிகளும், அதே மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் ஒருவித அளவைக் கருவிகளும் உள்ளன. அதேபோன்று மதுரைப் பகுதியில் பழக்கத்தில் உள்ள அருவாவிற்கும் தஞ்சைப் பகுதியில் பழக்கத்தில் உள்ள அருவாவிற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. அந்த வட்டார சமூக சூழலுக்கேற்ப கருவிகளின் பயன்பாடு உள்ளது.

அவர்களின் குலதெய்வ வழிபாட்டிற்குத் தக்கவாறும், அவர்களின் முன்னோர்களின் பழக்க வழக்கத்திற்குத் தக்கவாறும் கருவிகள் மாறுபடுகின்றன.

## IV. தொழிலின் தேவைக்கேற்ப வடிவம் மாறுபடுதல்

ஒரு தொழிலில் உள்ள செயல்பாடுகள் மற்ற தொழிலிலும் இருந்தால் அங்கே பயன்படும் கருவிகளின் அடிப்படை பண்புகளில் சில மாற்றங்கள் பெறுகின்றன.

1. கட்டடம் கட்டும் தொழிலுக்கு ஒருவித மண் வெட்டியும்

2. கேபிள் பதிப்பிற்குச் சாலை ஓரம் பள்ளம் தோண்டுபவர்கள் ஒரு வித மண்வெட்டியும் வைத்திருக்கின்றனர்.

## செயல்பாட்டின் அடிப்படையில் கருவிகள்

விவசாயக் கருவிகளை ஒட்டு மொத்தமாக ஒப்பிட்டுப் பார்க்கும் போது இரு வகையான செயல்பாட்டு அடிப்படையில் பிரிகின்றன.

அவை

1. ஒவ்வொரு வேலைக்குப் பயன்படும் ஒவ்வொரு கருவி.

2. பல வேலைக்குப் பயன்படும் ஒரு பொருள்

## 1. ஒவ்வொரு வேலைக்குப் பயன்படும் ஒவ்வொரு கருவி

ஒரு கருவியை வைத்துக் கொண்டு ஒரு வேலையை மட்டுமே செய்யும் படியாகச் சிலகருவிகள் உள்ளன.

உதாரணமாக

**'கலப்பை'**யை எடுத்துக் கொள்ளலாம். இக்கலப்பையை வைத்துக் கொண்டு நிலத்தை உழுதல் என்ற ஒரு வேலையை மட்டுமே செய்ய முடியும். இக்கலப்பையை வைத்துக் கொண்டு சேற்றை சமன்படுத்தவோ நிலத்தில் குழி போடவோ முடியாது.

**அறப்பருவா:** இக்கருவியை வைத்துக் கொண்டு தானியப் பயிர்களை அறுவடை செய்ய மட்டுமே பயன்படுத்த முடியும். இக்கருவியை வைத்துக் கொண்டு மரத்தை வெட்டவோ வேறு செயல்பாட்டிற்கோ பயன்படுத்த முடியாது. **பரம்புப்பலகை:** இப்பலகையை வைத்துக் கொண்டு சேற்றை மட்டுமே சமன்படுத்த முடியும். **எலிக்கிட்டி:** இதை வைத்துக் கொண்டு எலிப்பிடிப்பதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும். இவ்வாறு ஒவ்வொரு வேலைக்கென்று தனிக் கருவிகள் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## 2. பல வேலைக்குப் பயன்படும் ஒரு பொருள்

ஒரே கருவியை வைத்துக் கொண்டு பல்வேறு பணிகளைச் செய்யும் படியாக சிலக்கருவிகள் உள்ளன.

உதாரணமாக

**மண்வெட்டி**

இக்கருவியை வைத்துக் கொண்டு பல வேலைகளையும் செய்யலாம்.

1. வரப்புப்போட
2. வாய்க்கால் போட
3. ஓரிடத்தைச் சுத்தம் செய்ய
4. பள்ளம் பறிக்க
5. செடி, கொடிகளை வெட்ட
6. கிழங்குப் பயிர்களை அறுவடைசெய்ய

என்று பல வேலைகளுக்கும் இக்கருவி பயன்படுகின்றது.

**பாரை**

1. இக்கருவியால் நிலத்தை/ வரப்பை இடிக்க
2. குழி போட
3. ஒரு பொருளை பெயர்த்தெடுக்க என்று பல காரணங்களுக்குப் பயன்படுகின்றது.

**3. களக்கொட்டு**

1. புழுதி நிலத்தில் முளைத்த தானியப்பயிர்களுக்கு களையை கொத்தி எடுக்க
2. தானியப் பயிர்களுக்கு மண் அணைக்க
3. நிலக்கடலை விதை போட போன்ற செயல்பாட்டிற்கு இக்கருவி பயன்படுகின்றது.

இது போன்று ஒரே கருவி பல வேலைகளுக்கும் பயன்படுமாறு பல கருவிகள் மக்களிடம் பழக்கத்திலுள்ளன.

இவ்வாறு சொற்களிலும், கருவிகளின் வடிவத்திலும் வட்டாரத்திற்குத் தக்கவாறு மாறுபட்டு வந்த சூழலுக்குத் தக்கவாறு அகராதி தயாரிக்கப் படுகிறது. அவ்வாறு தயாரிக்கப்படும் அகராதிகளை இரண்டு வகையாக அமைக்கலாம்.

1. தஞ்சை வட்டாரச் சொற்களைத் தலைச்சொல்லாகக் கொண்டு மற்ற வட்டாரச் சொற்களை அதனுள் இணைத்தல்
2. அனைத்து வட்டார வழக்குச் சொற்களை வரிசைப்படுத்தி அமைத்தல்

இந்த இரண்டு வகை வட்டார வழக்கு அகராதியிலும் வட்டார வழக்குச் சொல் மட்டுமே பதிவு செய்யப்பட்டு ஏதேனும் ஓரிரண்டு படங்களே கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மேலே கண்ட வட்டார வழக்கு சொல்லிற்குத் தகுந்தவாறு வடிவம் மாறுபடுவதை பதிவு செய்யாமலே இருக்கின்றன. எனவே வட்டார வழக்கு கருவிகளையும் பதிவு செய்யும் பொருட்டு கருவிகளுக்கென்று ஒரு அகராதி தயாரிக்க வேண்டும் (Instrument Dictionary) எனவே விவசாயக் கலைச்சொற்களையும் அதன் கருவிகளையும் முழுமையாக ஆராய்ந்தால் புதிய புதிய மொழிக் கருத்துச் சூழல் உருவாகும். மொழி ஆளுமையும் தெரியவரும்.

# 2. வேட்டைக் கருவிகள்

வேட்டையாடுதல் என்பது பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. இன்னும் நாட்டுப்புறங்களில் நடைபெற்று கொண்டிருக்கின்ற ஒரு தொழில். பாதுகாப்பிற்காகவும், உணவின் பயன்பாட்டிற்காகவும், பொழுது போக்கிற்காகவும் இத்தொழில் அமைகிறது. விலங்குகள், பறவைகள் போன்றவற்றைத் துரத்திச் சென்று / தான் அமைத்த இருப்பிடத்திற்கு வரவழைத்து அதனை உயிருடனோ, கொன்றோ பிடிக்கப்படுகிறது. இதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் நிறைய உண்டு. ஒவ்வொரு பிரிவு மிருகத்தைப் பிடிக்க பல வகையான கருவிகளும், ஒரே மிருகத்தை பிடிக்க பல கருவிகளும் உண்டு. அது வாழும் இடத்திற்குத் தகுந்தவாறு, உயிரோடு/கொன்று பிடிப்பதற்குத் தகுந்தவாறு கருவிகள் வேறுபடுகின்றன. பெரும்பாலும் இக்கருவிகள் உள்ளூர் மக்களாலேயே தயார் செய்துப் பயன்படுத்தப்படுகின்றன. இக்கருவிகள் மிகுதியாக மரத்தினாலே செய்யப் படுகின்றன. இக்கட்டுரையில் உணவிற்காக வேட்டையாடும் சில கருவிகளைப் பற்றி மட்டும் நோக்கலாம்.

## விலங்குகள்

எத்தனையோ வகையான விலங்குகள் வீடுகளிலும், வயல்களிலும், காடுகளிலும் வசித்து வருகின்றன. அவைகளில் பல விலங்குகள் உணவிற்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணம்:

| | | |
|---|---|---|
| ஆடு | உடும்பு | நண்டு |
| மாடு | கோழி | மடையான் |
| பன்றி | புறா | கொக்கு |
| நரி | காக்கா | வாத்து |
| எலி | மைனா | கௌதாரி |
| முயல் | குயில் | மீன் |

இவற்றைப் பிடிக்கப் பல்வேறு விதமான கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இக்கட்டுரைக்காக மிருகத்தைப் பிடிப்பதில் சிலவும் (நீர்வாழ்வன மீனையும் உள்ளடக்கி), பறவையைப் பிடிப்பதில் சில கருவிகளையும் உதாரணத்துடன் விளக்கலாம்.

## விலங்குகளைப் பிடிப்பது

1. மீன் பிடி கருவிகள்
2. எலி பிடி கருவிகள்
3. நண்டு பிடி கருவிகள்

## பறவைகளைப் பிடிப்பது

1. குயில் பிடிக்கும் கருவி
2. மடையான் பிடிக்கும் கருவிகள்

இந்த ஐந்து வகையான விலங்கினங்களைப் பிடிக்கப் பயன்படும் கருவிகளை மட்டும் இங்கு காண்போம்.

### 1) மீன்பிடி கருவிகள்

மீனில் இரண்டு வகை உள்ளது.

1. நன்னீரில் வாழும் மீன்
2. உப்பு நீரில் வாழும் மீன்

இந்த இரண்டு தன்மையில் வாழும் மீன்களைப் பிடிப்பதற்குப் பல கருவிகள் நாட்டுப்புற மக்களிடம் இருந்து வருகின்றன. இங்கே நன்னீரில் வாழும் மீனைப்பிடிக்கப் பயன்படும் சில கருவிகளை மட்டும் பார்க்கலாம்.

1. கச்சா
2. ஊத்தா
3. பறி
4. உறி வலை
5. கப்பு வலை
6. தூண்டில்

### 1. கச்சா

இக்கருவி குளம், குட்டை, வாய்க்கால், ஏரி போன்ற நீர் நிலைகளில் உள்ள மீனைப் பிடிக்கப் பயன்படுகிறது.

தயார் செய்தல்

சுத்தம் செய்யப்பட்ட மூங்கில்குச்சி, பிளாச்சியில் கயிறு கொண்டு பாய்போன்று பின்னி கூண்டு போன்று அமைத்தல். கருவியின் உள்பகுதியில் நொச்சி குச்சியை மூன்று இடத்தில் (வரும்பாக) நீள் வட்ட வடிவில் பொருத்துதல். திறந்திருக்கும் இரு வாய்ப்பகுதியின் ஒரு பகுதியை இணைத்து கயிற்றினால் பின்னி விடுதல். நீர் இறைத்து ஊற்றும் பகுதி திறந்தவாறும், அடிப்பகுதியில், மீன் வெளியேறாதவாறு, நீர் வெளியேறும் அளவில் இணைத்துத் தயார் செய்யப்பட்டது.

**பயன்படுத்துதல்**

இக்கருவியைக் கொண்டு மீன்பிடிக்க பல்வேறு முறைகள் உள்ளன. இதில் நீர் குறைவாக உள்ள வாய்க்கால், குளம், குட்டைகளின் மடைவாய்ப் பகுதியில் வைத்து, நீரை இறைத்து, கச்சாவின் உள் பகுதியில் ஊற்றி நீரை வெளியேற்றி மீனை தங்க வைக்கும் அளவில் இறைக்கப்படுகிறது. பெரும்பாலும் இக்கச்சா புத்தாஞ்சோற்றின் நீரை இறைத்து ஊற்றுவதற்காக பயன்படுகிறது.

**புத்தாஞ்சோறு அமைத்தல்**

புத்தாஞ்சோறு என்பது வாய்க்காலில் மேயும் மீனைப் பிடிப்பதற்காக உள்ள ஒரு வகை முறை. வாய்க்காலின் வரப்பு ஓரப்பகுதியில் தொட்டி போன்று பத்து அடி நீளத்திற்கும் மூன்று/நான்கு அடி அகலத்திற்கும் மண் பத்தைகளைக் கொண்டு அமைத்தல். வாய்க்காலில் ஓடும் நீரின் ஒரு பகுதி அந்த தொட்டியின் உள்ளே சென்று வெளியேறும் வகையில் அமைக்கப் படுகிறது. நீர் செல்லும் இடத்தில் ஒரு மடைவாயும் வெளியேறும் இடத்தில் ஒரு மடைவாயும் அமைத்தல். அந்த நீர்த் தொட்டியின் உள்பகுதியில் தவிடு, மாட்டுச் சாணி, மற்றும் புற்றின் உள்ளே கட்டியிருக்கும் கரையானின் கூடு போன்றவற்றை நீர்த்தொட்டியில் தூவிவிட்டு நீரின் ஓட்டத்தில் வெளியேறாதவாறு தழைகளால் இருமடை வாயிலும் ஜன்னல் போன்று அமைத்து விடுதல். வாய்க்காலில் சென்று கொண்டிருக்கும் மீன் (கரையான், தவிடு, சாணி) அவ் உணவினை (தொட்டியின் உள்பகுதியில்) தின்று கொண்டிருக்கும் போது மீன் வெளியேறாதவாறு இரு மடை வாய்ப்பகுதியை அடைத்து அத்தொட்டியில் உள்ளே உள்ள நீரினை முழுவதும் இறைக்க வேண்டும். அவ்வாறு நீரினை இறைத்து (வாய்க்காலில் ஊற்றும் போது அத்தொட்டியில் உள்ள மீன் சென்று விடாமல் இருப்பதற்காக) கச்சாவில் ஊற்றி மீன் பிடிக்கப்படுகிறது.

கச்சா



## 2. ஊத்தா

இக்கருவி ஏரி, குளம் போன்றவற்றில் நீர் வற்றி குறைவாக உள்ள போது அதில் இருக்கும் மீனைப் பிடிக்கப் பயன்படுகிறது.

**தயார் செய்யும் முறை**

இக்கருவியும் கச்சா போன்று மூன்று அடி உயரம் கொண்ட மூங்கில் குச்சி/பிளாச்சியில் கயிறு கொண்டு பின்னப்படுகிறது. மேல் பகுதி ஒரு கை மட்டும் நுழையும் அளவில் ஓட்டை அமைக்கப்பட்டு அதன் அடிப்பகுதி அகலமாக வட்டவடிவ வாய் போன்று நொச்சிக்குச்சி கொண்டு உள்பகுதி வளையாதவாறு பொருத்தப்படுகிறது. அடிப்பகுதி குச்சியின் கீழ் அமைப்பு சமமாகவும் உள்பகுதியில் மாட்டிக்கொண்ட மீன் வெளியே செல்லாதவாறும் கயிற்றால் இறுக்கிப் பின்னப்படுகிறது.

**பிடிக்கும் முறை**

நீர்வற்றி, குறைவாக நீர் உடைய குளம், குட்டை, ஏரியில் உள்ள மீனைப் பிடிப்பதற்காக/நீரினை நன்றாக அடித்து கலக்கி மீனை களைப்படையச் செய்து சேற்றுப் பகுதிக்கு செல்ல வைத்தல். அதன்பின் நீரின் உள்பகுதியில் ஊத்தாவை கவிழ்த்து அதன் உள்ளே மாட்டிக்கொள்ளும் மீன் கைவிட்டு பிடிக்கப்படுகிறது.

ஊத்தா




## 3. பறி

இக்கருவியும் வாய்க்கால் மற்றும் ஏரிகளில் நீர் சென்று, வடியக் கூடிய வடிமடை வாய்ப்பகுதியில் இரவு, பகல் நேரங்களில் வைத்து நீரின் ஓட்டத்தில் செல்லும் மீனைப்பிடிக்கப் பயன்படுகிறது. ஒரு முறை உள்ளே சென்ற மீன் திரும்பி வராதவாறு இக்கருவி அமைக்கப்பட்டுள்ளது.

**இக்கருவி தயார் செய்யும் முறை**

கச்சாவின் வடிவம் கொண்டதின் மேல்பகுதியில் (பெண்களின் மேல் உள்ளாடை போன்ற வடிவில்) மூங்கில் குச்சியில் பின்னப்பட்ட பறி உள்ளே பொருத்தப்படுகிறது. உள்ளே சென்ற மீனை வெளியேயெடுப்பதற்காக

கச்சாவின் அடிப்பகுதியில் அடைத்து திறக்கும் அளவில் வாய்ப்பகுதி பொருத்தப்படுகிறது. கச்சாவும், பறியும் இணைந்தது தான் பறி.

**மீன் பிடிக்கும் முறை**

வாய்க்கால் மற்றும் ஏரிகளிலிருந்து நீர் வெளியேறும் வடிமடைப் பகுதியில் இப்பறி பொருத்தப்படுகிறது. சிறப்பு வேலையாக வாய்க்காலில் செல்லும் நீரை கரை அமைத்து தடுத்து குறிப்பிட்ட இடத்தில் அந்நீரினை வடியவிட்டு அந்நீர் வடியும் இடத்தில் இப்பறி பொருத்தப்படுகிறது. பறியின் உள்ளே சென்ற மீன் வெளியேறுவது கடினம். இக்கருவி பெரும்பாலும் இரவு நேரங்களில் தான் மீன் பிடிக்கப் பொருத்தப்படுகிறது.

பறி




## 4. உறிவலை

இக்கருவி ஏரி, குளம் போன்றவற்றில் உள்ள மீனைப் பிடிக்கப் பயன்படுகிறது.

**தயார் செய்தல்**

இரண்டு அடி அகலம், நீளம் கொண்ட நாற்சதுர வலையின் நான்குப் பகுதியிலும், சுருக்கு கயிற்றை இணைத்து அக்கயிற்றின் மறுமுனை நீண்ட கழியின் (ஊன்று குச்சி) நுனியில் இணைத்துக்கட்டப்படுகிறது.

**பயன்படுத்தும் முறை**

குளம், ஏரி போன்றவற்றின் கரைப்பகுதியில் ஊன்று குச்சியை ஊன்றி, அதன் வலையை கரைப்பகுதி நீரின் தரைப் பகுதியில் விரித்து நான்கு முனைகளிலும் சிறுமுளைக் குச்சி/கற்களை வைத்துவிடுதல். அதன் மேற்பரப்பில் சாணியில் கலந்து பிசையப்பட்ட உமி, நொய் (அரிசியின் தூள்) போன்றவற்றை பரப்பி மீனின் உணவுக்காக வைக்க வேண்டும். அவ் உணவினைத் தேடி வந்து அவ்விடத்தில் மீன் மேயும் போது சுருக்கு கயிற்றை இழுத்து, சுருக்கு வலையில் மாட்டும் மீனைப் பிடிக்க வேண்டும்.

உறிவலை




## 5. கப்பு வலை

இக்கருவியும் மீனை உயிருடன் பிடிக்கப் பயன்படும் கருவி. கைப்பிடி கொண்ட வட்ட வடிவ பெரிய குச்சியில் வலையை வட்டமாகக் கட்டி குளம், ஏரி போன்றவற்றில் மேயும் மீனை அரித்து எடுக்கப் பயன்படும் மீன் பிடிகருவி. இக்கருவி பெரும்பாலும் ஏரிகளில் உள்ள மீனைப் பிடிக்கப் பயன்படுகிறது.

கப்பு வலை




## 6. தூண்டில்

இக்கருவி அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது. கவை/ கொக்கி போன்று அமைப்புடைய இரும்பு முள்ளில் நரம்பினை இணைத்து அதன் இடையில் நெட்டித்தக்கை பொருத்தப்படுகிறது. இவ்வாறு தயார் செய்யப்பட்ட நரம்பு பலமான மூங்கில் குச்சியின் நுனியில் கட்டப்படுகிறது.

### பிடிக்கும் முறை

முள்ளில் நாக்குபூச்சி (மண்புழு) சிறிய மீன் போன்றவற்றை உணவாகப் பொருத்தி, மீன் உள்ள நீர் நிலையில் போடுதல். மீன் அவ்வுணவினை விழுங்கி இழுக்கும்போது தக்கையின் அறிகுறியால் உணர்ந்து வேகமாகச் சொடுக்கி இழுத்து (முள்ளை மீனின் வாய்/ வயிற்றுப்பகுதியில் மாட்ட

வைத்து) மீனைப் பிடித்தல். சிலவகை தூண்டில், குச்சி இல்லாமலும் இருக்கும். இதற்கு 'எறி தூண்டில்' என்று பெயர்.

தூண்டில்




## 2) எலி பிடிக்கும் கருவிகள்

கிராமப் புற மக்களிடம் எலி ஒரு முக்கிய உணவு. விலை கொடுத்து வாங்காமல் ஆடு, கோழிக்கு இணையாக இலவசமாகப் பெறும் மாமிச உணவு. வயல்களில் வாழும் எலிகள் மட்டுமே உணவுக்குப் பயன்படுவன. இதனைப் பிடிக்க பல கருவிகள் பயன்பாட்டில் உள்ளன.

1. கிட்டி
2. எலிப்பறி
3. பொகப்பானை

### 1. கிட்டி

இக்கருவி மூங்கில் பிளாச்சி, சைக்கிள் டியூப், ஈர்க்குச்சி, ஆகியவற்றால் தயார் செய்யப்படுகிறது. இக்கருவியைத் தனிப்பட்ட முறையில் யாரும் வைத்திருப்பது இல்லை. விவசாய நெற்பயிரை அழிக்கும் எலிகளை இரவில் வைத்து பிடிக்கப் பயன்படுகிறது. 100, 75 என்ற எண்ணிக்கையில் தயார் செய்து எலிப்பிடிக்கும் தொழில் நடத்துபவரிடம் மட்டுமே இக்கருவிகள் உள்ளன. இக்கருவி வளர்ந்த நெற்பயிரில் மட்டுமே வைத்து எலியைப் பிடிக்க முடியும். மற்ற இடங்களில், பயிர்களில் பயன் படுத்த முடியாது.

விதிமுறை

1. நெற்பயிர் கதிர்கட்டும் தருவாயில் உள்ள நெற்பயிராக இருக்க வேண்டும்.
2. அப்பயிர் சற்று வளர்ந்ததாக இருக்க வேண்டும்.

3. நெற்பயிரின் வயலில் ½ அடி உயரத்திற்காவது நீர் இருக்க வேண்டும். இந்தத் தன்மையைக் கொண்ட நெற்பயிரின் வயல், வரப்புகளில் உள்ள எலியை பிடிக்க மட்டுமே பயன்படும்.

4. நெல் பொரியில் தேங்காய் எண்ணெய் தடவி அதை இக்கருவியின் இடையில் வைத்து எலி, பொரியைச் சாப்பிடும் போது கிட்டியில் அகப்பட்டு மாட்டிக் கொள்வது. பெரும்பாலும் இக்கருவி எலியை அழிக்க மட்டுமே பயன்படுகிறது. அதோடு, விடியற்காலையில் மாட்டிக்கொண்டு உயிரோடு இருக்கும் எலி உணவிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக இக்கருவி தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றது.

கிட்டி




## 2. எலிப்பறி

கம்பி பொருத்தப்பட்ட பலகையில் உணவு வைத்து எலிகளைப் பிடிக்க பயன்படுகிறது. இக்கருவி வீட்டில் உள்ள எலிகளைப் பிடிக்கப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல் வயல்களில், தோட்டங்களில் மேயும் எலியை பிடிக்கவும் பயன்படுகிறது. இதில் மாட்டிகொள்ளும் எலிகள் உணவிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

எலிப்பறி



## 3. பொகப்பானை

இக்கருவி வயல், வரப்புகளில் பொந்துகளில் வாழும் எலிகளைப் பிடிக்க பயன்படுகிறது. பானையில் பசுமையான தழை, நனைந்த விறகுகளைத் திணித்து உள்ளே நெருப்பினைக் கொட்டி, அதனால் ஏற்படும் கையை எலிவளையில் செலுத்தி எலியை வெளியில் வரவழைத்து அல்லது மயக்கமடையச் செய்து பிடிக்கப் பயன்படுகிறது. பொகப்பானை என்ற இந்தக் கருவி எலியை உணவிற்காகப் பிடிக்க மட்டுமே தயார் செய்யப்படுகிறது. இக்கருவி எலியைப் பிடிப்பதற்காக உள்ள தனிக்கருவி கிடையாது. எலி பிடிக்கும் சமயத்தில் அக்கருவி தற்காலிகமாக உருவாக்கப் படுகிறது.

பொகப்பானை




## 3) நண்டுபிடி கருவிகள்

### கிலிக்கி

இக்கருவி கோடைக் காலங்களில் வயல், வரப்பு பொந்துகளில் வாழும் நண்டை ஒலி எழுப்பி பொந்தின் வாய்ப் பகுதிக்கு வரவழைத்து அதன் கால்களில் சுருக்கால் மாட்டி பிடிக்கப் பயன்படுகிறது. இக்கருவி உணவிற்காக நண்டைப் பிடிக்கப் பயன்படுகிறது. பெரும்பாலும் வியாபார நோக்கில் பிடிக்காமல் தன் சொந்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவே இக்கருவி தயார் செய்யப்படுகிறது.

**தயார் செய்யும் முறை**

ஊமச்சி கூடு – இது இறந்து போன சிறு நத்தையின் கூடு. இதனை உள்பகுதியில் ஓட்டைப் போட்டு இரும்புக்கம்பியில் வரிசையாக கோர்த்து சிறு மூங்கில் குச்சியின் நுனிப் பகுதியில் கட்டிக் கொள்ளுதல். அதன் பின் பகுதியில் முறுக்கிய நூலால் பின்னப்பட்ட ஒரு சுருக்கு நூல் பொருத்தப்படுகிறது. இக்கருவிதான் கிலிக்கி. இதற்குத் துணைக் கருவியாக ஒரு பகுதியில் கவை உடைய சிறு மூங்கில் குச்சி இதன் அமைப்பு 7 (ஏழு) என்ற அமைப்பில் உள்ளது. அடுத்து இடிக்கட்ட, நண்டு வாழும் பொந்தை இடிப்பதற்காகக் கூர்மையாக செய்யப்பட்ட ஒரு சிறு மரக்கட்டை.

**பிடிக்கும் முறை**

கிலிக்கியால் நண்டு வளையின் வாய்ப் பகுதியில் முன்னும் பின்னும் ஆட்டி ஒலியெழுப்பி (அவ்வொலி நீர் பாயும் சத்தம் போன்ற ஒலி) அவ்வொலியின் ஓசையில் நண்டை அவ்வளையின் முன் பகுதிக்கு வரவழைத்து அதன் கொடுக்கில் கிலிக்கியின் பின்பகுதியில் உள்ள சுருக்கால் மாட்டப்படுகிறது. அவ்வாறு மாட்டப்பட்ட நண்டு, வலையின் உள்பகுதிக்கு சென்று விடாமல் இருக்க கவையை இடுக்கியில் விட்டு நண்டின் முதுகுப்புறத்தில் அணைத்து பிடித்து, மரக்கட்டையால் பொந்தின் வாய்ப்பகுதியை உடைத்து நண்டை வெளியே எடுக்க பயன்படுகிறது. இக்கருவி நீர் வற்றிய கோடைக் காலங்களில் பொந்தில் வாழும் நண்டை மட்டும் பிடிக்க பயன்படுகிறது. இதன் வட்டார வழக்காகப் பல இடங்களில் குச்சியில் 'காத்தாடி' பொருத்தப்பட்ட கருவியிலும் ப்யன்படுத்தப்படுகிறது.

கிலிக்கி




## பறவைகளைப் பிடிப்பது

### குயில் பிடி கருவிகள்

குயில்களைப் பிடிக்கப் பலவகைக் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. அதில் ஒரு கருவியான குயில் தட்டை மட்டும் கீழே விளக்கலாம்.

### 1. குயில் தட்டு

இக்கருவி குயிலைப் பிடிப்பதற்காக அனைத்துக் காலங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. வீட்டின் தோட்டத்தில் அடர்ந்த மரங்கள் நிறைந்த இடத்தில் இக்கருவி பொருத்தப்படுகிறது.

**தயார் செய்தல்**

பாளை, கயிறு, நொச்சிக்குச்சி போன்ற பொருள்களால் வலை போன்று பின்னப்பட்ட வட்ட வடிவத்தட்டு. அத்தட்டின் மேல் பகுதியில் நரம்பால் சுருக்கு அமைக்கப்படுகிறது. குயில் விரும்பி உண்ணக்கூடிய பழங்களான கோவைப்பழம், ஓணான் கொடிப் பழம் போன்றவற்றைக் கட்டி

தொங்க விடப்படுகிறது. பழத்தை குயில் தின்னும்போது காலிலும், கழுத்திலும் மாட்டிக் கொண்டு கத்தும் போது பிடிக்கப்படுகிறது.

குயில் தட்டு




## மடையான் பிடிக்கும் கருவிகள்

மடையானைப் பிடிக்க பெரும்பாலும் இரண்டு முறை பயன்படுத்தப் படுகிறது. அந்த இரண்டுமுறையைக் கீழே விளக்குவோம்

1. மடையான் வலை

2. கண்ணி

### 1. மடையான் வலை

மடையான் நமது கிராமத்தில் வாழும் நாட்டுப்புறப் பறவை கிடையாது. குறிப்பிட்ட மழைக் காலங்களில் மட்டுமே வெளியிலிருந்து பறந்து வரும் பறவை. வயல் வரப்புகளில் மேயும் மடையான்களையும் பறந்து செல்லும் மடையான்களையும் ஒலியெழுப்பி வலையுள்ள இடத்தில் அமர வைத்து பிடிக்கப் பயன்படும் கருவி.

**தயார் செய்தல்**

வெண்மையான வலையில் அவுரிச் செடியின் சாயத்தை நனைத்து நெற்பயிரின் நிறத்திற்கு மாற்றுதல். பத்து அடி நீளம் 4 அடி அகலத்திற்குத் தயார் செய்யப்பட்ட வலையில் அகலத்தின் இரு மருங்கிலும் இரு கழியைப் பொருத்துதல். வலையை இழுத்துக் கட்டுவதற்காக இரு முளைக்குச்சி இருபக்க மூலைகளிலும் இணைத்தல். பார்வை மடையான் அமர்வதற்கு 'T' வடிவில் செய்யப்பட்ட ஒரு மரக்கட்டை, 200 மீட்டர் நீளமுடைய இழு கம்பி.

**வலையைப் பொருத்துதல்**

கதிர்வராமல் வரப்பின் அளவிற்கு மட்டும் வளர்ந்த நெற்பயிரின் வரப்பைத் தேர்வு செய்தல். வலையை அவ்வரப்பின் ஓரத்தில் உள்ள நெற்பயிரில் போட்டு இழுத்தால் வரப்பை வந்து மூடும் அளவிற்கு இருமருங்கிலும் முளைக்குச்சியைச் சொறுகி அமைத்தல். அவ்வலைக்கு, வரப்பின் எதிர் வயலில் பொருத்தப்பட்ட T வடிவத்தாங்கியில் இரண்டு

கண்களும் கட்டப்பட்ட மடையானை அமரவைத்தல். அதன் வயிற்றின் அடிப்பகுதியின் முடியில், நரம்பால் சுருக்குப் போட்டு அதன் கயிறும், வலையில் ஒரு பகுதியில் பொருத்தப்பட்ட இழு கம்பியையும் வலை அமைக்கப்பட்ட எதிர் திசையில் அமர்ந்து கொள்ளுதல். அப்பார்வை மடையானின் நரம்பை இழுத்து அதனை பறக்கச் செய்து, அதனோடு வாயாலும் அப்பறவை கத்துவது போன்று ஒலியெழுப்பி, பறந்து வரும் மடையான் அவ்வரப்பில் அமரும்போது இழுகம்பியால் வலையை இழுத்து மடையானை அகப்பட வைத்தல். ஒரே நேரத்தில் 10/15 க்கு மேற்பட்ட மடையான்களைப் பிடிக்க இம்முறை பயன்படும். பெரும்பாலும் இவ்வாறு பிடிக்கப் பயன்படும் மடையான்கள் விற்பனைக்காகவே பயன்படுத்தப் படுகின்றன. இத்தொழில் மழைக்காலங்களில் மட்டுமே நடைபெறக் கூடியது.

மடையான் வலை




## 2. கன்னி

இக்கருவியும் மடையான்களைப் பிடிக்கப் பயன்படுகிறது. சுருக்கு நரம்பு பொருத்தப்பட்ட மூங்கில் குச்சி வரிசையாக வரப்பில் சொருகப்பட்டு நடந்துவரும் மடையானின் காலில் மாட்டச் செய்து பிடிக்கப் பயன்படும் கருவி.

### தயார் செய்தல்

சிறு சிறு மூங்கில் குச்சியில் சுருக்கு நரம்பினை ஒரு முனையில் நூலால் இறுகக் கட்டுதல். இதுபோன்று ஐம்பதுக்கும் மேற்பட்ட சொறுவுக்குச்சியை வரிசையாக இணைத்துப் பின்னுதல். காலில் மாட்டிய மடையான் அக்கண்ணியோடு பறந்து விடாமல் இருப்பதற்காக வரப்பில் பொருத்தப்பட்ட குச்சியில் இணைத்தல்.

கண்ணி




**கவண்**

இதுவும் பறவைகளைக் கல்லால் அடித்துப் பிடிப்பதற்காகப் பயன்படுவது. பெரும்பாலும் இதனைப் பயன்படுத்துவோர் ஆண்கள்.

**தயார் செய்யும் முறை**

உள்ளங்கை அகலத்தில் தயார் செய்யப்பட்ட தோல், கயிற்றில் பின்னப்பட்ட வலையின் இரு முனையிலும் இரு சிறு கயிற்றை இணைத்தல். அதன் ஒரு பகுதியில் கல்லை வைத்து இரு கயிற்றையும் இணைத்துப் பிடித்துச் சுற்றி, பறந்து செல்லும் பறவைகளை அடித்து விழச் செய்து பிடிக்கப் பயன்படுகிறது. இது கவண்டி/கவுண்டி/என்றும் வட்டார வழக்கில் கூறப்படுகிறது.

## கேட்டாபெல்ட்

இதுவும் பறவை, நீரில் மேயும் மீனைப் பிடிப்பதற்காகப் பயன்படுகிறது. இதனை தயார் செய்யும் (Y) வடிவத்தில் உள்ள மரக்கிளையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கவை. அந்தக் கவையின் இரண்டு கட்டை நுனியிலும், இரண்டு வார் (சைக்கிள்/ரப்பரில் தயார் செய்யப்பட்ட டியூப்) களை இறுகக்கட்டி அதன் நுனிப்பகுதியில் ஒரு சிறு கல் வைத்தால் அதில் அடங்கும் அளவில் தோல் தயார் செய்து இணைத்தல். அத்தோலில் கல் வைத்து கவட்டையை ஒரு கையிலும், கல் பகுதியை மற்றொரு கையிலும் பிடித்து இழுத்து, பறந்து செல்லும் பறவை அல்லது நீரின் மேற்பகுதியில் மேயும் மீனை வேகமாக அக்கல்லினால் அடித்து இறந்து போகும் மீன்/பறவையைப் பிடிக்க இக்கருவி பயன்படுகிறது.

இதுபோன்று எத்தனையோ கருவிகள் மக்களிடம் புழக்கத்தில் தற்போது இருக்கின்றன. சில கருவிகள் மறைந்தும் விட்டன.

இது போன்று எல்லாத் துறைகளிலும் உள்ள கருவிகளை அடையாளம் கண்டு பதிவு செய்ய வேண்டும். மேலே குறிப்பிட்ட அனைத்து கருவிகளின் செயல்பாடுகளைக் கீழ்கண்டவாறு விளக்கலாம்.

| கருவிகளின் பயன்பாடு | வேட்டைக் கருவிகள் | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கச்சா | ஊத்தா | பறி | உறி வலை | கப்பு வலை | தூண்டில் | கிட்டி | எலிப்பறி | பொதப் பானை | கிலிக்கி | குயில் தட்டு | மடையான் வலை | கன்னி | கவன் | கேட்டா பெல்ட் |
| மீனைப்பிடிக்கப் பயன்படுவது | + | + | + | + | + | + | - | - | - | - | - | - | - | - | - |
| எலி பிடிக்கப் பயன்படுவது | - | - | - | - | - | - | + | + | + | - | - | - | - | - | - |
| பறவைகள் பிடிக்கப் பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | + | + | + |
| நண்டு பிடிக்கப்பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - |
| குயில் பிடிக்கப்பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | - | | + | - | - | - | - |
| மடையான் பிடிக்கப்பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | - | - |
| நீரை இறைத்து மீன் பிடிக்கப்பயன்படுவது | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| நீரின் உள்ளே கருவியை மட்டும் விட்டு மீன்பிடிக்கப் பயன்படுவது | - | - | - | + | - | + | - | - | - | - | - | - | - | - | - |
| கரையில் இருந்து மீன் பிடிக்கப் பயன்படுவது | - | - | + | - | - | + | - | - | - | - | - | - | - | - | - |
| நீரின் உள்ளே கருவி, பிடிப்பவர் இருவரும் இறங்கி மீன் பிடிக்கப்பயன்படுவது | + | + | + | ± | + | - | - | - | - | - | - | - | - | - | - |
| நீர் வடியும் போது மீன் பிடிக்கப் பயன்படுவது | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஒவ்வொரு மீனாகப் பிடிக்கப் பயன்படுவது | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - |
| பறவை பறக்கும் போது பிடிக்கப் பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + |
| தரையில் அமரும் போது பிடிக்கப் பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | - | + |
| மரக்கிளையில் அமரும் போது பிடிக்கப்பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - |
| உணவு அருந்தும் போது பிடிக்கப்பயன்படுவது | - | - | - | + | - | - | + | + | - | - | + | - | - | - | - |
| பொந்துகளில் வாழ்வதைப் பிடிக்கப் பயன்படுவது | - | - | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - |

# 3. மண்வெட்டி

மண்வெட்டி maN-veTTi, n. <id. +.Hoe. especially with short handle; spade, மண் தோண்டும் கருவி வகை (lexicon); மண்வெட்டி பெ. (மண்ணை வெட்டி அள்ளிப் போடப்பயன்படுத்தும்) மரக்கட்டையால் தடித்த இரும்புத் தகடு பொருத்தப்பட்ட கருவி, hoe with a short handle spade (criya); இவ்வாறு மண்வெட்டிக்கு அகராதிகள் தரும் விளக்கங்கள் அமைந்துள்ளன. இம்மண்வெட்டி நாட்டுப்புற விவசாயக் கருவிகளுள் ஒன்று. குறிப்பாக விவசாயத்தில் மண்ணை வெட்டுவதற்காகப் பயன்பட்டாலும் தொடர்புடைய மற்ற தொழிலுக்கும் அதிகம் பயன்டுவது. அருவா, கலகொட்டு, கலப்பை, நுகத்தடி, வடகயிறு, மொலகழி, சட்டகலப்பை, பரம்புபலகை, பல்லுனிகலப்பை இது போன்று விவசாயத்திற்கு பல கருவிகள் இருந்தாலும், எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் (நிலம்), எல்லாப் பயிர்த் தொழிலுக்கும் பயன்படக்கூடிய ஒரே கருவி மண்வெட்டி என்றால் மிகையாகாது. இக்கட்டுரை மண்வெட்டியின் பயன்பாடு, அதன் தன்மை, வட்டாரவழக்குச் சொல், பொருள் (object) மாற்றம் போன்றவை பற்றி விவரிக்கும்.

## மண்வெட்டியின் அமைப்பு

இக்கருவியின் அமைப்பு இடத்திற்கு இடம் சிறுசிறு வடிவமாற்றம் பெற்றிருந்தாலும் பொதுத்தன்மையாக, மண்ணை வெட்டும் பகுதி வலிமையான இரும்புத் தகட்டாலும் (1 அடி நீளம் ½ அடி அகலம்) கையில் பிடிப்பதற்காக (தகட்டோடு இணைந்த) மரத்தால் செய்த உருண்டை வடிவான ஒரு கைப்பிடிக்குள் அடங்கும் 1½ அடி நீளமுள்ள மரத்துண்டும் இணைந்த ஒரு கருவி. ஒரு வட்டாரத்தில் இருக்கும் விவசாயக் கருவிகள் மற்றொரு இடத்தில் இல்லாமல் இருக்கின்றன. ஆனால் மண்வெட்டி மட்டும் தமிழ்நாடு முழுவதும் பயன்பாட்டில் இருக்கின்றது. எத்தனையோ கருவிகள் புது வடிவ மாற்றம் பெற்றாலும் இக்கருவி அதே வடிவத்துடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பயன்படுத்துவோர்

விவசாயத்தில் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித்தனிக் கருவிகள் இருக்கின்றன. ஆனால், இம்மண்வெட்டி இருபாலரும் கையாண்டாலும் மிகுதியாகப் பயன்படுத்துவோர் ஆண்களே. விவசாயத்தில் ஆணின் வேலைத் திறமையை மதிப்பீடு செய்வதற்கு மண்வெட்டியே இன்றும் சான்றுகோளாக இருக்கின்றது. விவசாயத்தில் முதன்முதலில்

தொழில், பழக்கத்திற்கு வரும்போது மண்வெட்டியைக் கையாள்வதற்கு அனுமதிப்பதில்லை. ஆனால், மண் வெட்டியைப் பிடித்துச் சரளமாகக் கையாளக் கற்றுக் கொள்ளும்போது விவசாயத் தொழிலில் மிகுந்த அனுபவம் பெற்றவராகவும் கருதப்படுகின்றார்.

## மண்வெட்டியின் தேவைமிகுந்த நிலப்பகுதி

தமிழ்நாட்டில் பல்வேறு நிலப் பகுதிகள் இருக்கின்றன. குறிப்பாக தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், வேலூர் போன்ற மலையும் மலை சார்ந்த பகுதிகளில் மண்வெட்டியின் பயன்பாட்டை விட வயலும் வயலைச் சார்ந்த இடமான தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் போன்ற நிலச் சேற்றுப் பகுதிகளில் அதிகப் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

## செய்யப்படும் வேலை

இக்கருவி ஏர்கலப்பைக்கு இணையான தொழில் தன்மையைக் கொண்டது மட்டுமல்லாமல், மண்ணை வெட்டுவது, கொத்துவது, வரப்பைக் கழிப்பது, போடுவது, வாழை, மரவள்ளி போன்றவைகளுக்குக் களை எடுப்பது, நிலக்கடலை, மஞ்சள், இஞ்சி, வெற்றிலை, வாழை, கரும்பு போன்றவற்றிற்குப் பாத்தி, பார் போடுவது, மண் அல்லாத புல்லை மட்டும் செதுக்குவது, ஓரிடத்திலிருந்து மண்ணை இடமாற்றம் செய்ய, வெட்டி வீச, போட போன்ற எண்ணற்ற வேலைகள் இம்மண் வெட்டியால் செய்யப்படுகின்றன.

## விவசாயியின் அடையாளம்

ஒரு விவசாயி என்பதற்கு அடையாளக் குறியீடு செய்யும் போது (இடையில் வேட்டி, தலையில் முண்டாசு, தோளில் கலப்பை அல்லது மண் வெட்டி) இரண்டுமே இருந்தாலும் மிகுதியாக விவசாயியை அடையாளம் காட்டுவது மண்வெட்டியே. விவசாயியின் தோளிலோ/ கையிலோ மிகுதியாகக் காலை முதல் மாலை வரை மட்டுமல்லாமல் பயிர் வேலை துவங்கி அது முடியும்வரை ஒட்டி உறவாடும் ஒரு கருவி மண் வெட்டியாகத்தான் இருக்கும்.

## வட்டார வழக்குச்சொல்

மண்வெட்டி என்ற சொல் வட்டாரத்திற்கு வட்டாரம் மக்களிடம் பல்வேறு ஒலித்திரிபுகளில் ஒலிக்கப்படுகிறது. சில பகுதிகளில் ஒலிமாற்றம் பெற்றிருக்கின்றன. வேறு சில இடங்களில் ஒலிமாற்றம் பெறாமல் அதற்கிணையான சொல்லே வழங்குகின்றது. உதாரணமாக; தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மண்வெட்டி என்ற சொல்லுக்கு இணையாக/

சனிக்கி என்ற வார்த்தை கன்னடத்திலிருந்து இம்மாவட்டங்களுக்கு கடன் வாங்கப்பட்டுள்ளது.

ஒலிமாற்றம்

| மண்வெட்டி | | maNveTTi - (St) |
|---|---|---|
| திருச்சி | – | மம்புட்டி (mampuTTi) |
| நாகை | – | மமுட்டி (mamuTTi) |
| கடலூர் | – | மமட்டி (mamaTTi) |
| நாமக்கல் | – | மம்புட்டி, மமுட்டி, மமட்டி |
| பெரம்பலூர் | – | மம்முட்டி (mammuTTi) |
| கன்னியாகுமரி | – | நம்பட்டி (nampaTTi) |
| கிருஷ்ணகிரி | – | சனுக்க/சனிக்கி (canukka/ canikki) |
| சிவகங்கை | – | மம்பட்டி (mampatti) |
| தூத்துக்குடி (வரதராஜபுரம்) | – | வம்பட்டி (vampatti) |

## மண்வெட்டியின் வடிவமாற்றம்

இக்கருவியின் வடிவமாற்றம் பல காரணங்களினால் நடந்திருந்தாலும் முக்கியமாக நான்கு காரணங்களைக் கூறலாம்.

1. பயிரின் தேவைக்கேற்ப மாறுபடுதல்
2. மண்ணின் தன்மைக்கேற்ப மாறுபடுதல்
3. மக்களின் பழக்க வழக்கத்திற்கு ஏற்ப (வட்டாரத் தன்மை) மாறுபடுதல்
4. தொழிலின் தேவைக்கேற்ப வடிவம் மாறுபடல்.

## பயிரின் தேவைக்கேற்ப மாறுபடுதல்

விவசாயத்தில் முதன்மை இடமாக விளங்கிய தஞ்சாவூர் பகுதியின் மண்வெட்டி வடிவத்தைத் தலையாகக் கொண்டு அதிலிருந்து வேறுபடும் வகைகளைக் காணலாம்.

### தஞ்சாவூர் மண்வெட்டி:



**(i) கரும்பு பயிருக்குப் பயன்படுவது:**



**(ii) மரவள்ளிக் கிழங்குக்குப் பயன்படுவது:**



**மண்ணின் தன்மைக்கேற்ப மாறுபடுவது**

**(i) சேற்று வயலுக்குப் பயன்படுவது:**

குறிப்பாகத் தஞ்சை, கடலூர் போன்ற பகுதி



**(ii) வானம் பார்த்த நிலம், கல்/பாறை நிறைந்த மண்ணுக்குப் பயன்படுவது :**



**தொழிலின் தேவைக்கேற்ப மாறுபடுதல்**

**(i) கட்டடத் தொழிலுக்குப் பயன்படுவது :**

(ஜல்லி, கலவை, மணல் போன்றவை அள்ள, சாலைத் தொழில் போன்றவை)



## (ii) பாம்பு, எலி பிடிக்க-வரப்பை வெட்டப் பயன்படுவது:



### மக்களின் சமூக வாழ்வியலுக்கு ஏற்ப மாறுபடுதல்

தஞ்சையில் இருக்கும் விவசாயிகளிடம் உள்ள கருவிகளின் அமைப்பிற்கும் மதுரையில் உள்ள விவசாயிகளிடம் உள்ள விவசாய கருவிகளுக்கும் வடிவத்தில் மிகுந்த மாற்றம் உள்ளது. அது அவர்களின் பரம்பரையாக வழங்கி வந்த சமூகச் சூழலுக்கு தகுந்தாற்போல் மண்வெட்டியும் உள்ளது. தஞ்சாவூர் போன்ற சேற்றுப் பகுதி நிறைந்த இடங்களில் உள்ள விவசாயிகள் மண்வெட்டியின் காம்பில் இரு பூண்கள் இணைந்த கோடி மண்வெட்டி எனப்படும் கருவியே பழக்கத்தில் உள்ளது. இதுவே மணற்பாங்கான நிலம், அதிகம் சேற்றுப்பிடிப்பு குறைந்த பாறை, கல் நிறைந்த நிலங்களான சேலம், நாமக்கல், தருமபுரி இடங்களில் மண்வெட்டியின் அளவு குட்டையாகவும், குனிந்து வேலை செய்வதாகவும் இருக்கின்றது.

### மண்வெட்டியின் பாகம்

பொதுவாக, விவசாயக் கருவிகளின் பாகங்கள் பெரும்பாலும் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடாமல் ஒரே சொற்களைக் கொண்டு வழங்குகின்றன. ஆனால் மண்வெட்டியின் பாகங்களை ஒப்பிடும்போது மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றம் பெற்று வழக்கத்தில் உள்ளன. மண்வெட்டி இலையின் மேற்பகுதியில் உள்ள கூர்ப்பகுதியை தஞ்சாவூர் மாவட்டத்தில் **பித்தம்** என்றும் நாமக்கல் மாவட்டத்தில் **கூவு** என்றும் கடலூர் மாவட்டத்தில் **கூரு** என்றும் மக்களின் பேச்சுவழக்கில் வழங்கப்படுகின்றது.



இப்பகுதிப் பிரிவில் உள்ள சொற்கள் சில வட்டாரங்களில் குறைவாகவே குறிக்கப்படுகின்றன. ஆனால் இப்பகுதிகள் அனைத்தும் தஞ்சைப் பகுதியில் வழங்கப்படுகின்றன.

இம்மண்வெட்டியின் பாகங்களைப் பற்றி நாகைப் பகுதி மயிலாடுதுறை விவசாயிகளிடம் கேட்டபோது அவர்கள் சொன்ன சொற்களும் சொற்களின் பொருளும் பொருண்மை நோக்கில் அமைந்திருப்பது சிந்திக்க வைத்தது.







**காம்பு, மலர், இலை, அடி** என மரத்தின் பாகங்களை மண் வெட்டிக்கு வைத்திருப்பது சிந்திக்கத்தக்கது.

## மண்வெட்டியின் வகைகள்

மண்வெட்டியில் பல வகைகள் இருந்தாலும் குறிப்பாக மூன்றைக் குறிப்பிடலாம்.

1. கோடி மண்வெட்டி/முழுகொட்டு 'நீண்ட இலையைக் கொண்ட மண்வெட்டி'



2. அரகொட்டு/கட்டகொட்டு 'கோடி மண்வெட்டியில் பாதி அளவு'



3. எசப்பு மண்வெட்டி – மண்வெட்டி இலையில் இருபகுதியாக இணைத்து வைத்தது. 'இவ்வகைகள் நாகைப் பகுதியில் உள்ளன'

## அளவை (Measure)

இம்மண்வெட்டி நீட்டல் அளவையில் நிலத்தில் ஆழத்தை கணக்கிடவும் நிறுத்தல் (Quantity) அளவையில் மண்ணின் அளவை கணக்கிடவும், மண் வெட்டியின் இலையை வைத்தே விவசாயிகள் கணக்கிடுகின்றனர். உதாரணமாக

1. ஐந்து கொட்டு மண் இங்கே எடுத்துப்போடு என்றால் 'ஐந்துமுறை மண்வெட்டியால் மண்ணை எடுத்தல்'

2. ஒரு கொட்டு ஆழம் தோண்டினால் போதும் என்றால் 'மண்வெட்டி இலையின் அளவு ஆழம் தோண்டுதல்' போன்ற அளவைகள் கணக்கிடவும் இம்மண்வெட்டி பயன்படுகிறது.

## வட்டார வழக்கில் மண்வெட்டி

இம்மண்வெட்டியின் வடிவ மாற்றம் மற்றும் வார்த்தை மாற்றம் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகிறது. வார்த்தை மாற்றம் முன்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விடம் வடிவ மாற்றம் காணலாம்.

இந்த விவசாயக் கருவிகளில் மண்வெட்டி விவசாயியின் தோளில் சுமந்து செல்லும் பாசமிகு கருவியாகப் பயன்படுகிறது. இக்கருவியான மண்வெட்டியை வைத்துப் பழமொழிகள், விடுகதைகள், சிறுகதைகள், போன்றவையும் பெருகி உள்ளன. இந்த அளவிற்கு மண்வெட்டியின் பயன்பாடு இருப்பதைக் குறிப்பாகத்தான் விளக்கப்பட்டது.

# 4. கழி

எந்த ஒரு வேலை செய்தாலும் கருவியின் உதவியின்றிச் செய்வது கடினம் தான். கருவியே மனிதனின் பாதி பலம். விவசாயத்தில் எத்தனையோ கருவிகள் பயன்பட்டு வருகின்றன. இதில் பல கருவிகள் விலை கொடுத்து வாங்குவதும் சில கருவிகள் தானாகத் தன் முயற்சியால் தன் விருப்பத்திற்கு தன்னுடைய பயன்பாட்டிற்குத் தக்கவாறு வீட்டில் தயார் செய்வதும் உண்டு. இதில் எளிமையாக, மூலப்பொருள் தன் இருப்பிடத்தைச் சுற்றியே பெற்று ஒரு சிறந்த உபகரணமாகப் பழக்கத்தில் இருப்பது இந்த கழி வகை கருவிகள் தான். இக்கழிகளின் பயன்பாடு பல்வேறு சூழல்களில் பல்வேறு நேரங்களில் மனிதனுக்குப் பக்கபலமாகவும் பாதுகாப்பாகவும், உழைப்பிற்கு உறுதுணையாகவும் இருந்து வருகின்றது.

நாட்டுப்புற வேலைகளுக்குப் பயன்படும் பல கருவிகள் மரத்திலிருந்து தான் செய்யப்படுகிறது; பிரிக்கப்படுகிறது. அதிலிருந்து பிரித்துசெய்து புது வடிவம் பெறும் போது அதன் பெயர்களும் மாறுகின்றன.

உதாரணமாக

ஆப்பு – மரத்தைப் பிளக்க, இணைப்பில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக மரத்தால் செய்யப்படும் கூம்பு வடிவ மரக்கட்டை.

சட்டம் – மரத்திலிருந்து அறுத்துப் பிரிக்கப்படும் குறிப்பிட்ட அளவுள்ள கட்டை.

கொட்டாபுளிகட்ட – மொளக்குச்சி போன்றவை நிலத்தில் அடித்து இறக்குவதற்காகப் பயன்படும் கைப்பிடியுள்ள தடித்தகட்டை.

மட்டப்பலக – புதிதாகக் கட்டப்படும் சுவர் போன்றவை மட்டம் பார்ப்பதற்காக மரத்தில் செய்யப்பட்ட சமமாக உள்ள நீள்சதுரக்கட்டை.

பலாகட்ட – அமருவதற்காக மரப் பலகையில் செய்யப்பட்ட ½ அடி உயரம் கொண்டு இருமருங்கிலும் கால்கள் பொருத்தப்பட்ட சிறு தாங்கு பலகை.

ஏர்கா – கலப்பையில் கொழுவையும் நுகத்தடியையும் இணைப்பதற்காகப் பயன்படும் நீண்ட மரத்தடி.

தூண் – கூரை, சுவர் போன்றவை தாங்குவதற்காகச் செய்யப்படும் தடித்தமரம்.

தந்திக்கட்ட – வீட்டின் கூரை சுவரில் படாமல் இருக்க மண் சுவரின் இடையில் அமைக்கப்படும் இரண்டு அடி நீளம் கொண்ட உருண்டைவடிவ மரக்கட்டை.

ஏணி, ஊஞ்சல் மற்றும் அனைத்து மரசாமான்களும் மரத்திலிருந்து, அதன் பாகத்திலிருந்து புது வடிவம் பெறும்போது, புதிய பெயர்களையும் புதிய பயன்பாட்டையும் பெறுகின்றன. ஆனால் அதே மரத்தின் பாகத்திலிருந்து எடுக்கும் போது தனித்தப் பெயர் பெறாமல் கம்பு, கழி என்று அடைமொழி பெற்று தனித்த பயன்பாட்டோடு வேலைக்குத் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படும் கருவிகளில் சிலவகைகள் மட்டும் இங்கே பார்க்கப்படுகின்றன.

## கழியின் வகைகள்

1. கழி (கழி, மரம், குச்சி)
2. தடிக்கழி
3. கவகழி
4. மொளகழி[1] / மொளக்குச்சி
5. மொள கழி[2]
6. அலக்குக் கழி / அலக்குக்குச்சி
7. பட்டங்கழி / பட்டங்கம்பு
8. அளவுகழி
9. வைக்கோல்கழி
10. தார்கழி / தார்கம்பு
11. சாட்டக்கம்பு / சாட்ட
12. கடக்கழி / கடகுச்சி
13. கடமொளக் குச்சி
14. குச்சி
15. மெண்டுகோல்
16. பத்துகழி
17. குத்தூசி
18. மோட்டுவளக் குச்சி

### 1. கழி

கழி பெ. தடிக்கம்பு stick- அதாவது மரத்தின் கிளைகள், சிறிய மரம் போன்றவற்றிலிருந்து தயார் செய்யப்படுவது கழி. இக்கழி அளவில் பெரியதோ, சிறியதோ ஒரு மனிதனால் தூக்கக் கூடியதாகவும், ஒரு கைப்பிடிக்குள் அடங்குவதாகவும் இருப்பதைக் கழி என்று கூறலாம். கழி என்பது பெரும்பாலும் வளைவின்றி நேராக இருப்பதைக் கழி என்று கூறலாம். இதில் ஏதேனும் வளைவு பெற்று, மாற்றம் பெற்றால் அதன் பெயர் அமைப்பு மாறுகிறது.

'கழி' என்பது மரம், குச்சி, கம்பு என அனைத்து வகையான கருவிக்கும் பொதுவான சொல். இச்சொல் இடத்திற்குத் தக்கவாறு வெவ்வேறு பொருளையும், வடிவத்தையும் பெறுகின்றது (அனைத்துக் கழிகளும் அடைமொழிப் பெற்றே வருகின்றன. மரம், ஒடிக்க முடியாதது.

குச்சி, கம்பு, கழி, ஒடிக்கக்கூடியது) இதனை உதாரணத்தோடு விளக்குவோம்.

## கழி, மரம், குச்சி, கோல், கம்பு

கழி, மரம், குச்சி, கோல், கம்பு இந்த வார்த்தைகள் அனைத்தையும் உதாரணம் மூலம் விளக்கி இதன் தனிப்பண்புகளை வெளிப்படுத்தலாம். கழியும், மரமும், ஒரு பிரிவில் அடங்கும். குச்சி, கோல், கம்பு மற்றொரு பிரிவில் அடங்கும்.

**மரம்** : பருத்த அடிப்பாகத்தையும், கிளைகளையும் உடையதாக உயரமானதாக வளரும் தன்மை கொண்டது.

**கழி** : தடியான தன்மை கொண்ட கம்பு.

**குச்சி** : 1. உலர்ந்து சிறுத்துக் காணப்படும் மெல்லிய கிளை.
2. சிலவகை மரத்திலிருந்து மிகவும் மெல்லியதாக நறுக்கப்பட்ட சிறிய துண்டு.

**கோல்** : சிராய்ப்பு நீக்கப்பட்ட வழு வழுப்பான கம்பு.

**கம்பு** : (stick) உருண்டையாகத் திருத்தமாக வெட்டி எடுக்கப்பட்ட மரக்கோல்

மேலே குறிப்பிட்ட அனைத்துச் சொற்களும் தனித்தனிப் பொருளைக் கொண்டிருந்தாலும், சில இடங்களில் சில வேறுபட்ட பொருளைத் தருகின்றன. குச்சி, கோல், கம்பு என்பது தெளிவாகப் பொருளை அடையாளம் காட்டுகின்றன. ஆனால் மரம், கழி இரண்டும் சில இடங்களில் ஒரு பொருளையும், சில இடங்களில் வேறுபட்ட பொருளையும் தருகின்றன.

உதாரணம்

1. சவுக்கை – மரம்/ கழி இரண்டாலும் அழைக்கலாம்.
   சவுக்கு மரத்தை வெட்டு
   சவுக்க கழியை வெட்டு

2. மூங்கில்– மரம்/கழி இரண்டும் உண்டு.
   மூங்கில் மரத்தை வெட்டு
   மூங்கில் கழியை வெட்டு

இவ்விரண்டு இடங்களில் இவ்விரு சொற்களும் (கழி/மரம்) பொருளைத் தருகின்றன. ஆனால்

வாழைமரம், வாழைக்கழி – இவ்விடத்தில் 'கழி' என்பது வாழை மரத்திற்குப் பொருந்தவில்லை.

வாழை மரத்தை வெட்டு ✓

வாழைக் கழியை வெட்டு ✗

புளிய மரம், புளியங்கழி – இவ்விடத்திலும் 'கழி' பொருந்தவில்லை.

புளியமரத்தில் கழி என்றால் அதன் கிளையாகப் பொருள் உணர்த்தப் படுகிறது. எனவே பருத்த கிளைகளைக் கொண்ட எந்த மரத்திற்கும் 'கழி' என்ற சொல் வருவதில்லை. கழி என்பதும் மரம் என்பதும் சில இடங்களில் இருவேறு பொருளைத் தருகின்றன. மரம் என்பது ஒடிக்க முடியாதது.

குச்சி, கம்பு, கழி என்பது ஒடிப்பதாகவும் இருக்கலாம், ஒடிக்க முடியாததாகவும் இருக்கலாம். சில வகைளை மரம் என்று மட்டுமே கூறமுடியும். சிலவகைகளை மரம், கழி என்று மட்டுமே கூறலாம். எனவே மரமும், கழியும் ஒரே பொருளைக் கொண்டாலும் சில இடங்களில் தனித்தனி பொருளைக் கொண்டது.

## 2. தடிக்கழி :

தடிக்கழி என்பது வைக்கோல் போன்ற தானியச் செடிகளை காயவைக்கும் போது அதை நன்றாகக் கிளறி, கிண்டி விடுவதற்காகப் பயன்படுகிறது. இது பெரும்பாலும் மூங்கில் குச்சியில் தயார் செய்யப்படுகிறது. ஆறு அடி நீளம் கொண்டு மேல்பாகம் சற்று தடித்ததாகவும் கீழ் பகுதி சிறுத்த வடிவிலும் அமைந்தது. அது உள்ளங்கையில் அடங்கும் அளவில் இருக்கும்.

பயன்பாடு

1. வைக்கோல் போர் போடும்போது போரில் ஏற்படும் மேடுபள்ளங்களைச் சமப்படுத்துவதற்காகப் பயன்படும்.
2. மாடுகளை மந்தையாக மேய்ப்பவர்கள் பயன்படுத்துவார்கள் (அல்லது) ஆடு, மாடுகளை கட்டுப்படுத்தி ஒரிடத்தில் மேயவிடவும் பயன்படும்.
3. ஊரைப் பாதுகாப்பவர்களான தலையாரி தற்காப்பிற்காகவும் இதை வைத்திருப்பார்
4. வீட்டுக்கூரையில் வைக்கோல் போடும் போது அதை சமப்படுத்துவதற்காகவும் பயன்படும்.

இக்கருவி இல்லாத தமிழ் மண்ணின் மைந்தர்களின் வீடே இல்லை என்று கூறலாம். அந்த அளவிற்குப் பயன்பாடு அதிகம். இக்கழியை பயன்படுத்துவது பெரும்பாலும் ஆண்கள்தான். இது பெரும்பாலும் மெல்லியதான அழுத்தமாக உள்ள மூங்கில் மரத்திலிருந்து எடுத்து (கல்லாங்கழி) தீயில் சூடுகாட்டி வாட்டி ஆறு அடி உயரத்திற்கு அமையப்பெற்றது. இக்கழி மழுங்கச் செய்த கணுக்களோடும் செய்யப்படும்.

ஊரில் சில பெரியவர்கள் அக்கழியை இயற்கையாக உள்ள கணு முண்டுகளுக்குப் பதில் நரம்பு, பெரம்பு, கூடை தயார் செய்யப் பயன்படும் ஒயர் ஆகியவைகளில் கணுக்களுக்குப் பதிலாக, கணுக்களுக்கு இடையில் அக்கணுக்கள் போன்று அப்பொருள்களால் அமைத்து அழகுப் படுத்தியும் வைத்திருப்பார்கள். (கல்லாங்கழி என்பது மூங்கில் மரத்தின் உள்கூடு குறைவு பெற்று மெல்லிய வலிமையுடைய கழி).



**3. கவக்கழி:**

இக்கழி பெரும்பாலும் கருவை மரத்திலிருந்து இயற்கையான கவை போன்ற அமைப்புடைய பகுதியிலிருந்து வெட்டி தயார் செய்யப்படுகிறது. இது பெரும்பாலும் விவசாயத்தில் கைக்கு இணையான வேலையைச் செய்கிறது. காய வைக்கப்பட்ட வைக்கோல், போராகப் போடப்பட்டுள்ள வைக்கோல் போன்றவற்றை கைகளால் அள்ளும்போது, அழுத்தி வைக்கப்பட்டதின் காரணமாக அதிகமாக வராது. கை நகங்களும் தேய்ந்து வலிக்க ஆரம்பிக்கும். இது மட்டுமல்லாமல் காடுகளில் உள்ள பயிர்களை அள்ளும் போது மற்ற விஷ சந்துகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் ஏழு (7) போன்ற அமைப்புடைய வடிவில் இக்கருவி தயார் செய்யப்படுகிறது. இது மிகுதியாக கருவேல மரத்திலிருந்து இயற்கையான முறையில் இணைப்பு செய்யப்படாமல் எடுக்கப்படுகிறது.

இதைப் பயன்படுத்துபவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களும் பயன்படுத்துகிறார்கள்.



இதன் வளைந்த பகுதி கால் அடி அல்லது அரைஅடி நீளத்திலும், கைப்பிடிப்பகுதி ஒரு அடி நீளத்திலும் அமைந்திருக்கின்றது. விவசாயத்தில் இதன் பங்கு அதிகம். இதனை 'கொரட்டு' என்றும் வட்டார வழக்கில் அழைக்கின்றனர்.

## 4. மொள கழி[1]/ மொளக்குச்சி

இக்கழி நாற்றுப்பறித்து அதன் வேர் பகுதியில் உள்ள சேற்றை அடித்து நீக்குவதற்காகப் பயன்படும். 3 அடி உயரமுள்ள கைப்பிடி சுற்றளவு உள்ள சிறுகழி. இது அனைத்து விதமான மரங்களிலும் தயார் செய்யப்படுகிறது. இக்கழி விவசாயத்தில் குறிப்பாக நெல் நாற்றுப்பறிக்கும் போது இக்கழியின் பயன்பாடு அதிகம். குறிப்பாக ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் இதன் பயன்பாடு அதிகம். அதனால்தான் இப்பகுதியில் இச்சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. சேலம், தருமபுரி, வேலூர் போன்ற மாவட்டங்களில் இக்கழிக்கு பயன்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. இக்கழியைப்பற்றியும், இதன் பயன்பாடு பற்றியும் சில கருத்துக்கள் தமிழக விவசாயிகளிடம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. விவசாயத்தில் சில செயல்கள் எல்லா இடத்திலும் சமமாக ஒரே விதமாகவும் நடப்பதில்லை. அதற்கு இந்த மொளக்கழியே உதாரணம். இக்கழியைப் பற்றி சில தகவல்களைப் பார்ப்போம்.

## நாற்றுப்பறிப்பது ஆண்கள் தொழிலா, பெண்கள் தொழிலா

விவசாயத்தின் வேலையை எடுத்துக் கொண்டால்,

1. ஆண்களுக்கென்று சில கருவிகள்
2. பெண்களுக்கென்று சில கருவிகள்

அதே போன்று கருவிகளையும் மூன்று வகையாகப் பகுக்கலாம்.

1. ஆண்களுக்கென்று சில கருவிகள்
2. பெண்களுக்கென்று சில கருவிகள்
3. இருவருக்கும் பொதுவான கருவிகள்

பொது அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. சில மாவட்டங்களில் உள்ள இந்தப் பிரிப்பு மற்ற மாவட்டங்களுக்குப் பொருந்துவது இல்லை; மாற்றம் பெறுகிறது.

1. ஆண்களுக்காகவே ஆண்களால் மட்டுமே செய்யக் கூடியது (உம்.) ஏர் ஓட்டுவது.
2. பெண்களுக்காகவே உள்ளவேலை (உம்.) நடவு நடுவது.

ஒட்டுமொத்தத் தமிழ் நாட்டிலும்

1. ஆண்களுக்காகவே பயன்பாட்டில் உள்ள கருவி. (எ.கா.) கலப்பை
2. பெண்களுக்காக உள்ள கருவி (எ.கா.) களக்கொட்டு

இருந்தும் ஒட்டுமொத்த கருவிகளையும் வைத்து ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் பிரித்தால், சில மாவட்டங்களில் ஆண்களுக்காக

உள்ளது பெண்களுக்காகவும், பெண்களுக்காக உள்ளது ஆண்களுக்காகவும் மாற்றம் பெறுகிறது.

## நாற்று அடித்தல்

இந்த நாற்று அடித்தல் என்ற தொழில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் ஆண்களின் வேலை மட்டும் தான். இந்த வேலை செய்ய பெண்களை அனுமதிப்பது இல்லை; அவர்களும் வருவதில்லை. இப்பகுதியில் ஆண்கள் நாற்று அடிப்பதால் இந்த நாற்று அடிக்கிற மொளகழி ஆண்களின் கருவி. வேலூர் (பரமத்தி) தருமபுரி போன்ற பகுதியில் நாற்று அடிப்பது பெண்களின் வேலை. அவர்கள் இப்படி ஒரு கருவியைப் பயன்படுத்துவது இல்லை. ஏன் என்றால், அப்பகுதி மண்ணின் தன்மை வேறு. நடவு நடும் விவசாய நிலம் குறைவு அதனால் நாற்றுவிடும் அளவும் குறைவு. இப்பகுதியில் சேற்று பிடிப்பு அற்ற நிலப்பகுதியாக இருப்பதால் நாற்றுப் பறிக்கும்போது அந்த நாற்றின் வேர்ப் பகுதியில் சேர் ஒட்டிவருவதில்லை. அதனால் பயன்படுத்தாமல் இருக்கலாம் அல்லது அவர்களின் பாரம்பரிய வழக்கமாகவும் இருக்கலாம்.

## தஞ்சையின் சிறப்பு

தஞ்சைப் பகுதியில் குறிப்பாக நாகப்பட்டினம் மாவட்டத்தில். மயிலாடுதுறையை சுற்றியுள்ள பகுதியில் இந்த விவசாயத்தின் வேலையை இரண்டு வகையில் பிரிக்கலாம்.

1. ஆண்கள் வேலை
2. பெண்கள் வேலை

## ஆண்கள் வேலை (விவசாயத்தில்)

1. ஏர் ஓட்டுவது
2. நிலத்தை மண்வெட்டியால் கொத்திச் சரி செய்வது.
3. அண்டை வெட்டுவது
4. நாற்றுவிடுவது
5. நாற்றுப்பறிப்பது
6. நாற்றுக் கட்டுத்தூக்குவது
7. அறுவடை செய்வது
8. அரியை அள்ளிக்கட்டுவது
9. அரிக்கட்டுகளைத் தூக்குவது
10. களத்தில் கட்டு அடிப்பது
11. போர் போடுவது
12. நெல் அளப்பது

13. மூட்டை தூக்குவது

போன்ற பெரும்பாலான வேலைகளை ஆண்கள் மட்டுமே செய்கிறார்கள். இந்த வேலைகளைச் செய்ய பெண்களை அனுமதிப்பதும் இல்லை. பெண்கள் தானாக இவ்வேலைகளைச் செய்ய முன் வருவதும் இல்லை. மேற்கண்ட வேலைகள் அனைத்தும் கடினமான உடல் உழைப்பால் செய்வது.

## பெண்கள் வேலை

1. நடவு நடுவது
2. பயிர்களுக்குக் களை எடுப்பது
3. களைகளைக் கொத்தி/கையால் எடுப்பது.
4. கட்டு அடிக்கும் களத்தைக் கூட்டுவது
5. தூற்றுவது
6. பருத்தியில் பஞ்சு எடுப்பது
7. பொனையில் அடிக்கும் போது மாட்டை சுத்தி ஒட்டி வருவது
8. பிரி விடுவது.

போன்ற மென்மையான வேலைகளைப் பெண்கள் மட்டும் தான் செய்வார்கள். இவ்வேலைகளை ஆண்கள் செய்தால் அந்த ஆட்களை பெண்கள் மதிப்பதில்லை. ஆண்கள் செய்யும் வேலையைப் பெண்கள் செய்தாலும் அவர்களை மதிப்பதில்லை. இன்றுவரை நடைமுறையில் இருப்பது இது.

பெண்கள் செய்யும் வேலையை யாராவது ஒரு ஆண் சம்பளம் பெற்றுக் கொண்டு செய்தால் அவனைப் 'பொட்டபயல்' என்றே அழைக்கின்றனர். முடிச்சி போடுவதில் பல வகை உள்ளது. உடனே அவிழ்த்து விடக்கூடிய ஒரு வகையான முடிச்சை யாராவது போட்டால் அந்த முடிச்சிக்கு 'பொட்ட முடிச்சி' என்று பெயர். ஆண்கள் வேலையை ஆண்கள் தான் செய்ய வேண்டும். பெண்கள் வேலையை பெண்கள் தான் செய்ய வேண்டும் மாற்றி செய்தால் மரியாதை குறையும். இதே போன்று நாற்றுப் பறிப்பது இம்மாவட்டத்தில் ஆண்கள் தான். நாற்றாங்காலில் கோவணம் அல்லது கால் சட்டை அல்லது துண்டு கட்டிக்கொண்டு, நீரில் அமர்ந்து கொண்டு நாற்றுகளை ஆண்கள் தான் பறிப்பார்கள். அப்போது நாற்றைப் பறிக்கும் போது வேர்ப்பகுதியில் உள்ள சேற்றை அடித்து நீக்குவதற்காகப் பயன்படும் குச்சியின் பெயர் நாத்தடிக்கிற கழி அல்லது மொளக்கழி.

### கலை

தஞ்சை மாவட்டத்தில் நாத்தடித்தல் என்பது ஒரு சிறந்தகலை. அனுபவம் பெற்றவர்களால் மட்டும் தான் பறிக்க முடியும். அதை நுணுக்கத்துடனும் போட்டி போட்டுக் கொண்டும் தன் திறமையை வெளிப்படுத்துவார்கள். நிலத்தில் வரிசையாக ஆண்கள் அமர்ந்து கொண்டு நீரின் சத்தத்தில் அந்த நாற்றை இரு கையாலும், வேர் அறுபடாமல் பறிப்பது மிகப்பெரிய திறமைதான். அப்போது ஏற்படும் சத்தம் ஒரு மனதைக் கவரும் இசையாக அமையும். அவ்வாறு இரு கையாலும் பறித்த நாற்றை இறுக்கி ஒரு கையால் பிடித்துக் கொண்டு அந்த மொளக்கழியில் ஓங்கி அடிக்கிறார்கள், அப்படி அடித்து வெளியேறும் சேர் மற்றும் தண்ணீர் மற்றவர் மேல் படாமல் அடிப்பது மிகப்பெரும் கலைதான். அதை மிகப்பெரிய சவாலாக எடுத்துச் செய்வார்கள். இப்பகுதியில் ஆண்கள் மட்டுமே இன்று வரை செய்துகொண்டு வருகிறார்கள்.

நாற்றைக் கணக்கிடுவது, அதைக் கட்டாக கட்டுவது, தலை மேல் தூக்கிக் கொண்டு செல்வது, அனைத்தும் ஆண்கள்தான். இந்த வேலையைப் பெண்களால் செய்ய இயலாது. செய்யவும் தெரியாது. ஆனால் மற்றப் பகுதியில் இந்த நாற்று அடிப்பது ஆண்களின் வேலையாக அல்லாமல் அது பெண்களின் வேலையாக இருக்கிறது. அங்கே இதை ஆண்கள் செய்தால் அவர்களைத் தகுதிக்குறைவாகவும் நினைக்கின்றார்கள். அதோடு நாற்றுக் கட்டுகளைக் கட்டுவதில் தஞ்சையில் பல முறைகளும், வடிவங்களும் இருக்கின்றன. நாற்றுகளின் வேர் வெளியில் தெரியும் படியும், தோகை உள்ளே மறைத்து வைத்து ஒரு ஆளின் உயரத்திற்கு கூட கட்டாக கட்டி ஆண்கள் தலையில் சேர் ஒழுகத் தூக்குவார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களில் அந்த நாற்றைத் தட்டுக் கூடையில் வைத்து பெண்கள் தான் தலையில் தூக்குகிறார்கள். இம்மாதிரி ஆண்களுக்கே உரிய வேலை சில இடங்களில் பெண்களின் வேலையாக மாறியுள்ளது. இந்நாத்து அடிக்கிற கழியை எடுத்துக் கொண்டால் மொளக்கழி என்ற ஒரு கருவி தஞ்சை மாவட்டப் பகுதியை உள்ளடக்கிய கருவியாகக் கொள்ளலாம். சில மாவட்டங்களில் இந்த வார்த்தையைக் கேட்டால் அருவெறுப்பாக இதை கெட்ட வார்த்தையாகவும் கருதுகிறார்கள்.

## தருமபுரி (கிருஷ்ணகிரி)

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி பகுதி சின்னமுத்தூர் என்ற ஊரில் நாற்றுவிடும் போது முளைகட்டிய விதையை அள்ளித்தருவது பெண்கள். அதை நாற்றாங்காலில் வீசுவது ஆண்கள். அப்போது அந்த நெல்லின் முளைப்புத்தன்மையைப் பற்றி கூறுகின்ற போது 'மொலை(ள) நல்லா வந்திருக்கா' என்று தான் நாம் அழைப்போம். பெண்கள் இருந்தாலும்,

பெண்கள் இல்லை என்றாலும் அப்படித்தான் தஞ்சைப் பகுதியில் அழைப்பார்கள். ஆனால் தருமபுரியில் பெண்கள் இருந்தால் 'மொலை(ள) வந்திருக்கா' என்று கூறுவதைத் தவிர்த்து "வாய் பூத்திருக்கா" என்று தான் கூறுகின்றனர். எனவே அப்பகுதியில் நாற்று அடிப்பது கிடையாது. நாற்றுப் பறிப்பது, நாற்று அறிப்பது தான் அங்கே உள்ளது. இந்த மொளக்கழி என்ற கருத்தே அங்கே இல்லை. அப்படி கூறுவதைக் கெட்ட சொல்லாகவும் கருதுகிறார்கள். (மொலை – என்பது பெண்களின் உடல் உறுப்புச் சொல். மொளை என்பது வளரும் விதை. இவ்விடத்தில் முளை என்றால் பெண்களின் உடல் உறுப்பாகக் கருதி தவிர்க்கிறார்கள். எது முட்டி முளைத்து வருகிறதோ அது முளைப்பு. முளை (முலை))

நாத்து அறி, நாத்து பறி, நாத்து அடி, நாத்து புடுங்கு இவை எல்லாம் ஒரு பொருள் கொண்ட வட்டார வழக்குச் சொற்கள் தான். எனவே தஞ்சை பகுதியில் மொலக்கழி என்றாலும், மொலக்குச்சி என்றாலும் ஒரே பொருளைத்தான் தருகிறது. எனவே நாத்தடிக்கிற தொழிலில் மொலக்கழி சிறந்த இடத்தைப் பெறுகின்றது.

விவசாய வேலைகளிலும் வெளியிலும், சமுதாயத்திலும் வீட்டிலும் பெண்களின் மதிப்பீட்டையும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மதிப்பிடுகையில் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. அந்தக் கருவை விவசாயத் தொழில்களை வைத்து ஒப்பு நோக்கினால் தஞ்சைப் பகுதியில் விவசாய வேலைகளில் பெண்களுக்கு அவ்வளவு வேலைப்பளு கொடுக்கப்படுவதில்லை. அது அடிமை என்ற முறையில் நோக்குவதா, அவர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதை, முக்கியத்துவம் என்ற அடிப்படையில் நோக்குவதா என்று குழப்பம் வருகின்றது. மென்மையான வேலைகளை எல்லாம் பெண்களுக்குக் கொடுத்து வலிமையான வேலைகள் ஆண்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆண்களின் வேலையை ஏதேனும் ஒரு பெண் செய்தால் அவர்களின் சுய மரியாதை குறைகிறது.

(உ.ம்)

அறுவடை செய்வது ஆண்கள் தான். இந்த அறுவடை செயலில் ஒரு பெண் அவர்களுக்குச் சமமாக இருந்து வேலையை செய்யமுடியாது. அப்படி செய்தால் அப்பெண்ணின் பெண்மையைப் பற்றிக் குறைத்து மதிப்பிடும் சூழல் நிலவுகிறது. "பொம்பளையா அவ, ஆம்பள போற எடத்துக் கெல்லாம் போயி நிக்குறா' இது மற்றப் பெண்களின் வசை சொல்.

அதே போன்று ஆண்களால் நின்று அறுவடைசெய்ய முடியாத பயிர் தான் பெண்களால் அறுக்கப்படுகிறது. பெண்கள் தரையில் அமர்ந்து கொண்டு அறுப்பார்கள். ஆண்களால் அவ்வளவு பொறுமையாக தரையில்

இருந்து அறுவடை செய்யமுடியாது. அவ்வாறு ஒரு ஆண் அறுவடை செய்தால் அவரின் இயலாமைத் தன்மையைப் பற்றி குறைத்து மதிப்பிடுகிறார்கள். இந்த விதி சொந்த நிலத்தின் வேலைக்குப் பொருந்தாது. கூலி பெற்று செய்யும் வேலைக்கு மட்டுமே பொருந்தும்.

வேலை மேற்பார்வையும் அப்படித் தான். மிகுதியான இடங்களில் ஆண்கள் செய்யும் வேலையை மேற்ப்பார்வையிட நில உரிமையாளராகப் பெண்கள் வருவதில்லை. மற்ற மாவட்டங்களில் பெண்கள் தலைமையேற்று அவர்களே வேலை வாங்குகிறார்கள். இவ்வாறு விவசாயத் தொழில் ஒருங்கிணைந்த தஞ்சைப் பகுதியில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் நிறைய வேறுபாட்டு நிகழ்வு அமைகிறது.

மொளக்கழி



## 5. மொளக்கழி[2] / மொளக்குச்சி

இந்த மொளகழி, மொளக்குச்சி என்பது ஆடு, மாடு போன்றவைகளைக் கயிற்றால் கட்டிபோடுவதற்காகப் பயன்படும் கருவி. இதனை எல்லா மரத்திலும் தயார் செய்கிறார்கள். அரை அல்லது ஒரு அடி உயரத்தில் கீழ் பகுதி கூர்மையாகவும், மேல்பகுதியில் கொண்டை, கணு வைத்தவாறும் தயார் செய்வது. ஆடு, மாடு வயல், வரப்புகளில் மேயும் போது அதனை மற்ற இடங்களுக்கு நகராமல் இருக்க அதன் கழுத்தில் உள்ள கயிறை அதில் கட்டி, அக்கழியை மாடுகளால் பிடுங்கிச் செல்லாதவாறு நிலத்தில் அடிப்பது. அதற்கு மட்டுமல்ல ஒரு பொருள் சாயாத அளவிற்கு கயிறால் இழுத்துக் கட்டுவதற்காகவும் நிலத்தில் ஊன்றி அடிப்பதற்காகவும் பயன்படுகிறது. வீட்டில் கொட்டகைகளில் மாடுகளைக் கட்டிப் போடுவதற்காகப் பயன்படும் மொளகழி, தடித்ததாகவும் நீளமானதாகவும் இருக்கும்.

மொளக்குச்சி



## 6. அலக்கு/அலக்குக்குச்சி/அலக்குக்கழி

அலக்கு என்பது ஒரு வகை நீண்ட கழியில் தயார் செய்யப்படுவது. இது உயரமான இடங்களிலுள்ள பொருள்களைப் பறிக்க, எடுக்கப் பயன்படுவது pole fixed with a hook (to pluck fruit, etc.,) நீளமாக, உயரமாக இருப்பது அலக்கு என்றே குறிக்கப்படுகிறது. இந்தக் கழி பெரும்பாலும் மெல்லியதாக, உறுதியாக உள்ள மூங்கில் மரத்திலிருந்தும், அதே தன்மை கொண்ட சவுக்கை மரத்திலிருந்தும் பெரும்பாலும் தயார் செய்யப்படுகிறது. அக்கழியின் நுனியில் வளைந்த அருவா/ கவை ஒன்றைக் கட்டி தயார் செய்யப்பட்டது. இக்கருவி பெரும்பாலும் அனைத்து வீடுகளிலும் இருப்பதைக் காணலாம். ஆடுகளை மந்தையாக மேய்ப்பவர்கள், ஆடுகளுக்குத் தழைகளைப் பறித்துப் போடுவதற்கு இக்கழியை முறையாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

மாங்காய், மாம்பழம் பறிக்க இக்கழியின் நுனியில் வலை பொருத்தியும், இலை/கிளைகளை ஆடுமாடுகளுக்குப் பறிக்க நுனியில் வளைந்த அரிவாள் பொருத்தியும், சாதாரண கீரை போன்றவற்றைப் பறிக்க கழியின் நுனியில், கவை கழியைக் கட்டியும் பயன்படுத்துகின்றனர். இதை ஆண்களும், பெண்களும் பயன்படுத்துகின்றார்கள்.



அலக்கு – மாங்காய் பறிக்க



அலக்கு – தழை பறிக்க, மரக்கிளை வெட்ட



அலக்கு – குச்சி வைத்தது

## 7. பட்டங்கழி/பட்டங்கம்பு

விவசாயத்தில் இக்கழி பயன்படுத்தப்படுகிறது. இது திருந்திய முறை விவசாயத்தில் அளவு பிரித்து அதாவது பட்டம் பட்டமாகப் பிரித்து நடவு செய்வதற்கு ஒரு பட்டங்கழி தேவைப்படுகிறது. இது ஒரு வகையான அளவுகளைக் கொண்ட கழி. குறிப்பிட்ட அளவு வைத்து அதனை அளவிட்டு நடவினைப் பிரித்து, பிரித்து நடுவதற்காக இக்கழி பயன்படுகிறது இது பெரும்பாலும் மூங்கில் பிளாச்சியில் தயார் செய்யப்படுகிறது. இதை நடவு வயலில் பெண்கள் தான் மிகுதியாகப் பயன்படுத்துகிறார்கள். இக்கழி, தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இது மட்டுமல்லாமல் அறுவடை செய்யும் போது ஒருவர், ஒரு இணை அறுப்பதற்குத் தேவையான அளவு இடத்தைப் பிரித்து கொடுப்பதற்காகவும், இந்தப் பட்டங்கழி (அளவு கழி) பயன்படுகிறது.

## 8. அளவு கழி

பட்டங்கழியும், அளவு கழியும் ஒரே தன்மையும், பயன்பாடும் கொண்டிருக்கின்றன. ஆனால் பட்டம் போட அதாவது அளவு பிரிப்பதற்காகப் பயன்படுவது (பட்டம் பட்டமாக பிரிக்க) பட்டங்கழி என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அறுவடைக் கழியும் அறுக்கும் போது அளவு பிரிக்கப் பயன்படுகிறது.

இருந்தும் அதனை அளவு கழி என்றும் நடவு நடுவதற்கு அளவு பிரிக்கும் கழியை பட்டங்கழி என்றும் அழைக்கின்றார்கள்.

## 9. வைக்கோல் கழி

இங்கே 'கழி' என்ற சொல் மரத்தைக் குறிப்பதாகும். மரம் என்றால் முழுமையாக வளர்ச்சியடைந்த (கல்லாங்கழி) மூங்கில் மரம்/ சவுக்கை மரம் இரண்டையும் இவ்வாறு அழைக்கின்றார்கள்.

இவ்விடத்தில் கழி என்பது மரத்தைக் குறிக்கின்றது.

வெக்ககழி என்பது – ஒன்றைக் குறிப்பது இல்லை, இரண்டு மரம் சரி அளவாக சமமாக நேராக இருப்பதைக் குறிக்கின்றது. (வெக்ககழி – பன்மைச் சொல்)

### பயன்பாடு

பெரும்பாலும் வண்டியில் வைக்கோல் ஏற்றும் போது வண்டியின் முன் பகுதியிலும், பின்பகுதியிலும் வைத்து நிறைய அடுக்குவதற்காக இந்த மரம் பயன்படுகிறது. வைக்கோல் மட்டுமல்ல, தழைகள், தானியப் பயிர்கள் திரைத்து, திரையாக வண்டியில் அடுக்கிக் கொண்டு செல்வதற்காக இந்த இரு மரங்கள் பயன்படுகின்றன. சாதாரண வண்டியில் ஏற்றும் வைக்கோலின் அளவைவிட இக்கழி பொருத்தப்பட்டபின் ஏற்றும் அளவு மூன்று மடங்கு அதிகமாக அமைகிறது.

### அளவு

இந்த இரு மரத்தின் நீளம், ஒரு வண்டி இருக்கும் நீளத்தை விடச் சற்று அதிகமான நீளம் உடையது. வைக்க கழி என்பது ஒன்று இல்லாமல் இரண்டாக இருந்தாலும் அதனை ஒருமையிலே அழைக்கின்றனர்.

வைக்கோல் கழி



## 10. தார்க்கழி

சுமை இழுக்கும் காளை மாட்டை விரைவுப்படுத்தி ஓட்டுவதற்காக கூர்மையான இரும்புக் கம்பி பொருத்தப்பட்ட சிறு குச்சி, கம்பு (goad). இதனை வட்டார வழக்கில் தார்க்கழி, தார்க்கம்பு என்று கூறுகின்றனர்.

தார்க்குச்சி பெரும்பாலும், மூங்கில் மரத்தில் இருக்கும் கிளைக்குச்சியிலிருந்து தயார் செய்வது. இரண்டு அடி/மூன்று அடி நீளம் கொண்டு கட்டைவிரல் தடிமன் கொண்ட குச்சி. அதன் நுனியில் கூர்மையான ஆணி/ இரும்பு கம்பி பொருத்தப்பட்டிருக்கும். இது கால்நடைகளில் காளை மாட்டிற்கே மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. மாட்டின் விலாப்பகுதி, கொண்டை பகுதி, மாட்டின் தொடைப் பகுதி போன்ற பகுதிகளில் அந்தக் கழியால் குத்தி, மாட்டிற்கு வலி ஏற்படுத்தி விரைவாகப் போகப் பயன்படுகிறது. இதைப் பயன்படுத்துவோர் ஆண்கள் மட்டுமே. ஏனென்றால் வண்டி ஓட்டுவது ஆண்கள் மட்டுமே.

இதன் வட்டார வழக்கில் தார்க்கம்பு என்றும், தார்க்குச்சி என்றும், தார் என்றும் அழைக்கின்றார்கள்.

தார்க்கழி



## 11. சாட்டக் கம்பு/சாட்ட

இக்கம்பும் மேலே குறிப்பிட்ட அதே அளவில், பெரும்பாலும் வண்டி இழுக்கும் விலங்குகளை விரைவுப்படுத்தி ஓட்டுவதற்காக அடிக்கப் பயன்படும். நுனிப் பகுதியில் கயிறு பொருத்தப்பட்ட சிறு குச்சி, இது பெரும்பாலும், வண்டி இழுக்கும் காளை மாடு, குதிரை போன்றவற்றை ஓட்டப் பயன்படும் whip (used mostely by cart drivers) இதனையும் வட்டார வழக்கில் சாட்டக்கம்பு, சாட்டக்குச்சி, சாட்டக்கழி என்றும் கூறுகிறார்கள்.

சாட்டக் கம்பு



### 12. கடக்கழி/கடக்குச்சி

இக்கழி இரு இடங்களில் பயன் படுத்தப்படுகிறது.

1. கட்ட, பார வண்டியின் மேற்பரப்பில் ஏற்றிய சுமை வெளிப்பக்கம் நகராதவாறு இரு மருங்கிலும் ஊன்றப்படும் சிறு கட்டை/கழி.
2. வண்டி, ஏர் பூட்டி ஓட்டும்போது மாட்டின் கழுத்து வெளிப்பக்கமும், உள் பக்கமும் நகராதவாறு நுகத்தடியின் துளையில் சொறுகப்படும் மேல்பக்கம் கொண்டையுள்ள சிறுகழி.

வண்டியில் பொருத்தப்படும் கழி சமமாகவும், நேராகவும் அடிப்பகுதி சிறுத்து கூர்மையாகவும், இருக்கும், இதன் உயரம், இரண்டு அடி அல்லது 2½ அடி உயரம் இருக்கும்.

நுகத்தடியில் சொறுகப்படும் இக்கழி மேல் பகுதியில் கொண்டை அமைக்கப்பட்டு ஒரு, ஒன்றரை அடி நீளமுள்ளதாகவும் இருக்கும். இதனை மொளக்குச்சி, மொளகழி, கடமொளக்குச்சி என்றும் வட்டார வழக்கில் கூறுவார்கள். வண்டிக்கு (சக்கரத்திற்கு) கடையாணி எவ்வளவு முக்கியமானதோ அதே முக்கியத்தும் கொண்டது.

### 13. கடமொளக்குச்சி

நுகத்தடியில் மாடு பூட்டும்போது கடமொளக்குச்சி இல்லாமல் மாடு பூட்டப்படுவது இல்லை. வண்டியின் நுகத்தடி, ஏரின் நுகத்தடி, கமலஏத்தத்தில் உள்ள நுகத்தடி அனைத்திலும் மாடு பூட்டும் போது கட மொளக்குச்சி முக்கியமானது.

### 14. குச்சி

இது வைக்கோல் பிரி முறுக்குவதற்கு கையில் பிடித்துக் கொள்ளப் பயன்படும் சிறுகுச்சி, அரைஅடி நீளமும், உள்ளங்கையில் அடங்கக் கூடியதாகவும் உள்ளது. இதனை ஆண்கள், பெண்கள் இருவரும் பயன்படுத்துவார்கள். இக்குச்சி பெரும்பாலும் கனம் குறைந்த குச்சியிலிருந்து ஒடித்துத் தயார் செய்வது.

### 15. மெண்டு கோல்

இது ஏர் பூட்டும் போது நுகத்தடியும், கலப்பையும் இணைக்கும் போது ஏர்களில் அமைத்துக் கட்டப் பயன்படும் மெல்லியதாக உள்ள சிறு கம்பு. இந்தக் கம்பு வேலூர் மாவட்டத்தின் தீர்க்க மலை பகுதியில் பயன்படுத்தப்படும் கலப்பையில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

கலப்பையில் இக்கழி வைத்துக் கட்டும் பழக்கம் வேறுபகுதியில் இருப்பதாகத் தெரியவில்லை.

### 16. பத்துக்கழி

இக்கழி ஏற்றத்தில் பயன்படுத்தப்படுவது. ஒரு முனையில் சாலையும் மறு முனையில் ஆள் ஓடும் மரத்தின் நுனியையும் இணைத்து நீர் மொண்டு தூக்குவதற்குப் பயன்படும் நீளமான மூங்கில்கழி. இக்கழி நேரான மூங்கில் மரத்திலிருந்து தயார் செய்யப்படுவது. பத்துக்கழி என்ற கழி பல்வேறு இடங்களில் பயன்படுவது. வீடு கட்டும் போது பயன்படும் கழியை பத்துக் கழி என்றும் அழைக்கின்றனர். ஏற்றத்தில் இறைக்கும் களம் தற்போது அழிந்து வருவதால் ஏற்றத்தில், கமலஏற்றத்தில் பயன்படுத்திய பாகங்கள் அதன் பெயர்கள், கருவிகள், அனைத்தும் மறைந்து வருகின்றன.

### 17. குத்தூசி

இக்குச்சியானது பன மட்டையைப் பயன்படுத்தி வீடுகட்டும்போது நார் இணைத்து மாட்டுவதற்காகப் பயன்படுவது. மெல்லியதாக மூங்கில் பிளாச்சில் ஒன்றரை அடி நீளத்தில் ஒரு பக்கம் கூர்மை கொண்டு செய்யப்பட்டது. ஒரு கூரிய முனையின் சற்று மேற்புறத்தில் பன நார் கொள்ளும் அளவில் துவாரம் அமைக்கப்பட்டது. வீட்டுக் கூரை அமைக்கும் போது பனமட்டையைக் குப்புற கவிழ்த்து அதன் முதுகு நரம்பு பகுதியின் மருங்கில் நார் இணைத்து சொறுகுச்சி/குத்தூசியை சொறுகி (மட்டையும் மரத்தையும் இணைத்துக்கட்டப் பயன்படுகிறது) கூரையின் உள் இருப்பவர் அந்த நாரினை எடுத்து மரத்தில் மாட்டி மீண்டும் அக்குச்சியின் துவாரத்தில் போடுவார். இவ்வாறு நாரினை மரத்தோடு மாட்டி இழுப்பதற்காகப் பயன்படும் குச்சி குத்தூசி. பன மரத்தில் வீடுகட்டும் முறை மறைந்து வருவதால் அது தொடர்பான கருவிகளும் மறைந்து வருகின்றன.

குத்தூசி



### 18. மோட்டு வலக்குச்சி

இக்குச்சி பொதுவாக வேம்பு மரத்தின் கிளைக் குச்சியிலிருந்து எடுக்கப்படுகிறது. மெல்லிய இரு முனையிலும் கூர்மைப்படுத்தப்பட்டு தயார் செய்யப்படுகிறது. கூரை வீடு கட்டியப் பின் அதன் மேல்பகுதியில் இணைந்த மேற்கூரையில் (மோட்டு வலை) கீற்று, பனம் மட்டையை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி அது காற்றில் பிரியாதவாறு கயறு கொண்டு பின்னப்படும். அப்போது கயறு மாட்டி பின்னுவதற்காக மோட்டு வலை கழியை நடுவாக வைத்து கூரையின் வெளிப்பக்கத்தில் சொறுகி மறு பக்கக் கூரையில் வரவழைத்து கயிற்றை அதில் கட்டிப் பின்னப்படுகிறது.

## மோட்டு வலக்குச்சி

விவசாயத்தின் கருவிகள் அனைத்துமே நாட்டுப் புறத்தில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு தாங்களாகவே செய்து பயன்படுத்தும் கருவிகளாகும். சில இடங்களில் கருவிகள் ஒன்றாக இருந்தாலும் அதைப் பயன்படுத்தும் இடத்தால் வேறு பெயர் பெறுகின்றன. நாட்டுப்புறத்தில் இக்கழியைக் கொண்டு செய்யப்படாத எந்தத் தொழிலும் இல்லை என்று கூறலாம்.

பிறந்த குழந்தைக்குத் தொட்டில் கட்டுவது முதல் சுடுகாட்டிற்கு பிணத்தைத் தூக்கிச் செல்வது வரை இந்த இடைப்பட்ட காலத்தில் செய்யப்படும் எல்லாத் தொழிலிலும் இக்கருவியின் பயன்பாடு அதிகம். இன்று ஒரு நாடு அணு ஆயுதம் வைத்திருந்தால் எவ்வளவு தைரியம் அந்நாட்டிற்கு இருக்குமோ அதைப்போல் ஒரு தனி மனிதன் கையில் சிறு கோல், கழி இருந்தால் அதே தன்னம்பிக்கை அவனிடம் இருக்கும்.

# 5. உழவாரம்



உழவாரப்படை
உழவாரம்
} உழைவாரம் = ஓர் ஆயுதம்; புற்செதுக்கி.

இக்கருவி நாவுக்கரசரிடம் சென்று கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து 21 ஆம் நூற்றாண்டுவரை மறையாமல் மக்களின் பயன்பாட்டில் நின்று வருகின்றது. விவசாயத்திற்குப் பயன்பட்டுவந்த கருவிகளுள் எத்தனையோ அழிந்திருந்தாலும் விவசாயக் கருவியில் ஒரு கருவியை நாவுக்கரசர் கையில் எடுத்ததால் அக்கருவிக்கு அழிவில்லை. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் இருந்த அதே புற்செதுக்கும் கருவிதான் இன்றும் நாவுக்கரசரின் தோளில் இருக்கின்றதா? அல்லது அக்கருவி மாற்றம்பெற்று புதிய வடிவில் இருக்கின்றதா அல்லது 6 ஆம் நூற்றாண்டில் நாவுக்கரசர் வைத்திருந்த கருவி இன்று பயன்பாட்டில் உள்ளதா, எந்த வடிவ உழவாரத்தை நாவுக்கரசர் வைத்திருந்தார் போன்ற செய்திகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாவுக்கரசரின் காலம்

பல்லவ மன்னன் கல்வெட்டின்படி சீனயாத்திரிகன் யுவான் சுவாங் குறிப்பு மற்றும் பாஹியான் எழுதிய குறிப்பின்படி சமணப்பள்ளிகள் இருந்திருக்கின்றன. அவர்களின் குறிப்பு மற்றும் கல்வெட்டின் சான்றுகள்படி அப்பர் காவியம் புனைந்துரைக்கப்பட்டது அல்ல. அது உண்மை வரலாறு என்று துணியப்படுகின்றது. காஞ்சியில் கி.பி. 550–ல் இராஜசிம்ம பல்லவன் கட்டிய கைலாசநாதர் ஆலயத்தைப் பற்றி அப்பர் பாடி இருப்பதாலும், சாளுக்கிய அரசன் புலிகேசியினுடைய தலைநகராகிய வாதாபி நகரத்தைப் பல்லவ அரசனது படைத்தலைவரான பரஞ்சோதியர் என்ற சிறுத்தொண்டர் துகளாக்கியதைச் சேக்கிழார் எடுத்துக் கூறியதாலும் இவ்விரு பெருமக்களின் காலம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமென ஆராய்ந்து இருக்கின்றார்கள். இவ்வாராய்சியையும் பின்னர் பல புலவர்கள் செய்த ஆராய்ச்சியினையும் துணைக்கொண்டு

அப்பர் சுவாமிகள் கி.பி. 574 க்கும் 655 க்கும் இடையில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று துணியப்படுகின்றது. அப்பர் பிறந்த ஊர் திருமுனைப்பாடி நாடு திருவாமூர். இது பழைய கடலூர் ஜில்லாவின் ஒருபகுதி.

## அப்பர் உருவம் பொறித்தல்

தஞ்சை இராஜராஜேச்சுரம் உடையார் கி.பி. 1014 இராசராசர் 29 ம் ஆண்டு அப்பர் முதலிய உருவங்களைத் தாபித்தும் – தானம் செய்ததும் (98/1888). கி.பி. 1017 இராஜேந்திரன் மூன்றாம் ஆண்டு அப்பர் முதலிய 4 உருவங்கள் தானம் செய்துள்ளான் என்ற சான்றுகளும் அவரின் முட்டிக்குமேல் வேட்டி, உருட்திருராட்சமாலை, கையில் உழவாரப்படை போன்ற உருவங்கள் வைத்து படைத்துள்ளான். எனவே, அப்போதிலிருந்து அவர் கையில் உழவாரப்படை வைத்துள்ளார் என்பது நமக்குப் புலனாகும். அவரது உருவச் சிலையை நாட்டின அரசர்கள், காலம், கல்வெட்டு: ராஜராசர்–I–985–1013–1, ராஜேந்திரர் 1013–1045–1; ராஜராஜர்–II–1146–1178–1; குலோத்துங்கர்–III–1178–1216–2; ராஜேந்திரன் – III–1245–1267–1; ஜடாவீரபாண்டியன் – 1253–1; மாறவீர பாண்டியன் 1262–1; விக்கிரமபாண்டியன் 1283–1; ஜடாபராக்கிரமன்–1184–1 ஆக சோழர் 5 அரசர்களும் பாண்டியர் 4 அரசர்களும் ஆவார்.

மேலும் சேக்கிழாரின் சான்றுகளாக

> *"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவம் மதுரவாக்கிற்*
> *சேர்வாகுந் திருவாயிற் தீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற்றாளே*
> *சார்வான திருமனமும் உழவாரத்தனிப் படையுந் தாமும் ஆகிப்*
> *பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்"*

என்று சேக்கிழார் பெருமானே மேலும் சான்று வைத்துள்ளார்.

## நாவுக்கரசர் வைத்திருக்கும் உழவாரத்தால் புல்லை செதுக்க முடியுமா?

தற்போது நாவுக்கரசருடைய உருவத்தில் வைக்கப்பட்டுள்ள கருவி தோசை புரட்டி போன்று நேர் வடிவில் அமைந்துள்ளது. இதன் உருவத்தைப் பற்றி எந்த நூலிலும் கூறியிருப்பதாகக் தெரியவில்லை. அப்பர் வைத்திருக்கும் கருவியால் புல்லையோ மற்றப்பொருள்களையோ சுத்தம் செய்யமுடியுமா; எடுக்க முடியுமா? அப்படி எடுப்பது சுலபமான காரியம் அல்ல (செய்துபாருங்கள்) அப்படி செதுக்கினால் புல்லைமட்டும் எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செதுக்கினால் செங்குத்தாக மண்தரையில் குத்தும். நாம் எதை எடுக்க வேண்டும் என்று நினைத்தோமோ அதை சுலபமாக எடுக்க இயலாது. மேலும் நாம் புல்லை மட்டும் எடுக்க வேண்டுமானால் நாம் தரையோடு தரையாக சாய்க்க வேண்டும். அப்படி சாய்த்தால் பிடித்திருக்கின்ற நம் கைவிரல்கள் தரையில் தேய்க்கப்படும்.

நாம் என்ன பணியை நாவுக்கரசர் செய்தார் என்று எடுத்து இயம்புகின்றோமோ அப்பணியை நாவுக்கரசர் உழவாரத்தினால் செய்ய இயலாது. இப்படி சிரமப்படக்கூடிய கருவியை 80 வயது நாவுக்கரசர் வைத்திருப்பது சாத்தியமா?



## கருவி எதனால் செய்யப்பட்டது

தற்போது நாவுக்கரசர் கையில் வைத்திருப்பது கருவி முழுவதும் இரும்பினால் செய்ததுபோல் தெரிகிறது. அப்படி அக்கருவி இரும்பினால் செய்யப்பட்டிருந்தால் அதன் கனம் சற்று அதிகமாகவே இருந்திருக்கும். சென்ற இடமெல்லாம் அதனைத் தோளில் சுமந்து, நடந்தே செல்வது சிரமமாகவும் இருக்கும். நாவுக்கரசர் 81 வயதுவரை அக்கருவியைச் சுமந்திருந்தால் பலதுன்பங்களை அக்கருவியினாலே அனுபவிக்க நேர்ந்திருக்கும். எனவே அப்பரின் தொண்டிற்கு அக்கருவி சாத்தியமாகாத ஒன்று, மட்டுமல்லாமல் அக்கருவி மரத்தினால் செய்து, செத்தும்முனை இரும்பினால் ஆன நேர்வடிவமாக இருந்தாலும் அக்கருவியினால் புல்லை செதுக்கமுடியாது. அப்படி இரும்பினால் இருந்திருந்தால், எவ்வளவோ கல்வெட்டுகளும், செப்பேடுகளும், சிலைகளும் பூமிக்கடியில் புதைந்து தற்போது கிடைத்திருப்பதுபோல் இக்கருவியும் கிடைத்திருக்க வாய்ப்புண்டு.

## தற்பொழுதுள்ள கருவி

பழைய மாவட்டமான தென்னார்க்காடு ஜில்லா (தற்போது அரியலூர் மாவட்டம்) திருக்களப்பூர் என்ற ஊரில் விவசாயக் கருவிகளுள் ஒரு கருவியின் பெயர் உழவாரம், இன்றும் அக்கருவியின் பெயர் உழவாரமே.



தற்போது பயன்பட்டு வரும் உழவாரக் கருவி

இக்கருவியின் பிடி மரக்கட்டையினாலும் செத்தும் நுனிப்பகுதி தட்டையான இரும்புத் தகட்டாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது களகொட்டு, மண்வெட்டி, இரண்டையும் சேர்ந்த ஒரு வடிவம். நேர்வடிவில் இல்லாமல் வளைந்துள்ளது. அதனை கையிலோ, துணிப் பையிலோ வைத்து எடுத்துச் செல்லலாம். அதனால் தூய்மை செய்வது எளிது. கை காய்ப்புக் கொடுக்காது. புல்லை எந்த அளவில், எந்த ஆழத்தில் நம் தேவையைப் பொறுத்து எடுக்கவேண்டுமோ, அக்கருவியின் அமைப்பை (உயரம்) மேலே தூக்குவதோ கீழே இறக்குவதோ செய்தால் நாம் நினைத்த புல்லையோ, மண்ணையோ எடுக்கலாம். இன்றும் திருக்களப்பூரில் கால்நடைகளுக்கு புல்லை செதுக்க இக்கருவி பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது. மண்வெட்டிக்கு இலை மாட்டுவது போன்று இதற்கும் இலை மாட்டுகிறார்கள். அக்கருவியின் பிடியானது நேராகச் சென்று சிறிது வளைந்து மீண்டும் நேராக உள்ள பகுதியில்தான் இலை சொறுகப்பட்டுள்ளது.

## விவசாயக்கருவிகளுள் ஒன்று

சிறப்பு முறையால் உழைப்பு நெறி (சரியை)யை விளக்க வந்தார் நாவுக்கரசர். வழிபடும் நெறியை விளக்கவந்தார் (கிரியை) ஞானசம்பந்தர். மன ஒருமையைக் காட்ட (யோகம்) ஆரூராரும்; மெய்யுணர்வு (ஞானம்) நெறியை உணர்த்த மாணிக்கவாசகரும் வந்தார்கள். இதில் சரியை – உடலுழைப்பின் பணியை விளக்கியவர் அப்பர். உழவாரப்படை, எளிமையாக புற்களை மட்டும் செதுக்கக்கூடியது. ஆண்களுக்கென்று தனிக் கருவியும் பெண்களுக்கென்று தனிக் கருவியும் விவசாயத்தில் பயன்பட்டு வந்த காலத்தில் (கலகொட்டு – பெண்கள் கருவி; மண்வெட்டி– ஆண்கள் கருவி) இவ்உழவாரம் இருவருக்கும் பொதுவாக பயன்படக் கூடியதாக அமைந்துள்ளது. இக்கருவி விவசாய கருவிகளுள் ஒன்று. பெரும்பாலும் இக்கருவி வானம்பார்த்த பூமியாக (Dry land) உள்ள நிலத்திலேயே பயன்பாடு உள்ளது. இதன் பணி புல்லைச் செதுக்குவது, களம், வழி மற்றும் ஆடு–மாடுகளுக்குப் புல் செதுக்குவதற்கும் பயன்படுகிறது. இக்கருவி மண்வெட்டி, கலகொட்டு, அரிவாள் போன்ற மூன்று கருவிகளின் வேலைகளும் ஒருங்கே செய்யும் ஒரு கருவியாகும்.



## இன்று எது புழக்கத்தில் உள்ளது

அப்பர் பெருமான் வைத்திருக்கின்ற கருவி போன்று விவசாயத்தில் அப்படியொரு கருவி எந்த ஒரு மாவட்டத்திலும் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. அப்படி அப்பர் வைத்திருக்கின்ற கருவிதான் உண்மையானதென்றால் அக்கருவி எப்படி மறைந்துபோனது. எனவே, இன்று அப்பருடைய தோளில் வைத்திருக்கின்ற கருவி அன்று அப்பர் பெருமான் வைத்திருக்க வாய்ப்பில்லை. இன்று புழக்கத்திலும் மக்களால் பயன்படுத்துகின்ற இந்த உழவாரத்தில் தான் அன்று அப்பர் தொண்டு செய்திருக்க வேண்டும். இன்றும் திருக்களப்பூர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி போன்ற மற்ற ஊர்களிலும் பயன்பாட்டில் உள்ளது. அதனைப் பெயர்சொல்லி அழைக்கும் பெயரே இன்றும் உழவாரம் தான்.

## எப்படி மாறியது

அன்று அப்பர் வைத்திருந்த கருவி இடைப்பட்ட காலத்தில் கற்றலில்/படங்களில் அதன் உருவம் எப்படி மாற்றம் பெற்றது? சற்று சிந்தித்தால், அப்பரின் உருவத்தைப் பிற்காலத்தில் வந்த மன்னர்கள் தான் வைத்துள்ளார்கள். அப்பரோ அகச்சான்றாகத் தன் எந்த பாடலிலும் அவரது உடற்தோற்றத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. அந்தக் கருவியின் அமைப்பு பற்றியும் குறிப்பிடவில்லை. மன்னர்கள் காலத்தில் ஏற்பட்ட கற்சிலையின் வடிவத்தின் போது சற்று வளைவுள்ளதாக இருந்திருக்கலாம். காலம் மாற மாற அடுத்து வந்த சிற்பத்தின் வடிவங்கள் நேராக உருவம் பெற்றிருக்கலாம்.

## தற்போது அப்பரின் உருவம்

தற்போது உள்ள அனைத்துக் கோயில் மற்றும் பல்வேறு சைவ அமைப்புகள், மடங்கள் வெளியிடும் படங்கள் அனைத்திலும் தோசைத் திருப்பி போன்ற உழவாரப்படையே உள்ளது. பழையபடத்தில் உள்ள உழவாரம் அழகைத் தருவதாகவே அமைந்துள்ளது. ஆனால் தற்போது கிடைத்த உழவாரத்தைப் பொருத்திப் பார்த்தால் சிறப்பு மேலும் கூடுகின்றது.



தற்போது கிடைத்துள்ள கருவியின் படம்



அப்பர் வைத்திருக்கும் கருவியின் படம்

சைவசித்தாந்த வெளியீடு – தேவாரப்பதிகங்கள் – 1974 (சதாசிவம் செட்டியார்). இப்புத்தகத்தில் அப்பரின் செயல்பாடுகளை விளக்குவதாக 8 படம் வரைந்து பதிப்பித்துள்ளார்கள். அது திலகவதியாரிடம் திருநீறு பெறுதல் தவிர யானையை ஏவுதல், கடலில் மிதந்து வந்த காட்சி, அப்பூதி அடிகளாரின் பிள்ளையை உயிர்ப்பித்த காட்சி, சம்பந்தரும் அப்பரும் ஒருவரொருவர் வணங்கும் காட்சி, நீற்றறையில் அமர்ந்தக்காட்சி, அரம்பையர்கண்டு வணங்காதிருத்தல் போன்ற படங்களில் அப்பர் கையில் உழவாரப்படை பொருத்தப்பட்டுள்ளது. திலகவதியாரிடம் திருநீறு பெறும்போது மட்டும் அவரின் தோளில் உழவாரம் இல்லாமலும் அதிலிருந்து இறைவனடி சேர்ந்த கடைசி நிகழ்ச்சி வரை கையில் உழவாரம் வைத்துள்ள காட்சியே படமாக அச்சிடப்பட்டுள்ளது. இதிலிருந்து அப்பர் சமணத்திலிருந்து சைவத்திற்கு வந்து திலகவதியார் செய்த தொண்டைக்கொண்டே இக்கருவியைக் கையில் எடுத்திருக்க வேண்டும். மற்ற கருவிகளைக் கொண்டு ஒரு வேலையைச் செய்யும் போது ஏற்படுத்தாத ஒரு மன அமைதி இக்கருவியினால் உட்கார்ந்து

கொண்டு இருகைகளாலும் பிடித்துச் செதுக்கும்போது, நம் மனம் ஒரு கணம் அமைதியைப் பெறுகின்றது; செய்து பாருங்கள்.

## சேக்கிழாரின் கருத்து

பெரியபுராணப் பாடலின்படி (416, 417) அப்பர் இறுதியாக புகலூரில் உழவாரப்பணியை குளத்தின்கரையில் செய்கின்ற பொழுது, பொன்னும் மணியும் உழவாரம் நுழைந்திட்ட இடமெல்லாம் தோன்றின என்கிறார்.

அப்பொழுது சேக்கிழார் (417), வாகீசபெருமான் உழவாரத்திலேந்தி வாவியினிற் புக எறிந்தார்" என்று குறிப்பிடுகின்றார் (வாவி – நீர்). அந்த நீரில் பொன்னும் மணியும் பருக்கைகளும் நீரில் அமிழ்ந்து மறைந்து போகும்படி உழவாரத்தில் ஏந்தி எறிந்தார் என்று உள்ளது. ஏந்தி என்று வந்துள்ளதால் நாவுக்கரசரின் உழவாரத்தினால் ஏந்தி அள்ள முடியாது. ஏந்தி என்ற சொல் இன்றும் மக்களிடத்தில் வழங்கி வருகின்றது. (மண்வெட்டியால் மண்ணை ஏந்து, சொறண்டு, செதுக்கு, வரண்டு) ஏந்து/கெந்து என்றால் உழவாரத்தின் இலையில் எந்த அளவு மண் கொள்ளுமோ, அந்த அளவு அள்ளினார் என்று பொருள். அவ்வாறு ஏந்தக்கூடியது தற்பொழுது கிடைத்துள்ள உழவாரத்தினால்தான் செய்யமுடியும். தற்பொழுது உழவாரப்பணி என்ற சொல்லின் பொருள் கோயிலைச் சுத்தம் செய்வதையே குறிக்கின்றது. ஆனால் இதன் பழைய பொருள் மாடு – ஆடுகளுக்குப் புல்லை செதுக்குவதே எனலாம். (உழவாரத்தினால் செய்யும் பணி – உழவாரப்பணி)

### வட்டார வழக்கில் உழவாரம்

இந்த உழவாரக் கருவி பழந்தமிழகம் முழுவதும் விவசாயத்துக்குப் பயன்பட்டிருக்க வேண்டும். பல ஊர்களில் மறைந்து, சில வட்டங்களில் மட்டுமே புழக்கத்தில் உள்ளது. கருவிகளில் வடிவமாற்றம் இல்லை. ஆனால் வார்த்தையில் ஒலிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

| | | |
|---|---|---|
| அரியலூர் | – | உழவாரம்/ ஒழவாரம் |
| புதுக்கோட்டை | – | உலவாரம்/எழவாரம் |
| கன்னியாகுமரி மற்றும் கேரளா | – | புல்லு செத்தி |

இவ்வுண்மையை உலகிற்கு உணர்த்த என் சிந்தையில் தோன்றி அடையாளம் காட்டிய அப்பர்பெருமானின் தாள்பணிகிறேன். இக்கட்டுரையைப் படித்து இதன்படி முழு தெளிவுபெற வேண்டுமென்று யார் விரும்பினாலும், விரிவான ஆய்வு மேற்கொண்டு நிறுவலாம். அதற்கு இக்கட்டுரை முன்னோடியாக அமையும்.

# 6. அளவைகள்

மக்களின் மனத்திரையிலிருந்து தோன்றிய கருவிகளுள் முதலாவதாகத் தோன்றியது அளவைகளாகக் கொள்ளலாம். நாடோடிகளாக மனிதன் வாழும்போதே மனத்திரையில் கணக்குகளும், அளவைகளும் வைத்திருந்தான். மனிதனுக்கு இயற்கையே ஆசானாக இருந்து கற்றுக்கொடுத்த கல்வியே அளவையாகத்தான் இருக்க முடியும். இயற்கை இயங்குவதே ஒரு அளவையில்தான். ஒரு நாளில் 12 மணி நேரம் பகலும் 12 மணி நேரம் இரவும் இயற்கை உணர்த்திய அளவை. காலையில் இதமான சூரியனும், மதியம் வெப்பமான சூரியனும், மாலை மீண்டும் இதமான சூரியனும் தோன்றுவது இயற்கை கற்றுக் கொடுத்த அளவை, பகலில் சூரியனும், இரவில் நிலவும் வந்து கற்றுக் கொடுத்த கல்வி, அளவைதான். குறிப்பிட்ட காலம் மழையும், குறிப்பிட்ட காலம் வெய்யிலும், குறிப்பிட்டகாலம் காற்றும் வீசுவதும் ஒரு அளவையில் தான்.

கடலில் அலைகள் அடித்து, அடித்துத் திரும்புவதும் ஒரு அளவையில் தான். அளவோடு எது நிகழ்ந்தாலும், மனிதன் இரசிப்பான் அளவு மீறி எது நடந்தாலும் மனிதன் முகம் சுளிப்பான். தாயிடம் பால் குடிக்கும் போது மனநிறைவுபெற்று குழந்தை மறுப்பதும் ஒரு அளவைதான். உலக இயக்கங்கள் அதனின் அளவையில் சுற்றுவதால்தான் அனைத்தும் இயங்குகிறது. எனவே இவ்வுலகை ஒரு அளவையின் குறியீடாகவே நான் காணுகிறேன். மனிதனின் உடல் அளவையில் இருந்து கூடுதல் பெற்றால் விகாரமாகவும், குறைவு பெற்றால் உடல் ஊனமுற்றோராகவும் கருதுகிறோம். கண் இமைப்பது ஒரு அளவையில், இதயம் துடிப்பது ஒரு அளவையில். எனவே, உலகம் ஒரு அளவையின் வெளிப்பாடு. அளவை ஆண்டவனின் வெளிப்பாடு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய தொல்காப்பியத்தில் எழுத்து ஒலிகளை உச்சரிப்பதற்கு கால அளவை நிர்ணயம் செய்துள்ளது.

**சான்றாக**

எழுத்தின் உச்சரிப்பு நேரத்திற்கு (மாத்திரை) அளவு சொல்லும் போது ஒரு மாத்திரை என்பதன் கால அளவு.

*கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை*
*நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே* (சொல். 7)

என கால அளவை நிர்ணயம் செய்துள்ளார். எனவே அளவை என்பது முன்பிருந்து தோன்றிய ஒரு கல்வியாகும். மேலும் எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சேந்தன் திவாகர நிகண்டில் மக்கள் பெயர்த் தொகுதியில் ஆசிரியருக்கு

"கணக்காயர் நூல் உரைப்போர்" என்று விளக்கம் எழுதிய சுந்தர சண்முகனார் அவர்கள் முதன் முதலில் தோன்றிய கல்வி கணக்குக் கல்விதான் என்றும், இதற்கு மேலும் சான்றுகள் வைக்கிறார். உபாத்தியார் என்ற சொல் வடமொழிச் சொல். உபாத்தியார் என்பதிலிருந்து தான் வாத்தியார் வந்தது. அக்காலத்தில் கணக்காயர் என்னும் கருத்து செறிந்த பெயரால் ஆசிரியர் அழைக்கப்பட்டார். கணக்கு என்றால் நூல் என்று பொருளாம். எழுதப் படிக்கத் தெரியாமல் பேச மட்டும் தெரிந்திருந்த மக்கள் கொடுக்கல் வாங்கல் கணக்குகளைக் குறிக்கும் வகையில் கோடு கிழிக்கத் துவங்கினர். இது தான் அவர்கள் எழுதிய முதல் வரிவடிவ எழுத்து மொழியாகும். எனவே எழுதி வைக்க வேண்டிய இந்த முறை இந்த கணக்கிலிருந்து தொடங்கியது.

இவ்வாறு தொடங்கிய கணக்குச் சுவடி பிறகு கணக்கு நூலாயிற்று. அன்று கல்வி கற்பது என்பது கணக்குக் கற்றுக் கொள்ளத்தான் என்ற நிலை இருந்தது. இதற்குச் சான்றாக கிராமத்தில்,

*"நாலு கணக்கு தெரிந்தால் தானே*
*உலகத்தில் பிழைக்க முடியும்"*

என்ற பழமொழியும் வழக்கத்தில் இருக்கிறது. எனவே கணக்கு என்னும் பொருள் நாளடைவில் எல்லா நூல்களுக்கும் உரித்தாயிற்று. சங்க இலக்கியத்தில் மேல் கணக்கு, கீழ் கணக்கு என்று குறிப்பிடுகின்றோம். எனவே கணக்கு என்றால் பொதுவாகப் புத்தகம் என்று பொருள் ஆகும். எனவே கணக்கை ஆராய்ந்து கற்பிக்கும் ஆசிரியர் கணக்காயர். இதைத்தான் "சேந்தன் திவாகரம்" இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. எனவே கணக்குப்போன்று அளவை என்பதும் பழங்காலத்திலிருந்தே குறிக்கப்படும் ஓர் இயற்கை அறிவியல் முறையாகும்.

## தொல்காப்பியத்தில் அளவை

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர் 'இளம்பூரணார்' (நூற்பா) ஏழுவகையான அளவைகளைக் குறிப்பிடுகின்றார்.

1. நிறுத்தளத்தல் – பொன்னைக் கழஞ்சு, தாழி என அளப்பது முதலியன.

2. பெய்தளத்தல் – பால், தயிர் போன்றவை நாழி, உரி என்பவற்றில் ஊற்றி மேல்வாய் மட்டாக வைத்து அளப்பது முதலியன.

3. சார்த்தியளத்தல் – அம்மலை ஒக்கும் இக்களிறு என ஒன்றுடன் ஒன்றைச் சார்த்தி மனச்சார்பினாலே அளப்பது.

4. நீட்டியளத்தல் – பிரதிமங்களைச் சான், விரல், தோரை என அளப்பது.

5. தெறிந்தளத்தல் – யாழின் நரம்புகளை விரலால் தட்டி சுருதியைச் செவியால் அளப்பது முதலியன.

6. தேங்க முகத்தளத்தல் – நெல்லைக் களம், குருணி, என அளவையின் மேல் வாயில் கூராகத் தேங்கி நிற்குமாறு வைத்து அளப்பது.

7. எண்ணியளத்தல் – பஞ்சவர்க்குப் பகை நூற்றுவர் எனப் பாண்டவர் ஐவர் எனவும், கௌரவர் நூற்றுவர் எனவும் எண்ணிக் கூறுவது.

எனத் தொல்காப்பியத்தில் உலகப்பொருளை ஏழுவகை அளவைகளாகப் பிரித்து வகைப்படுத்தி வைத்துள்ளார்.

## தற்கால அளவைகள்

தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ள அளவைகள் தற்போது உள்ள அளவைகளில் அனைத்தும் உள்ளடக்கி இருந்தாலும், மாற்றங்களையும், வகைப்பாடுகளையும் இங்கே காண்போம்.

## நாட்டுப்புற அளவைகளின் மாற்றம்

இன்று அறிவியல் வளர்ச்சியால் அளவைகள் பல்வேறு மாற்றங்களைப் பெற்று விட்டன. ஆனால் நாட்டுப்புற மக்கள் இன்னும் அளவைகளை பல்வேறு நிலைகளில் மதிப்பீடு செய்கின்றனர். இதனைக் கீழ்வருமாறு பிரித்துக் கொள்ளலாம்.

1. நீர்மம் – liquid
2. திடம் – solid
3. எண்ணக் கூடியது – countable
4. எண்ண முடியாதது – un countable

### 1. நீர்மம்

நீர்மத்தை அளவிட முன்பு ஒழுங்குப்படுத்தப்படாத மக்களின் தேவைக்கேற்ப, தன்மைக்கேற்ப அளவையை வைத்திருந்தனர்.

உதாரணமாக

அதிகக் கறவை மாடுகள் வைத்திருப்பவர்கள், பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் உள்ள வீட்டில் ஒரு ரூபாய்க்கு மோர் கேட்டால் நிறைய கொடுப்பார்கள். பாலும் குறைவாகவும் மனமும் குறைவாகவும் உள்ள வீட்டில் 1 ரூபாய்க்கு மோர் கேட்டால் குறைவான அளவே கிடைக்கும். இது அவரவர்களின் பொருளாதார நிலையைப் பொறுத்தது. ஒரு காலக்கட்டத்தில் எல்லாத் தொழிலும் வியாபாரமாக மாறி எல்லா அளவைகளையும் ஒழுங்குப்படுத்தி அதற்கென்று தனித்தனி அளவைக் கருவிகள் பொதுத்தன்மையாக வந்த பிறகு ஒழுங்குப் படுத்தப்பட்ட நிரந்தரமான அளவைகள் வந்தன.

நீர்மத்தைக்குறிப்பிட்ட அளவில் அளக்க எல்லா இடங்களிலும் 'லிட்டர் படி' வழக்கத்தில் இருந்தது. தற்போதும் சில இடங்களில் இருக்கிறது. ஆனால் தற்போதைய காலகட்டத்தில் தாராளப் பொருளாதார மயமாக்கலின் தாக்கத்தில் அனைத்து நீர்மமும் கிலோ, நிறுத்தலளவைக்கு அதாவது திடப்பொருளின் அளவைக்கு மாறிவிட்டன.

## 2. திடம்

திடப்பொருளான அரிசி, பயறு போன்ற தானியங்களை முன்பு 'முகத்தல் அளவையில்' 'லிட்டர் படியில்' இருந்து அவையும் தற்போது கிலோவிற்கு மாறிவிட்டன.

## 3. எண்ணிக்கை

எண்ணிக்கைக்கு உரியதாக/ மதிப்பீட்டின் அடிப்படையில் இருந்த பொருள்கள் கூட தற்போது கிலோவிற்கு மாறி விட்டது.

வாழைத்தார், வெற்றிலை போன்றவை முன்பு அதன் தர மதிப்பீட்டிலும், எண்ணிக்கையிலும் இருந்தது. காலக்கட்டங்கள் மாறிவர அதுவும் தற்போது கிலோவிற்கு மாறிவிட்டது.

## 4. எண்ண முடியாதது

எண்ணிக்கைக்கு உட்படாத பொருள்களான உரம், வைக்கோல், போன்றவை அனைத்தும் பொருளின் தேவையைப் பொருத்து அதன் விலை நிர்ணயம் அமையும். ஆனால் அவை கூட தற்போது கிலோவிற்கு மாற்றம் பெற்றுவிட்டது.

| | பழைய நிலை | | தற்காலம் |
|---|---|---|---|
| எண்ணிக்கை அளத்தல் | பொருள் மதிப்பீடு | – (வாழைப்பழம்) | கிலோ |
| முகந்து அளத்தல் | படி | – (எண்ணெய்) | கிலோ |
| தேங்கமுகத்தளத்தல் | படி | – (அரிசி) | கிலோ |

எனவே இன்று எல்லா அளவைகளிலும் மாற்றம் பெற்று கிலோ/கிராம் முறை அனைத்து மக்களையும் பாதித்து விட்டது. கிராம மக்களிடையே அளவைகள் மிகுதியாக இருக்கின்ற, களம் விவசாய பொருட்களத்தில் தான். எனவே அதன் அளவைகளை நோக்கினால் நாட்டுபுற அளவைகளின் முழுப் பரிணாமமும் தெரிய வரும்.

## கிலோ

நிறுத்தல் அளவை என்பது முன்பெல்லாம் குறிப்பிட்ட பொருளுக்கு மட்டுமே இருந்தது. தற்போது மக்களின் மனமாற்றம், மக்களின் மேலைநாட்டு மோக உணர்ச்சி, தாராள பொருளாதார (Universal System) கொள்கையின் பாதிப்பு போன்றவைகளால் உள் நாட்டு உள் உணர்வின், மண்வாசனையில் முகவரியை, மொழி அமைப்பை நமது அடையாளத்தைத் தெரிந்தோ, தெரியாமலோ இழந்து வருகிறோம். அந்த இழப்பு அசுர வேகத்தில் நடைபெறுகிறது. நாட்டில் எத்தனையோ அளவுமுறை இருந்தது. அனைத்தும் மாறி, மறைந்துவிட்டு அனைத்து அளவைகளிலும் கிலோ என்ற முறை நுழைந்து விட்டது.

வைக்கோல், வாழைப்பழம், எண்ணெய், துணி, தயிர், நெய், வெற்றிலை போன்ற அனைத்து அணுகுமுறைகளிலும் கிலோ என்ற ஒரே அளவை வியாபித்து விட்டது.

## விவசாயத்தில் அளவைகள்

விவசாயத்தில் அளவையின் பயன்பாடு மிகவும் நுண்ணிய கருத்துக் கொண்டதாக உள்ளது. அவை நிலத்தை அளப்பது, நிலத்தில் விளையும் தானியத்தை அளப்பது, உரத்தினை அளப்பது, விவசாயத்திற்குத் தொடர்பான காலங்களை அளப்பது போன்ற அனைத்து அளவைகளையும் இதில் உள்ளடக்கலாம். முன்பு போல் ஏழு அளவைகளும் இந்த விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அளவைகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

I. திரவப்பொருள்
II. திடப்பொருள்

## I. திரவம்

கிராமப் புறங்களில் திரவத் தன்மையை அளப்பதற்கு குறைந்த அளவு கருவிகள் மில்லி லிட்டர் என்றும், அதிகமாக அளப்பதற்கு கன அடியாகவும் கொள்ளப்படுகிறது.

(அ) ஒரு மில்லி மருந்து ஊற்றி கலக்க வேண்டும்.

(ஆ) மேட்டூர் டேமில் 1000 கன அடி தண்ணீர் உள்ளது. என்று குறைவான அளவும், மிகுதியான அளவும் ஒப்பிடப்படுகிறது. விவசாய நீர் அமைப்பு முறையை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. நேரத்தின் அடிப்படையில்
2. பாத்திரத்தின் எண்ணிக்கையில்
3. பயிரின் வளர்ச்சிக்கேற்ப

**1. நேரத்தின் அடிப்படையில்**

பொது மொழியில் நீர்மத்தைக் கணக்கிட லிட்டர் கணக்கு உள்ளது. லிட்டரின் தொகுப்பிற்குத் தகுந்தவாறு அதன் அளவை, அமைப்பும் மாறுபடும்.

| | லிட்டர் | தொகுப்பு |
|---|---|---|
| பால் | லிட்டர் | கேன் |
| தண்ணீர் | லிட்டர் | கேன் |
| எண்ணெய் | லிட்டர் | டின்/கேன்/பேரல் |

ஆனால் விவசாயத்தில் நீர் பாய்ச்சும் போது லிட்டர் கணக்கை தவிர்த்து, மோட்டர், டீசல்/ பெட்ரோலில் இயங்கும் இயந்திரமாக வந்தால் நேரத்தின் அடிப்படையில் நீர் மதிப்பிடப்படுகிறது. "என் வயலுக்கு இரண்டு மணி நேரம் தண்ணீர் கொடு" என்று மணியின் மதிப்பீட்டில் பணம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

**2. பாத்திரத்தின் எண்ணிக்கையில்**

விவசாயத்தில் நீர் அளவை மதிப்பீடு செய்வதற்கு இரண்டாவது முறையாகப் பாத்திரங்களின் எண்ணிக்கையில் மதிப்பிடப்படுகிறது.

மோட்டார் 'வாய்க்கால்' போன்றவற்றிலிருந்து நீர் வரும் போது மட்டும் நேரத்தின் அடிப்படையிலும் 'ஏற்றம்' போன்ற மனித உழைப்பால் நீர் எடுக்கும் போது பாத்திரத்தின் எண்ணிக்கையிலும் அளவிடப்படுகிறது.

1. குடத்தின் எண்ணிக்கையில்
2. ஏற்றச்சாலின் எண்ணிக்கையில்
3. காக்கட்டையின் எண்ணிக்கையில்
4. டின், எறவட்டின் எண்ணிக்கையில்

காய்கறி, தனித்தனி செடிகள் மற்றும் சிறு பாத்திகளுக்கு – குடத்தின் அளவு. நிலங்களுக்கு – ஏற்றம், காக்கட்டை, டின்/எறவட்டி அளவு. யாரும் விவசாயத்தில் 1000 லிட்டர் தண்ணீர் கொடு என்று கேட்பதில்லை. ஆனால் இதே மக்கள் அதே நிலையில் வீட்டில் உபயோகப்படுத்தும் போது

அவர்களிடம் இருக்கும் பாத்திரத்தின் அளவையும், லிட்டர் அளவையும் மதிப்பீடாகக் கொள்கின்றனர்.

ஒரு பொருளை எந்தப் பாத்திரத்தால் கொடுத்தார்களோ அதே பாத்திரத்தால் பெறுவது அவர்களின் முறையாக உள்ளது. வீட்டில் சமைக்கும் போது குறைந்த அளவாக சொட்டினையும், அடுத்து தேன் கரண்டி அளவும், எண்ணெய் ஊற்றும் போது குழிக்கரண்டி அளவும், குழந்தைக்கு திரவ உணவு கொடுக்கும் போது பாலாடையின் அளவும், மதிப்பிடப்படுகிறது. நாட்டுப்புறங்களில் நாட்டு மருந்து கொடுக்கும் அளவைகள் முற்றிலும் மாறுபட்டன.

விவசாயத்தில் எடுத்துக்கொண்டால் நிலத்தில் நீர் பாய்ச்ச, வாய்க்காலில் இருந்து வயலுக்குச் சென்றால் – மணிக்கணக்கு; ஏற்றத்தின் வழியாகச் சென்றால்–சாலின் கணக்கு. கையால் எடுக்கும் டின், எறவட்டி, போன்றவற்றால் அதன் எண்ணிக்கைக் கணக்கு.

**3. பயிரின் வளர்ச்சிக்கு ஏற்ப அளவைகள்**

விவசாயத்தில் பயிரின் வளர்ச்சிக்கு ஏற்ப அளவைகள் மாறுபடுகிறது. இதனை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. தண்டின் அளவு    2. வேரின் அளவு

**1. தண்டின் அளவு**

நெற்பயிர் போன்ற தானியப்பயிர்களுக்கு நீர் வைக்கும் போது தண்ணீர் வளர்ச்சியையும், நீர் கரை ஏறும் பக்குவத்தையும் கொண்டு நீர் அளவிடப்படுகிறது.

சான்றாக,

கணு ஏற தண்ணி வை – வளர்ந்தப் பயிரின் கணுவினை மதிப்பீடு செய்து அதன்அளவில் (இரண்டு/ மூன்று கணு)

1. சிறுவாடு தண்ணி – தரை மூழ்கிய நிலை
2. மொளத் தண்ணி – முளைத்த நாற்று மூழ்கும் நிலை
3. கணு ஏறத்தண்ணி – நெற்பயிரின் கணுவைத் தொடும் அளவு

**2. வேரின் அளவு**

வாழை, வெற்றிலை போன்ற நீர்த்தேக்க சாகுபடி முறைகளில் அப்பயிரின் வேர் மறையும் அளவில் வேர் நீர் உறிஞ்சும் அளவில் நீர் பாய்ச்சுதல். திண்ணை அமைப்பில் பயிர்செய்யப்பட்ட வாழை, வெற்றிலைக்கு அதன் வேர் நனையும், மூழ்கும் அளவைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது.

## II. திடப்பொருள்

நாட்டுப்புற அளவைகளில் எண்ணிக்கை அதிகமாகத் தொகுப்பு சொற்களாகவே உள்ளன. சாதாரண வழக்கில் எண்ணிக்கையில் இருப்பது கூட விவசாயப் பயன்பாட்டில் தொகுப்பு சொற்களாகவே உள்ளன. எண்ணக் கூடியதாக உள்ள வெற்றிலை, வாழை, தேங்காய், செங்கல், விலங்குகள் அனைத்தையும் தொகுப்புச் சொற்களாகக் குறிப்பிடுகின்றனர். சில உதாரணங்களைக் காணலாம்.

| | உள்ளூர்ப் பயன்பாடு | | ஏற்றுமதி |
|---|---|---|---|
| பொருளின் பெயர் | குறைந்த மதிப்பீட்டில் | அதிகமான மதிப்பீட்டில் | மிக அதிகமான மதிப்பீட்டில் |
| 1. வெற்றிலை | ஒன்று | கவுளி | கட்டு, கூடை |
| 2. வாழை | பழம், சீப்பு, தார் (கட்ட) – ஒன்று | டசன், தார் | லோடு |
| 3. செங்கல் | சுடாதது–ஒன்று, இரண்டு சேர்ந்தது – கை | கட்டாயம் | லோடு |
| | சுட்டது – ஒன்று, இரண்டு சேர்ந்தது – கை | அடுப்பு எண்ணிக்கையில் (தனிக்கல்லாக) | லோடு/கட்ட |
| 4. மாடு | ஒன்று<br>இரண்டு (ஜோடி) | தாமுனி<br>கெட | மந்தை<br>லோடு |
| 5. நெல் | படி<br>மரக்கா<br>சேர | கலம்<br>மூட்டை<br>பட்ர<br>கோட்ட<br>பத்தாயம்<br>குதுரு | லோடு/<br>ஏற்றிச் செல்லும்<br>போக்குவரத்து<br>சாதனத்தைக்<br>கொண்டு<br>எண்ணிக்கையில் |
| 6. தேங்காய் | ஒன்று<br>இரண்டாக (கை) | சாக்கு<br>மூட்டை | லோடு,<br>ஏற்றிச் செல்லும்<br>போக்குவரத்து<br>சாதனத்தைக்<br>கொண்டு<br>எண்ணிக்கையில் |
| 7. நாற்று | குத்து<br>முடி<br>கப்பாங்கு<br>முட்டு | பொனையல்<br>கலசம்<br>குப்ப<br>விதை நெல்லின்<br>மதிப்பீட்டில் | கட்டு,<br>வண்டி,<br>மாலை, |
| 8. தென்னைமரம் | ஒன்று | தோப்பு | அதன் எண்ணிக்கையில் |

| | | | |
|---|---|---|---|
| 9. மீன் | ஒன்று | கூறு | கூடை ,கூடை<br>ஏற்றிச் செல்லும்<br>எண்ணிக்கையில்/<br>போக்குவரத்து<br>சாதனத்தின்<br>எண்ணிக்கையில் |
| 10. பஞ்சு | வயலில் எடுக்கும்<br>போது, மாடி,<br>விற்பனையில்--கிலோ | சாக்கு<br><br>தாட்டு | அதன்<br>எண்ணிக்கையில்<br>லோடு/<br>ஏற்றிச் செல்லும்<br>போக்குவரத்து<br>சாதனத்தின்<br>எண்ணிக்கையில் |
| 11. வீடு | ஒன்று | தெரு | ஊர் |
| 12. காய்கறி | கூறு<br>கிலோ | மூட்டை<br>பெட்டி<br>கூடை | லோடு<br>ஏற்றிச் செல்லும்<br>போக்குவரத்து<br>சாதனத்தின்<br>எண்ணிக்கையில் |
| 13. பவுன் | குண்டு மணி | சவரன் | கிலோ<br>(வெள்ளி விதையின்<br>மதிப்பீட்டில்) |
| 14. சாதம் | கரண்டி | கப்பு<br>கிலோ<br>கிராம் (ஹோட்டல்) | பானையின்<br>மதிப்பீடு<br>அரிசியின்<br>மதிப்பீட்டில் சாதம் |
| 15. பேப்பர் | ஒன்று | குயர் | ரீம் |
| 16. (நீர்மம்)<br>பனங்கள் | மட்ட,<br>கப்பு, | புட்டி<br>குடுக்க | பானை<br>லிட்டர் |

## எண்ணிக்கை அல்லாதது

| | | | |
|---|---|---|---|
| வைக்கோல் | பன்ன,<br>திரை, | கட்டு<br>வண்டி | போர் |
| உரம் | நாட்டு உரம்<br>(கூட) | வண்டி | அதன்<br>எண்ணிக்கையில் |

## மதிப்பீட்டின் அடிப்படையில் அளவைகள்

எந்தப் பொருளாக இருந்தாலும் அதனை ஒப்பிட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் அதன் தரத்தை அளவிடுவது ஒரு முறையாக உள்ளது. குறிப்பாக, நெற்பயிர், தென்னந் தோப்பு, வாகனம் இதுபோன்று எந்த பொருளையும் இவ்வாறு செய்கிறார்கள். நெல் விளைச்சலாக இருந்தால் மதிப்பீட்டின் அடிப்படையில் 'மேனி' என்ற வார்த்தையைப் பயன்படுத்து கிறார்கள். (மேனி 12 மரக்கால் கொண்ட தொகுப்பு)

இந்த ஆண்டு இரண்டு 'மேனி' விளையும் மூன்று 'மேனி' விளையும் என்றும், முன்பு உள்ள பொருளின் மதிப்பீட்டை உணர்ந்து இப்போது உள்ள பொருளின் தரத்தைக் கண்ணால் பார்த்து ஒப்பீட்டடிப்படையில் விலை நிர்ணயம் செய்தலும் உண்டு.

மாடு – முன்பு விற்ற மாட்டின் விலை, தற்போது இருக்கும் மாட்டின் தோற்றம், அதன்அடிப்படையில் (அனுபவ அறிவின்) விலை நிர்ணயம் செய்தல்.

## தரமதிப்பிடல்

1. வயதை மதிப்பிடுதல் – வளர்ச்சி, மனிதன், மிருகம், மரம்
2. கையால் நிமிட்டுதல் – தானியம்
3. தட்டிப் பார்த்தல் – பானை/வளையல்
4. கையால் இறுக்கிப் பார்த்தல் – நெல்/கடலை
5. சுவைத்துப் பார்த்தல் – உணவு/மண்
6. கிள்ளிப் பார்த்தல் – காய்கறி
7. சத்தத்தை உணர்ந்து பார்த்தல் – மரம்
8. முகர்ந்து பார்த்தல் – உணவு, காய்கறி, பூ
9. ஆட்டிப் பார்த்தல் – தேங்காய்
10. உரசிப் பார்த்தல் – செங்கல்
11. மோதிப் பார்த்தல் – பச்சைக்கல்/ தேங்காய்
12. நிறத்தை மதிப்பிடல் – பயிர்
13. கடித்துப் பார்த்தல் – கரும்பு
14. பிசைந்து பார்த்தல் – மாவு
15. இழைத்துப் பார்த்தல் – மரம்
16. ஒடித்துப் பார்த்தல் – காய்கறி, விறகு

### 1. உயிருள்ள பொருளின் வயதை மதிப்பிடல்

மனிதன் – பிறந்த தேதி, இல்லையேல் முகத்தோற்றம், உடல் உறுப்புகளின் வளர்ச்சி

| | | |
|---|---|---|
| மரம் | – | தோலின் அமைப்பு, பூ/காய்ப்புத்தன்மை, அடி மரத்தின் பருமன், கிளைகளின் வளர்ச்சி, உள் மரத்தில் வைரம் தோன்றுதல். |
| மாடு | – | பல்லைப் பார்த்து மதிப்பிடல்/ உருவத்தின் பொலிவு |
| நாற்று நெற்பயிர் | – | கணுக்களை வைத்து மதிப்பிடல் |
| தென்னை | – | பாளையை வைத்து மதிப்பிடல் |

## 2. கையால் நிமிட்டுதல்

நிலக்கடலையின் விதை (சரக்கு), தானியவிதை, வறுத்த தானியம், துணி முதலியவைகளை வாங்கும்போது கையால் நிமிட்டிப் பார்த்து வாங்குகிறார்கள்.

தானியம் – நிமிட்டும் போது அதன் தோல் மேலே எழுப்பும் விதத்தை வைத்து சோடை தன்மையை உணருதல்.

துணி – மென்மை மற்றும் அதன் நூல் கோர்த்திருக்கும் அமைப்பை உணருதல்.

## 3. தட்டிப்பார்த்தல்

ஒரு பொருளில் ஒலியை ஏற்படுத்தி அதன் சத்தத்தைக் காதால் உணர்ந்து அதன் தரத்தை மதிப்பிடல், (எ.கா) இசைக்கருவிகள், தேங்காய், மரம், பானை, வளையல் போன்றவற்றில் அதன் ஒலியைக் காதால் கேட்டு அதன் தரத்தை மதிப்பிடுதல்.

## 4. கையால் இறுக்கிப் பார்த்தல்

நெல்லின் தரமதிப்பீட்டை உணர ஒரு கையால் நெல்லை அள்ளி இறுக்கி பிடித்து அழுத்தி அதன் உள் வாங்கும் தன்மை, அல்லது இறுகாத தன்மையை தொடு உணர்வால் உணர்ந்து அதனின் தரத்தை மதிப்பிடுதல். விதை எடுக்க நிலக்கடலையையும் அவ்வாறே மதிப்பிடுகிறார்கள்.

## 5. சுவைத்துப் பார்த்தல்

சில பொருள்களை அதன் சுவைப்புத் தன்மையை நாக்கால் சுவைத்துப் பொருளின் தர மதிப்பீட்டை உணருகின்றனர். மண், உணவு போன்றவற்றை அதனின் சுவைப்புத் தன்மையைக் கொண்டு மதிப்பிடுதல்.

**உதாரணமாக:**

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கை வட்டம், குமாரகுடி என்ற ஊரில் (மாரகுடியார்) இராமலிங்கம் என்பவர் காலவாய்க்கு கல் அறுக்கும் தொழில் தெரிந்தவர். மிகவும் கை தேர்ந்தவர், பல வகையான மண்ணின் சுவை தெரிந்தவர்.

இம் மண்ணில் செங்கல் சுட்டால் நல்ல நிறம் வரும். இம்மண் உடையும் தன்மை கொண்டது. இந்த வகையான களிமண் நன்றாக இறுகும் தன்மை கொண்டது என்று மண்ணைக் குழைத்து அதை நாவினில் வைத்துச் சுவைத்து அதன் தரத்தை மதிப்பிடுவார்.

### 6. கிள்ளிப்பார்த்தல்

சில பொருள்களின் தரத்தை மதிப்பிட நகத்தால் கிள்ளிப் பார்த்துதான் மதிப்பிடுகிறார்கள். காய்கறிகளான வெண்டை, கத்தரி, சுரைக்காய் போன்றவற்றின் தரத்தை மதிப்பிட அதன் மென்மைத் தன்மையை உணரத் தோல் பகுதியைக் கிள்ளிப் பார்த்து மதிப்பிடுகிறார்கள்.

### 7. சத்தத்தை உணர்தல்

இது தட்டிப் பார்த்தல் என்பதில் உள்ளடக்கமாக இருக்கிறது.

### 8. முகர்ந்து பார்த்தல்

நாட்டுப்புற மக்கள் சில வகையான பொருள்களை முகர்ந்து பார்த்து தரத்தை மதிப்பிடுகிறார்கள். மூலிகை இலைகள், தானியப் பயிர்கள் போன்றவற்றை மண்/சேர் கொண்டு மூட்டம் போட்டு பிரிக்கும் போது அதன் தன்மையின் வாசனையை வைத்துதான் மதிப்பிடுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| குழைவு சேற்றில் | – | நடவு சேற்றிற்கு ஒரு வாசனை |
| புழுதி | – | (நடவு) புழுதிக்கு ஒரு வாசனை |
| மணல் | – | வீடு கட்டப் பயன்படும் மணல் மற்றும் சவுடு கொண்டு கல் அறுக்கப் பயன்படும் சேற்றில் ஏற்படும் வாசனை |
| நெல், எள் | – | போன்றவை மூட்டம் போட்டு பிரிக்கும்போது கிடைக்கும் வாசனை. |

என்று அந்த வாசனையின் அடிப்படையில் அதன் தரத்தை மதிப்பிடுகிறார்கள்.

### 9. ஆட்டிப் பார்த்தல்

தேங்காய், இளநீரின் தன்மையை உணர அது ஆடும் சத்தத்தை உணர்ந்து அதன் தன்மையை மதிப்பிடுகிறார்கள்.

### 10. உரசிப் பார்த்தல்

பவுன், டைமன் போன்ற பொருள்களை அதன் தன்மையை மற்ற பொருட்களுடன் உரசி அதன் பளபளப்பு தன்மையைக் கொண்டு தரத்தை மதிப்பிடுகிறார்கள்.

## 11. மோதிப் பார்த்தல்

செங்கல், பச்சைக்கல் விலைக் கொடுத்து வாங்கும் போது இரண்டு கற்களை ஒன்றோடு ஒன்றாக மோதி அதன் உடையும், உடையாத தன்மையைக் கொண்டு அதன் தரத்தை மதிப்பிடுகின்றனர்.

## 12. நிறத்தை வைத்து மதிப்பிடுதல்

ஒரு பொருளின் நிறமே அதன் தன்மையை உணர்த்துகின்றது. பயிர்களின் முதிர்ச்சி, மரங்களின் முதிர்ச்சி, சாதத்தின் பக்குவம், பஞ்சின் நிறம், என நிற மாற்றத்தை வைத்தே அதன் தரத்தை மதிப்பீடு செய்கின்றனர்.

| | | |
|---|---|---|
| பஞ்சு | – | வெண்மையின் தன்மையை வைத்து |
| கடலைச் செடி | – | செடியின் பழுப்பு நிறம் (அதன் முற்றிய தன்மையை உணர) |
| கடலை | – | அதன் தோல், பழுப்பு. கடினத் தன்மையை வைத்து |
| நெல் | – | பழுத்த/பழுப்பு நிறம் கொண்டால் அதனை வைத்து, அதன் முதிர்ச்சியை உணர முடிகிறது. |

## 13. கடித்துப் பார்த்து மதிப்பிடுதல்

சில பொருள்களைப் பற்களால் கடித்து அதன் தரத்தை மதிப்பிடுகின்றார்கள். கரும்பு, பாக்கு, பஞ்சு, சில வகை உணவுகள் போன்றவற்றை அதன் இறுகு தன்மையை வைத்து மதிப்பிடுகின்றனர். பஞ்சின் தர மதிப்பீட்டில் நிறம், விதையின் ஈரத்தன்மை போன்றவை முக்கியமாக கருதப்படுவதால் அவற்றின் தன்மையை மதிப்பிடுகின்றனர்.

## 14. பிசைந்து பார்த்தல்

மாவுப் பொருள்கள், உலர்ந்த, நீர்மம் கலந்த பொருள்களைப் பிசைந்து பார்த்து அதன் தன்மையை மதிப்பிடுகின்றனர். குழைத்த மண், வீடுகட்ட குழைக்கும் பக்குவம், கல் அறுப்பதற்குக் குழைக்கும் பக்குவம், விதைவிட, நடவு நட போன்ற அனைத்து நிலைகளிலும் மண்ணைப் பிசைந்து அதன் தன்மையைக் கொண்டு அதன் தரத்தை மதிப்பிடுகின்றனர்.

## 15. இழைத்துப் பார்த்தல்

மரம், கருங்கல் வாங்கும் போது அதன் தன்மையை உணர அதனை இழைத்து அதன் தரத்தை உணருகின்றனர். இழை கருவியால் இழைக்கும் போது ஏற்படும் பளபளப்புத் தன்மை அதன் தரத்தை உணர்த்துகின்றது. இது இளமையான மரமா, முற்றியதா என்பதையும் உணரமுடிகிறது.

### 16. ஒடித்துப் பார்த்தல்

நாட்டுப்புறங்களில் அடுப்பிற்கு விறகு, சமையலுக்கு முருங்கைக்காய், வெண்டைக்காய் போன்றவைகளை வாங்கும்போது ஒடித்து அதன் தரத்தை மதிப்பிடுகின்றனர்.

விறகு ஒடித்தல் – அதன் காய்ந்த தன்மையை உணர

முருங்கை, வெண்டைக்காய் – இதன் பிஞ்சுத் தன்மையை உணர

எனவே அளவு என்பது பல பரிணாமங்களில் மக்களால் நாட்டுப்புறத்தில் இன்றும் அளவிடப்படுகிறது.

### அளவைக் கருவிகள்

அளவை என்பது – ஒரு பொருளின் பரிணாமங்களை பல அளவை முறைகள் மூலமாக மதிப்பிடல்

இந்த அளவைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. கருவிகள் கொண்டு அளவிடுவது
2. புலன்கள் வழியாக அளவிடுவது

இந்த இரண்டு தன்மைகளையும் மேலே விளக்கினோம். கீழே அளவைகளை அளக்கப் பயன்படும் கருவிகளை மட்டும் வைத்து இங்கு சிந்திப்போம். இந்தக் கருவிகளைப் பொதுமை அடிப்படையில் இரண்டு வகைப்படுத்தலாம்.

1. பொதுமைப் படுத்தப்பட்ட அளவைக் கருவி
2. பொதுமைப் படுத்தப்படாத அளவைக் கருவி.

### 1. பொதுமைப் படுத்தப்பட்ட அளவைக் கருவி.

பொதுமைப் படுத்தப்பட்டது என்பது அரசினால் அங்கீகரித்து எல்லா இடங்களிலும், பொதுமையாக எந்த வேறுபாடும் இல்லாமல் பயன்படுவது.

1. ஒரு லிட்டர் என்பது தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் ஒரே அளவாகத்தான் இருக்கும்.
2. தராசுகளின் வகைகள் எல்லா இடங்களிலும் ஒரே அளவாகத்தான் இருக்கும்.

### 2. பொதுமைப் படுத்தப்படாத அளவைக் கருவி.

அவரவர்கள் தங்களின் மனநிறைவுக்குத் தகுந்தவாறு பொருளின் இருப்பிற்குத் தகுந்தவாறு தங்களிடம் இருக்கும் பாத்திரங்களுக்குத் தக்கவாறு அளவை கருவிகள் வேறுபடும்.

(எ.கா).

1. நாட்டு உரம் வாங்கினால் ஒரு வண்டி எரு என்பது அவரவர்கள் ஊரில் உள்ள வண்டியின் அளவு.
2. ஒரு மரக்கா கூலி என்றால் அந்தந்த ஊரில் உள்ள மரக்காவின் அளவு.

ஒரு படி அரிசி என்பது அவரவர்கள் ஊரில் உள்ள படியின் அளவைப் பொறுத்தது. ஒரு மரக்கா நெல் என்பது அந்தந்த ஊரில் உள்ள மரக்காவின் அளவைப் பொறுத்தது. எனவே நாட்டுப்புறத்தில் அளவைக் கருவி என்பது எந்த சூழலில், எந்த இடத்தில் எதை தொடர்ச்சியாகப் பயன் படுத்துகிறார்களோ அதுவே அளவுக்கருவியாக இருக்கும் இந்த வகைப்பாடுகளில் சிலவற்றை கீழே காண்போம்.

**நீர்மத்தை அளக்க**

1. சால்
2. குடம்
3. லிட்டர் படி

**தானியங்களை அளக்க**

படி, மரக்கா, திராசு வகைகள்

**வெண்ணெய் அளக்க**

நூல் திராசு, கோல் திராசு, உருண்டையின் மதிப்பீடு.

**கள்**

மட்டை, கப்பு, குடுக்கை, கலயம், பானை.

இன்று அளவை எல்லா ஊர்களிலும், ஒரே தன்மையாக இருக்கின்றது. ஆனால் முன்பு ஊருக்கு ஊர், வட்டாரத்திற்கு வட்டாரம் அளவைகளில் நிறைய முறைகள் இருந்திருக்கின்றன. பல்வேறு தொழில்களில் பல்வேறு கருவிகளை அளவைக் கருவிகளாக பயன்படுத்தி உள்ளனர். அவர்களிடம் எந்தப் பொருள் இருக்கின்றதோ அதையே அவர்கள் அளவைக் கருவியாகவும், ஒவ்வொன்றிற்கும் தனித்தனி பொருள்களும் இட்டுள்ளனர். இக்கட்டுரையில் குறைந்த அளவு சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் ஒட்டுமொத்த தமிழகத்தில் அளவைகளை ஒப்பிட்டு ஆராய்ந்தால் நிறைய புதுப்புது கலைச்சொற்கள் கிடைக்கும்.

# 7. விவசாயக் கலைச்சொற்களில் மனித உடல் உறுப்புச் சொற்கள்

மனித வாழ்க்கையில் சரிபாதி என்பதை விட அதிக முக்கியத்துவம் கொடுப்பது அவன் செய்யும் தொழிலுக்குத்தான். "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதுதான் அதன் வெளிப்பாடு. அவன் தன் மேல் வைத்திருக்கும் மதிப்பு அக்கறையை விட அவன் அவனது தொழில் மேல் வைத்திருக்கும் ஈடுபாடுதான்அதிகம். ஒரு மனிதனின் உள் மன வெளிப்பாடு அவன் செய்யும் தொழிலைச் சார்ந்ததே. அவன் செய்யும் தொழிலுக்குத் தகுந்தவாறு அவனது பழக்க வழக்கம், பண்பாடு வெளிப்படும். ஒவ்வொரு தொழிலுக்கென்று சில குணங்களை இவ்உடல்/ உயிர் வெளிப்படுத்தும். ஆசிரியர் தொழில் செய்பவர், கோயிலில் அர்ச்சகராக இருப்பவர், கொல்லு பட்டறையில் இருப்பவர்கள், உப்பு நீரில் மீன் பிடிக்கச் செல்பவர்கள், மதுக்கடையில் வேலை செய்பவர், ஓட்டுனர் தொழில் வேலை செய்பவர், காவல் துறையில் பணியாற்றுபவர் என்று அனைத்து தொழிலாளர்களின் உள் உணர்வும் ஒன்றாக இருப்பதில்லை. இருக்கவும் முடியாது. அவன் வாழும் வாழ்க்கை அவன் பேசும் பேச்சு அவன் வெளிப்படுத்தும் குணம், அனைத்தும் அவன் செய்யும் தொழிலிருந்து வெளிப்படுவதுதான். அதுபோன்று தான் விவசாயத் தொழிலும் பழங்காலத்திலிருந்து இன்று வரைக்கும் அவன் வாழ்க்கையோடு வளமிறங்கியது. அவன் காலையில் கண் விழித்துப் பார்ப்பது பயிரைத்தான். காலையில் வெளியில் சென்ற விவசாயி இரவு, பயிர் உறங்கியதும் தான் வீடு வருவான். இன்று எத்தனையோ தொழில்கள் வளர்ந்து விட்டன. அன்று அனைத்தையும் உள்ளடக்கி வெளிப்படுத்தியது விவசாயம் தான்.

விவசாயம் பொய்த்தால் மனித வாழ்க்கையும் பொய்த்து விடும். இவன் சோற்றிலே கை வைக்க வேண்டும் என்று முற்பட்டால் யாரோ ஒருவன் முன்பு சேற்றிலே கால் வைத்திருந்தால் தான் இது முடியும். அன்னமிட்டு வளர்க்கும் பூமித்தாயை அவன் அன்போடு கவனித்தான். நிலத்தில் நீர்வற்றினால் இவன் இதயத்தில் இரத்தம் வற்றும். அவ்வாறு மண்ணோடு மண்ணாக மண்ணில் மனதை கரைத்தான். இந்த மண்ணில் இவனது பலம் பலவீனம் அனைத்தும் இந்த விவசாயம் தான். பயிரைத் தரக் கூடிய இந்த நிலத்தைத் தன் உயிரைவிட மேலாக மதித்தான். மண்ணில் விளையும் மரத்தை வெட்ட வேண்டுமென்றால் முதலில் மண்ணிடம்

மன்னிப்பு கேட்க வேண்டும். பின்பு வெட்டப்படும் மரத்திடம் கேட்க வேண்டும். இப்பூமித்தாய்க்கு பூசை செய்ய வேண்டும். தானே விதையிட்டு தானே நீர்விட்டு தானே வளர்த்து வைத்த மரத்தை, தான் வெட்ட மனம் தாளாதவன். நிலத்தை தன் தாயின் கருப்பையாக பார்த்தவன். அதை நீர்விட்டு, பண்படுத்தி, பலன் போட்டு, உடல் பொருள், ஆவி அனைத்தையும் நீரோடு கலந்து தாய்க்கு கொடுக்கும் உணவு போல் பயிருக்கு நீர் பாய்ச்சுகிறான். தன் இரத்த பந்தத்தின் முகத்தைக் கண்டானோ இல்லையோ தான் வளர்த்த பயிரின் முகத்தைக் காண மறுப்பதில்லை. பயிர் வாடினால் இவனுக்கு உணவு அருந்த மனம் வாடுகிறது. இது பயிர்தரும் இலாபம் என்பதால் மட்டுமல்ல அதையும் தாண்டி அதன் மீது அவனுக்குள்ள அன்பின் பரிணாமம். ஒரு குழந்தையை வளர்த்தெடுக்கும் முயற்சியை விட உணவு தரும் பயிர்களை வளர்ப்பதில் கவனம் எடுக்கிறார்கள். அதனோடு பேசுவது, அதனோடு பழகுவது, அதனோடு உறங்குவது என்று தானியங்களை வீட்டுக்கு கொண்டு வரும் வரை அவன் சிந்தை எல்லாம் அதனோடு தான்.

எந்த ஒரு பொருள் பலன் தருகின்றதோ அந்த பொருள்கள் எல்லாமே பெண்ணினம்தான். பெண்ணினத்தால் தான் உலகை வளரவும், வாழவும் வைக்க முடியும். நிலம் என்ற தாயின் கருப்பையில் தானிய விதை என்ற விந்துவைப் போட்டால் அது உலகம் உய்விக்க உயிர் அணுக்கள் அடங்கிய தானியங்களை உற்பத்தி செய்கின்றது. மக்களில்தான் ஆண் பெண் என்றால் மரத்திலும், பயிர்களிலும் ஆண் பெண் உண்டுதானே. நிலம் என்ற பெண் பயிர் என்ற சந்ததிகளை ஈன்றெடுக்கிறது. ஒரு மனித முயற்சியால் ஒருவன் என்ன செய்கின்றானோ அத்தனையும் தன்னோடு சார்ந்துள்ள பொருள்களில் பார்க்கிறான். ஒரு பெண்ணிற்கு என்ன படிநிலைகள் நடக்குமோ அத்தனையும் தான் வளர்க்கும் பயிர்களிடம் பார்க்கிறான். பெண்ணின் வளர்ச்சியும் கதிர் ஈனும் பயிரின் வளர்ச்சியும் ஒன்று என்று நோக்கும் இத்தத்துவம் இவனுக்குள் யார் கற்றுக் கொடுத்தது? இயற்கை. பயிரின் பாகத்திற்கு பயிரின் வளர்ச்சிக்கு, மனித உறவுகளின் படிநிலைகளை வைத்திருப்பது விவசாயத்தில்/இயற்கையில் இவன் வைத்திருந்த ஈடுபாடு, இவனது காலப்பழமை, இயற்கையோடு இவன் இணைந்த வாழ்க்கை அனைத்தையும் உணர்த்தும். இதே உறவு மற்ற நாட்டில் இருக்குமா என்றால் கேள்விக்குறிதான்.

## இயற்கையும், மனிதனும்

மனித மனங்களின் வெளிப்பாடு அவன் படுத்துறங்கும் மண்ணின் வெளிப்பாடு. அந்த மண்ணின் வெளிப்பாடு தான் அங்கே வாழும்

மக்களுக்குத் தரும் உணவின் வெளிப்பாடு. பழங்காலத் தமிழகத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று பிரித்தது, இயற்கையின் அமைப்பைப் பொறுத்து மட்டுமல்ல மண்ணின் தன்மையை வைத்தே. ஒரு மாநிலத்தில்/ஒரு மாவட்டத்தில், ஒரு ஊரில், ஒரு வீட்டில் இருக்கும் இடங்களும் அதன் அருகில் இருக்கும் இடங்களும் ஒரே தன்மைகளை கொண்டது இல்லை. குறிப்பிட்ட மண்ணில் விளையும் பயிர்/தாவரம் அடுத்த மண்ணில் விளைவதில்லை. அந்தந்த மண்ணில் விளையும் அந்தந்த தாவரங்களை மனிதன் பராமரிக்க பயன்படுத்திக் கொள்ள பாசத்தைப் பகிர்ந்துக் கொள்ள தவறியதில்லை. இயற்கையின் நிலையை தமிழரின் சித்தாந்தத்தில் பார்த்தால் அவன் எவ் உயிரையும் கொலை செய்தல் பாவமாகக் கருதிவந்துள்ளான். மரங்களையும், செடிகளையும், கொடிகளையும், பயிர்களையும் தன்னைப் போல உயிராக, தன்னைப் போல மனித மனம் கொண்ட தெய்வமாகக் கருதி வந்துள்ளான். அதற்கு எத்தனையோ சான்றுகள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த அனைத்து இலக்கியங்களும் அதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன. இயற்கையை, மரங்களை தெய்வமாக வணங்கும் இந்த மரபு திராவிட மண்ணை விட வேறு எங்கு காண முடியும்! இயற்கைப் பேரழிவிலிருந்தும் மிருகங்களிடமிருந்தும் அவனை பாதுகாத்து உணவு வழங்கி உயிர் கொடுத்தது இந்த இயற்கை. அவனுக்கு இந்த இயற்கையின் மீது அளவு கடந்த பக்தியும், மரியாதையும் உண்டு.

**உதாரணத்திற்குப் பல ஆயிரம் பாடல்**
**அதில் ஒன்று**

*விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி*
*மறந்தனம் துறந்த காழ் முளை அகைய*
*'நெய் பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது*
*நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்' என்று*
*அன்னை கூறினள் புன்னையது நலனே*

(நற்றிணை)

எனவே புன்னை மரத்தைத் தன் சகோதரியாகப் பார்க்கும் உயரிய சிந்தனை உலக இலக்கியங்களில், வாழ்வியலில் எங்கும் காண முடியாது. அது திராவிட மண்ணுக்கு, திராவிட மக்களின் மனங்களுக்கே உரியது. எனவே இயற்கையை இவனை விட நேசித்தவன் உலகில் யாரும் இருக்க முடியாது. மனிதன் எதனோடு

வாழ்ந்தானோ இல்லையோ அவன் இயற்கையோடு, அவனுக்கு உணவு தரும் பயிர்களோடு வாழ, வணங்கத் தவறியதில்லை. இந்தப் பயிர்களே அவனுக்குப் பாசத்தைக் கற்றுக் கொடுத்தது. இந்தப் பயிர்களே நல்ல மனமகிழ்ச்சியைக் கற்றுக் கொடுத்தது. பயிர்களே அன்பையும் அகிம்சையும் கற்றுக் கொடுத்தது. உயிரைக் கொன்று தின்பதைவிடத் தான் வளர்த்து அது தரும் உணவினை உண்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவன். திராவிடனுக்கு உணவு என்றால் அது இயற்கை கொடுப்பதுதான் குறிப்பாகத் தானியம்தான்.

## மனிதனும் தானியமும்

மனிதன் (தமிழகத்தில்) தானியம் அல்லாத எந்த உணவினையும் முழு உணவாக ஏற்றுக் கொள்வதில்லை. மாமிச உணவு என்பது தெய்வ நம்பிக்கை வழிபாட்டோடு அமையும், குறிப்பிட்டவர்கள் அருந்துவதாகவே அமையும், ஆனால் தானியம் எவரும் எந்த சூழ்நிலையிலும் உணவாக உட்கொள்ளலாம். மாமிசம் வெந்தால்தான் அது உணவு. வேகவைக்காமலே உணவு என்ற தன்மையைப் பெறுவது தானியம். அந்த தானியத்தின் தன்மைகளை விளக்கலாம்.

தானியம் (பெ.) உணவுப் பொருளாகப் பயன்படும் நெல், கோதுமை, கம்பு முதலியப் பயிர்களின் மணிகள் grain.

இவ்வாறு தானியம் என்ற சொல்லுக்கு க்ரியா அகராதி விளக்கம் தருகின்றது. தானியம் என்ற இச்சொல் அரிசி உள்ளடக்கிய அனைத்து உணவுப் பயிர்களையும் குறிக்க, தற்போது குறிப்பிட்ட பயிறு வகைப் பயிர்களை மட்டுமே குறிக்கின்றன. ஒரு காலத்தில் இதுவே முழு உணவாகச் சித்தரிக்கப்பட்டது. இத்தானியப் பயிர்கள் கோயில் கும்பாபிஷேகம் முதல் குடும்ப விஷேசங்கள் வரை பங்களிப்பில் முதன்மை பெறுகின்றன. தமிழர்களின் மங்கல, அமங்கலக் காரியங்களிலும் இதற்குத் தனிச்சிறப்பு உண்டு. அது மட்டுமல்லாமல் மனித உடலுக்குச் சக்தியைத் தருகின்ற சிறந்த உணவுப் பொருளாகவும் இறைவனுக்குப் படைக்கப் படுகின்ற சிறந்த நைவேத்தியப் பொருளாகவும் இருக்கின்றன. இத்தானியப் பயிர்கள் எல்லா வீட்டு அடுக்குப் பானைகளிலும் இருந்த நிலைமாறி வைத்திய, நாட்டு மருந்துக் கடைகளில் மட்டுமே குடியிருப்பதை நம்மால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

## விளையும் பூமி

இத்தானியங்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதியிலும் விளைந்தாலும் குறிப்பாக மானாவாரி நிலங்களிலேயே அதிகமாக விளையக் கூடியது. குறிப்பாகத் தற்போது தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் இன்னும்

விளைவதை விளைவிப்பதை காணலாம். மிகவும் குறிப்பாக இத்தானியங்கள் அனைத்தும் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், ஜமீன் கோடாங்கிப்பட்டி மக்களிடம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர்களிடம் இவை முழு உணவாகவும் பயன்படுத்தப் படுகின்றன.

## நவம்- நவதானியம்

நவம் பெ. (அ.வ) பெரும்பாலும் பிறச்சொற்களோடு இணைந்தது ஒன்பது (mostly a combined form) nine. நவமணிகள், நவரசம்.

நவதானியம் பெ. அவரை, உளுந்து, எள், கடலை, கொள்ளு, கோதுமை, துவரை, நெல், பாசியப் பயிறு ஆகிய ஒன்பது தானியங்கள். nine kinds of grains, viz., beans, blackgram, sesame, bengalgram, horsegram, wheat, redgram, paddy, greengram என்பது க்ரியா அகராதி விளக்கங்கள் தருகின்றன. நவம் என்ற சொல்லும் தமிழக மக்களின் வாழ்க்கையில் சிறப்புத்தரும் முக்கியப் பொருளைக் குறிப்பதாக அமைந்துள்ளது. நவதானியம், நவபாஷானம், நவரத்தினம், நவக்கிரகம், நவராத்திரி, நவநிதி போன்றவை குறிப்பிடத்தக்கது. இந்த நவதானியத்தில் கோதுமையைத் தவிர மற்ற அனைத்து தானியங்களும் அதன் பிறவகைகளும் தற்போது ஜமீன் கோடாங்கிப்பட்டியில் விளைகின்றன.

## நவதானியத்தின் சிறப்பு

முக்கியமாக தமிழர்களின் விழாக்களிலும், பண்டிகைகளிலும் நவதானியங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கோயில் குடமுழுக்கில் யாகசாலை பூசைகள் தொடக்கத்திலிருந்து, அனைத்திலும் தானியம்தான். கோபுரக் கலசத்தில், தானியங்களே அடைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு அடைத்த தானியங்களின் ஆயுட்காலம் 12 வருடம். அதன் பிறகு 12 வருடத்திற்கு ஒரு முறை அத்தானியத்தை மாற்றி கும்பாபிஷேகம் செய்கின்றனர். கும்பாபிஷேகத்தின் அன்று மூலவரை வணங்குவதை விட அத்தானிய அபிஷேகத்தையே வணங்குகின்றோம். இது தமிழர்களின் பண்பாட்டிற்கு தானியத்தின் பயன்பாட்டிற்கு முக்கியச் சான்று. இது தொடர்பான அறிவியல் கதைகளும் மதக்கதைகளும் ஏராளம். கலசத்தில் தானியம் இருப்பதற்கு சான்று (சிதம்பரம் கீழக் கோபுர உள்பிரகார கருவறைக்கு நுழையும் முன் மண்டபத் தூண்களில் வெட்டப்பட்டுள்ளன).

## உணவுகளில் தானியம்

பழங்காலத்தில் உணவு சமைப்பது. கூழ் கிண்டுவது, களி செய்வது பாகு கொழுக்கட்டை, பிட்டு, அடை, இடியாப்பம், தேங்காய் அரிசி, சுடுகதிர்

கெட்டி உருண்டை, அவல் சோறு, கம்பஞ்சோறு உருண்டை, எள்மாவு, பானக்காரம் போன்ற இன்னும் ஏராளமான எண்ணெய் நீக்கிய உணவுகளில் தானியங்களின் பங்களிப்பே முக்கியமானது. குறிப்பாக உணவு என்றால், தானியங்களால் தயார் செய்ததே ஆகும்.

## ஜமீன் கோடாங்கிப் பட்டியில் தானியம்

தூத்துக்குடி மாவட்டம் ஜமீன் கோடாங்கிப் பட்டியில் விளையும் தானியங்களாவன: சிவப்புத் தொவரை, சூரியகாந்தி, சிவப்பு சோளம், ஆமணக்கு, பாசிப்பயறு, கேப்பை, உளுந்து, தட்டாம்பயறு, கொண்டைக் கடலை, பொட்டுக்கடலை, குருதவாலி, கருப்பு எள்ளு, வெள்ள தொவர, பீன்ஸ், மக்காசோளம், நெட்டசோளம், நாட்டுக் கம்பு, ஒட்டுக்கம்பு, கருப்புகானாப் பயறு, கருப்புசோளம் ஆகிய 20 தானிய வகைப் பயிர்களும் அதனுடைய இரகங்களும் அப்பூமியில் செழித்து வளர்கின்றன.

தற்போதும் மக்கள் விளைவித்து வருகின்றனர். இவைகளில் பாதி வெளிச்சந்தைக்கு வருவதாகத் தெரியவில்லை. தற்போது மழைப்பொய்த்து வருவதால், இத்தானியங்களுக்குப் பதிலாக தற்போது மாற்றுப் பயிரைத் தேடி வருகின்றனர்.

இந்நிலை அவ்வூருக்கு மட்டுமல்ல இது அனைத்து தமிழகத்திற்கும் பொருந்தும். உணவுகளில் தானியப் பங்களிப்பு குறைந்து, உடலில் நோயின் பங்களிப்பு மிகுந்தது. மனித உணவுகளில் தானியப் பயிர்கள் இடம் பெற்று அந்த தானியப் பயிர்களை வளர்ப்பதும் உருவாக்குவதும், மனிதனோடு மனிதனாகக் கலந்துவிட்ட ஒன்று. ஆகவேதான் மற்ற தொழில்கள் செய்யும்போது குறிப்பிடும் வார்த்தையை விட தானியப் பயிர்களைப் பயிர்விக்கும்போது அதன் பாகங்களைக் குறிப்பிடும்போது மனித உறுப்புகளாகவே பார்த்து, மனித உறவுகளாகவே பார்த்து, தன்னிடம் நடப்பதை அதனிடம் நடப்பதாகக் கண்டான். தாய் கருவுறுவதும், தானியப்பயிர்கள் கருவுறுவதும் ஒன்று. தாய்க்கு பால் கட்டுவதும். தானியப் பயிர்களுக்கு பால் கட்டுவதும் ஒன்று என்பதை அவன் அழைக்கும் பெயர்களாலே உணரலாம். (இவ்வாறு மற்றத் தொழில் கலைச் சொற்களில் காண இயலாது)

## விவசாயமும் மனிதனும்

திணைகளில் இரண்டு வகை உள்ளது. ஒன்று அஃறிணை, மற்றொன்று உயர்திணை, அஃறிணை, பெ. மனிதர் அல்லாத உயிர்களையும் உயிரற்ற பொருள்களையும் உள்ளடக்கிய பெயர்ச்சொல் பகுப்பு: a class of nouns which includes any entity other than human beings.

உயர்திணை பெ. மனிதரையும், தெய்வங்களையும், உள்ளடக்கிய பெயர்ச்சொல் பகுப்பு; a class of nouns which includes human beings and celestial beings என்று விளக்கம் அளித்துள்ளது.

ஒரு உயர்திணை வாழ வேண்டுமென்றால் அஃறிணையைச் சார்ந்து தான் வாழ வேண்டி இருக்கிறது. ஆனால் அஃறிணை உயர்திணையை நம்பி வாழ வேண்டும் என்ற அவசியம் இல்லை. அஃறிணைக்கும், உயர்திணைக்கும் பொதுமைப் பண்பில் அதிக மாற்றம் இருந்தாலும், உள் உணர்வில், இரண்டும் ஒன்றே. மனித உடலில் உள்ள உயிரும் மரங்களிடம் உள்ள உயிரும் இரண்டும் வேறல்ல ஒன்றுதான். உடல் அமைப்புத்தான் வேறு, அது சதையைத் தாங்கியது. இது மரத்தைத் தாங்கியது. இரண்டு உயிர்களும் ஒன்றாக இருப்பதால் என்னவோ இரண்டின் பரிணாமங்களும் ஒன்றாக உள்ளன. மனிதர்களில் அதன் வளர்ச்சி அதன் பரிமாற்றம் அதன் உடலமைப்பு அனைத்தையும் மனித உறவுகளில், மனித உறுப்புகளை என்னவென்று அழைப்போமோ அவ்வாறே பயிர்களையும் அழைக்கின்றார்கள். மரமானலும் மனிதனானாலும் உயிர் என்று வருகின்றபோது இரண்டும் ஒன்றே. இது திராவிடனின் தத்துவம். எனவே மனித உடல் உறுப்புச் சொற்களையும் விவசாயப் பயிர்களில் பயன்படுத்தப்படும் உடல் உறுப்புச் சொற்களையும் பற்றி பார்ப்போம்.

## பொருள் நீட்டல் உருவக மாற்றம்

ஒரு பொருளைக் குறிக்கும் ஒரு சொல், இன்னொரு புறப்பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் போது அச்சொல் பொருள் நீட்சிக்கு உள்ளாகிறது. இவ்வாறு பொருள் நீட்சி ஏற்பட இரண்டு பொருளுக்கும் அமைப்பு ஒற்றுமையோ, தொடர்ச்சி உறவையோ சுட்ட வேண்டும். அமைப்பு ஒற்றுமையைக் காட்டும் இருபுற உலகப் பொருள்களைக் காட்டும் சொல்லை உருவகம் (metaphor) என்றும், தொடர்ச்சி உறவால் நெருக்கமுறும் இரண்டு பொருள்களைக் காட்டும் சொல்லை ஆகுபெயர் (metonymy) என்றும் மொழியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

விவசாயக் கலைச்சொற்களை நோக்கும்போது மனித உடல் உறுப்பு சொற்கள் மற்றும் மனித உடல் இயக்கங்களின் கருக்கள் பொருள் நீட்சி பெற்று உருவகத் தன்மையில் அமைந்துள்ளன. இவ்உருவகங்களை எடுத்துக் கொண்டால் அது மனிதன் சார்ந்தது, விலங்கு சார்ந்தது, உருவம் சார்ந்தது, அருவம் சார்ந்தது, உணர்வு சார்ந்தது என வகைப்படுத்தப் பட்டுள்ளது ஒரு சொல் உருவகமாகப் பயன்படுத்தப்படுவதால் பொருள் மாற்றம் அமையக் கூடும். ஒரு பொருளைக் குறிக்கும் ஒரு சொல் அப்பொருள் அமைப்பாலோ செயல்பாட்டாலோ, பண்பாலோ தொடர்புடைய

மற்றொரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும்போது அச்சொல் உருவகமாகிறது.

(எ.கா) தண்டு என்பது – கீரைத் தண்டை குறித்தது.

அதே போன்று நேராக இருப்பதையும் குறிப்பிட்ட உருண்டை வடிவமாக இருப்பதையும் முதுகெலும்பு வரிசையை 'தண்டு' என்கிறோம். இதே போன்றுதான் விவசாயத்தில் முதலில் மனித உடல் உறுப்புகள் செயல்பாடு, வடிவம் போன்ற தன்மையில் இடுப்பு – என்பது மனிதனின் இடுப்பையும், நாற்றிற்கு இடைப்பட்ட பகுதியை அதே 'இடுப்பெ'ன்றும் அழைக்கின்றனர்.

இவ்வாறு விவசாயக் கலைச்சொல்லை ஒப்பு நோக்குகின்றபோது மனித உடல் உறுப்புகள், அதன் அமைப்பாலும், செயல்பாட்டுத் தன்மையாலும் உள்ளது. விவசாயப் பயிர்களை, பாகங்களை, செயல்பாடுகளை அவ்வாறு அழைக்கிறோம்.

(எ.கா) காது– என்பது மனிதனின் கேட்கும் உறுப்பு

அதன் வடிவ அமைப்பு தலையின் இருபக்கத்திலும் இருக்கிறது. சில நேரங்களில் காதைப் பிடித்தும் மனிதனைத் தூக்கலாம். இந்தச் செயல் வடிவத் தன்மையில் ஒரு கப்பின் இருமருங்கும் இருப்பதை நாம் காது என்றே அழைக்கின்றோம். இதே சற்று விவசாயத்திலும் வரப்பின் ஓரம் அல்லது வாய்க்காலின் இரு ஓரங்களையும் நாம் காது என்று அழைக்கிறோம். இவ்வாறு மனித உடல் உறுப்புச் சொற்கள் தன்மையாலும், செயல்பாட்டாலும் எத்தனைச் சொற்கள் உள்ளன என்பதைப் பொது மொழிப் பொருளையும் விவசாய மொழியின் பொருளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். எந்த மூலத்திலிருந்து எந்த மூலத்திற்குப் பொருள் நீட்சி பெற்றது என்று ஆராயாமல், இருப்பதை பொருளோடு விளக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக மனிதனின் கருத்துப் பொருள் செயல்பாட்டடிப்படையில் மனிதனைப் போன்று உடல் செயல்பாடுகள் உள்ள விலங்குகளுக்கு நீட்சி பெற்றால் அதன் காரணத் தன்மையை ஏற்றுக் கொள்ளலாம். இது மிகுதியாகப் பயிர்களுக்குப் பெற்றுள்ளது சிந்திக்கத்தக்கது.

## விவசாயச் சொற்களில் மனித உடல் உறுப்புப் பெயர்கள்

விவசாயத் தொழிலில் பயிரின் பாகங்களை ஆய்வு செய்கின்றபோது முக்கிய நிகழ்வுகளைத் தரும் உறுப்புகள் அனைத்தும் மனித உறுப்புகளின் பெயர்களையே தாங்கி வருகின்றன. எந்தப் பயிர்களில் எந்த வகையான மனித உடல் உறுப்புப் பெயர்கள் உள்ளன என்பது பற்றி பொது மொழிப் பொருளையும் விவசாய மொழிப் பொருளையும் பார்ப்போம்.

| | சொல் | பொது மொழிபொருள் | விவசாய மொழியின் பொருள் |
|---|---|---|---|
| 1. | சூல் (பெ) | கரு (அவள் சூலுற்றிருக்கிறாள்) | மகரந்த சேர்க்கைப் பின் விதையாக மறக் கூடிய சூல் பையினுள் இருக்கும் பொருள் (பயிர் சூல் புடிச்சிருக்கு) |
| 2. | தாள் (பெ) | கால் (சாமிகளின் தாள் பணிதல்) | தானியப் பயிர்களின் கதிர் நீக்கிய பாகம் (தாளை அள்ளி மாட்டுக்குப்போடு/தாள் விட்டு அறுக்காதே) வைக்கோல் |
| 3. | மூக்கு (பெ) | மூக்கு nose (சுவாசிப்பதற்கு முகத்தில் உள்ள ஒரு உறுப்பு) மூக்கு அடைத்துக் கொண்டது | நெல்லின் முளை இருக்கக் கூடிய நுனிப்பகுதி (நெல் மூக்கு விட்டுட்டு). |
| 4. | இடுப்பு (பெ) | இடுப்பு (மனித உடலில் தொப்புளுக்கு கீழேயும் தொடைக்கு மேலேயும் உள்ள பகுதி, இடுப்பு வலிக்கிறது. | நாற்றின் வேர்பகுதிக்கு மேலும் கீழ்பகுதிக்கும் இடைப்பட்ட பகுதி (நாத்து இடுப்பு ஒடியாம அடி) |
| 5. | சூத்து (பெ) | மனித உடலில் மலவாய் உள்ளப்பகுதி. (வாத்தியார் சூத்தாம் பட்டையில் அடிச்சாரு) | பறித்து கட்டிய நாற்று முடியின் வேர் பகுதியின் அடிப்பக்கம். |
| 6. | ஈனு (தல்) (வி) | பெறுதல், குழந்தை பெற்றெடுத்தல் (தாய் குழந்தை ஈன்றெடுத்தாள்) | பயிர், கதிர் (ஈனுதல்) வெளிவருதல் (பயிர், கதிர் ஈனும் நேரம்) |
| 7. | மூட்டு (பெ) | எலும்புகள் இணைந்தப் பகுதி (நடந்தா மூட்டு வலிக்கிறது) | நாற்றில் வேர்பகுதியும், தண்டுப் பகுதியும் இணைந்த பகுதி. |
| 8. | கணு (பெ.) | மனித உடலில் கைவிரல், முதுகுத்தண்டு முதலியவற்றில் காணப்படும் இணைப்பு. (கணுவுக்குக் கணு வலிக்கிறது) | நெற்பயிரின் தண்டுப் பகுதியில் தோன்றும் இணைப்பு/முடிச்சி (நாத்து இரண்டு கணு ஏறிவிட்டது). |
| 9. | முகம் (பெ) | மனித உடலில், கண், மூக்கு, வாய் முதலியவை அமைந்திருக்கின்ற பகுதி. (அவன் முகம் தெரியவில்லை) | நெல்லின் முளைப்பு வரக்கூடிய, நுனிப்பகுதி (இப்பதான் 'மொகம்' செவந்திருக்கு அறுவடைக்கு நாளாகும்). |
| 10. | தலை சாய் (தல்) (வி) | மனிதனின் தலைப்பகுதி ஒரு பக்கமாக சாய்த்தல். (அவன் தலையை சாய்க்கின்றான்). | நெற்கதிர் முற்றி கதிரின் நுனிப்பகுதி கீழ் நோக்கி சாய்தல் (பயிர் தலசாய்ந்திடுச்சி அறுப்பு வெக்கலாம்). |
| 11. | வாய்விடு(தல்) (வி) | வாய்திறத்தல் | நெல் பால் பிடிக்கும் தருணத்தில் பால் பிடிக்காமல் தோல் பகுதி திறத்தல். (கதிரு நெறைய வந்திருக்கு. இப்ப சாத்தடிச்சா எல்லாம் வாய் விடும்). |
| 12. | அண்டவாய் (பெ.) | உள் தொண்டைப் பகுதி (உன் அண்ட வாயைத் திறக்காதே) | வரப்பின் ஓரத்தை சுத்தம் செய்த பகுதி. |
| 13. | படுத்திடு (தல்) (வி) | அசதியின் காரணமாகப் படுத்தல் (அவன் படுத்திருக்கான்) | நெற்பயிர் முற்றி வயலில் தரையோடு தரையாக சாய்ந்து கிடத்தல். (பயிறு படுத்திடுச்சி அறுக்க முடியாது). |

| | சொல் | பொது மொழிபொருள் | விவசாய மொழியின் பொருள் |
|---|---|---|---|
| 14. | தொண்டை (பெ) | தொண்டை–கழுத்துப்பகுதியின் உள்பகுதி (தொண்டை கட்டி விட்டது) | கதிர் உருவாகி பயிரை விட்டு வெளிவராத நிலை (தொண்ட கதிரா இருக்கு தண்ணீர் நிறைய வைக்கனும்) |
| 15. | பால் பிடி (த்தல்) (வி) | பெண்கள் கர்ப்பிணியாக இருக்கும் போது மார்பகத்தில் பால் தோன்றுதல். மார்பகம் பருத்தல் | நெற்கதிரில் நெல் உருவாவதற்காக பால் தோன்றுதல் (நெல் பால் பிடிக்கும் நேரத்துல காத்து அடிக்கக் கூடாது). |
| 16. | உட்காரு (தல்) (வி) | மனிதர்கள் தரையில் / தாங்கு பலகையில் உட்காருதல் / அமருதல் (அவன் தரையில் உட்கார்ந்தான்) | நெற்பயிர் பொதுவாக வளர்ச்சி குறைந்து காணப்படுதல் (தண்ணி வைக்கலண்ணா பயிரு உக்காரும்). |
| 17. | தூங்கு (தல்) (வி) | மனிதர்கள் உறங்குதல் (அவர்கள் தூங்குகிறார்கள்) | நெற்பயிரின் தேவையான நீர் பற்றக்குறையால் வளர்ச்சியடையாதது. (பயிரு தூங்குது மகசூல் குறையும்). |
| 18. | திங்கு (தல்) (தின்) (வி) | மனித பயன்பாட்டில் சாப்பிடுதல் / அசை போடுதல் (அவன் தின்றுகிட்டே இருக்கான்) | நெற்பயிர் / கால்களை சேற்றுப் பகுதி அரித்து விடுதல் (காலை சேறு தின்னு விட்டது). |
| 19. | ஓடு (தல்) (வி) | இடம் விட்டு இடம் விரைவாகக் காலால் ஓடுதல் (அவன் ஓடுகிறான்) | நெற்பயிரின் வேர் வளர்ந்து செல்லுதல் (யூரியா வைத்தால் வேர் நன்றாக ஓடும்). |
| 20. | பாய் (தல்) (வி) | ஓர் இடத்தைவிட்டு மறு இடத்திற்கு தாவுதல் (பாஞ்சி கோழிபபிடி) | நெற்பயிரின் வேர்கள் நான்றாக நீர் ஓட்டத்தின் காரணமாகப் பரவி செல்லுதல் (நீரோட்டத்தின் காரணமாக வேர் அடுத்த வயல் வரையும் பாயும்). |
| 21. | காது அற(த்தல்) (வி) | பேச்சு வழக்காக (காது அறுத்தல்) | வெற்றிலை, வாழை போன்றவற்றிற்குப் பாத்தி வெட்டுதல் / சுத்தம் செய்தல் |
| 22. | மொகம் செவ(ருதல்) (வி) | கோபத்தினால் முகம் சிவப்பு நிறம் அடைதல் (அவனைப் பார்த்ததும் மொகம் செவந்து விட்டது). | நெற்கதிரின் நெல்லின் நுனிப்பகுதி முற்றிலும் நிறம் மாறுதல். (நெல்லு மொகம் செவந்திடுச்சி தண்ணிய பாய்ச்சாதே). |
| 23. | மொலை (பெ) | பெண்ணின் மார்பகம் | விதைக்க தயார் செய்ய / விதைத்த தானிய விதை உயிர்பெற்று முளைத்தல் / வளர்த்தல் (முளைப்பு சரியாக வரவில்லை) (ளை & லை) |
| 24. | பரிணாமம் செய் (வி) | உயிரினங்கள் சூழ்நிலைக்குத் தக்கவாறு அதன் தோற்றம் / வளர்ச்சியில் மாற்றமடைதல் (மனிதன் குரங்கிலிருந்து பரிணமித்தான்) | வெண்ணிலாப் பயிரில் இனப்பெருக்கத்திற்காக ஆண் பூவின் மகரந்த தூளை பெண்பூவில் தடவிவிடுதல். (பரிணாமம் செஞ்சாத்தான் வெண்ணிலா மகசூல் தரும்). |
| 25. | ஒதடு (பெ) | பேசுவதற்குப் பயன்படும் வகையில் வாயில் அமைந்திருக்கும் பிளவுப்பட்ட உறுப்பு (உதடு) (ஒதடு அசையாம பேசுகிறான்) | மண்வெட்டி இலையின் நுனிப்பகுதி (வெட்டும் போது கல்லுல பட்டு விட்டது அதனால எல ஒத்டு சுருண்டு விட்டது). |
| 26. | பொறம் (பெ) | உடல் உறுப்புக்களின் (கை / கால்) மேல்பகுதி. (பொறங்கையைப் பார்). | மண்வெட்டியின் பின் பகுதி. (பொற மண்வெட்டியால் தட்டி ஓட). |

| | சொல் | பொது மொழிபொருள் | விவசாய மொழியின் பொருள் |
|---|---|---|---|
| 27. | கண் (பெ.) | பார்வையைத் தரும் உடல் உறுப்பு (கண் மறைக்கிறது.) | மரங்களின் இளம் கன்று (வாழக் கண்ணு பட்டு போய் விட்டது). |
| 28. | தடி (வி) | உடல் உறுப்புகள் பருத்தல் (கை தடித்து விட்டது) | சோளம் முற்றி வளருதல் (சோள முத்து தடிக்கவே இல்லை) |
| 29. | வெர (பெ)/ விரை/ விதை கொட்ட | ஆண் குறியில் விந்துவை உற்பத்தி செய்யும் உறுப்பு (வெர வீக்கம்) | தாவரம்/தானியப் பயிர்கள் மீண்டும் உற்பத்திக்கு காரணமானதுமான உற்பத்திக்கு காரணமாக சிறு பகுதி (விதை) (வெதவெர நரமானதாக இல்லை. |
| 30. | பிள்ளை (பெ) | கைக்குழந்தை (புள்ள அழுகிறது) | தென்னையின் இளங்கென்று (இங்கே ஒரு புள்ளையை போடு) |
| 31. | கொல (பெ) | நுரையீரல்/கல்லீரலின் தொகுப்பு (பயத்தில் ஈரக்கொலயே நடுங்கிவிட்டது) | வாழை/தென்னையின் காய்கள் நிறைந்த தொகுப்பு (ஒரு தென்னங்கொலையை வெட்டு). |
| 32. | சோறு (பெ) | வேகவைத்த உணவு (சாப்பாடு) | பனைமரத்தின் உள்ளீட்டுப் பகுதி/கரும்பின் உள்பகுதி (தண்ணி கட்டியதால கரும்ப கடிச்சா சோறு சோறா இருக்கு) |
| 33. | தோலு (பெ) | உடலின் மேல்பகுதி (தோல் சிகப்பு) | தானியங்களின் மேல் பகுதி (தோல் போனால் முளைக்காது) |
| 34. | பால் (பெ) | பெண்களின் மார்பகத்தில் சுரப்பதும் கைக்குழந்தைக்கு உணவாக பயன்படுவதுமான ஒரு வெள்ளை நிற திரவம். (பால் கட்டி விட்டது) | முந்திரிப் பழத்திலிருந்து விதையைப் பிரிக்கும் போது வரும் திரவம் (பால் படாமல் எடு) முற்றாத நெல்லின் உள்ளே இருக்கும் திரவம். |
| 35. | நரம்பு (பெ) | உடலில் இரத்தம் செல்வதற்காக உள்ள உறுப்பு (நரம்பு உடலில் தெரிகிறது) | வாழைப்பூவில் மகரந்தத் தூளை தாங்கி இருக்கும் பகுதி. (சமைக்கும் போது நரம்பை நீக்கு). வெற்றிலையின் காம்பு பகுதிலிலுருந்து செல்லும் தடித்த நார். (நரம்பு தடித்த வெத்தலதான் வெலகம்மி) |
| 36. | சதை (பெ) | உடலில் எலும்பை போர்த்தி இருக்கும் பகுதி (சதை புண்ணாகி விட்டது) | பழங்களின் மேல் பகுதி (மாம்பழத்தில் சதை நிறைய இருக்கு) |
| 37. | நாக்கு (பெ) | வாய்பகுதியில் பேசுவதற்கு பயன்படும் எலும்பு இல்லாத உறுப்பு (நாக்கு வலிக்கிறது) | விதைத்தத் தானிய விதைகள் முளைத்து மண்ணின் மேல் பகுதியில் வந்த பகுதி. (இப்பதான் முளைச்சி நாக்கு நாக்கா வந்திருக்கு) |
| 38. | (மொல) காம்பு (பெ) | பெண்கள் மார்பகத்தின் நுனிப்பகுதி (காம்பை வலிக்கிறது) | வெற்றிலையின் இலையின் தண்டுப் பகுதி. (காம்பை கிள்ளி எடு) |
| 39. | ஓடு (பெ) | தலையின் மேல் பகுதியில் உள்ள உறுதியான உறுப்பு (மண்ட ஓடு) | தேங்காயின் மேல் பகுதி (ஓடு உறுதியாக இருக்கு) |
| 40. | பல்லு (பெ) | வாய்ப்பகுதியில் கடிப்பதற்கு பயன்படும் உறுப்பு (பல்லை வலிக்கிறது) | தேங்காயின் வெண்மை நிறமாக உள்ள சதைப்பகுதி (தேங்கா), பல்லு வளரவில்லை) முத்தவில்லை. |

# 8. கருவிகளின் தொழில் நுட்ப வளர்ச்சியும் மொழிப் பாதிப்பும்

ஒரு மொழியின் வளர்ச்சி ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி புதிய கண்டுபிடிப்புகளின் வளர்ச்சி. ஒரு சமுதாயத்தின் புதிய கண்டுபிடிப்புகள்தான் அந்தச் சமுதாயத்தின் முழு வளர்ச்சியைக் காட்டும். கண்டுபிடிப்புகள் என்றால் பெரும்பாலும் கருவிகளாகத்தான் இருக்கும். ஒரு புதிய கருவி கண்டுபிடிப்பதால் பின்னணியில் எத்தனையோ சமுதாயச் சிக்கலுக்குத் தீர்வு கிடைக்கின்றது. மக்கள் தொகை வளர, வளரக் கண்டுபிடிப்புகளின் தேவை அதிகமாகின்றது. புதிய கண்டுபிடிப்புகளால் பழையன கழிந்து, புதியன தோன்றுகிறது. ஒரு புதிய கருவி தோன்றுவதால் அதன் நேரடி மறைமுகப் பயன்பாடு சமுதாயத்திற்கு அதிகம். அதே சமயம் ஒரு மொழியில் என்ன பயன்பாடு ஏற்படுகின்றது என்று ஒப்பிட்டால் அதனால் கிடைக்கின்ற பயனை விட ஏற்படும் இழப்பு அதிகம் என்றே கூறலாம். ஒரு மொழிக்கு இழப்பு ஏற்படுகிறது என்று கூறினால் எந்த அமைப்பில், அதனால் நமக்கு என்ன பாதிப்பு என்று கேட்கலாம். சாதாரண நிலையிலிருந்து அதைப் பார்த்தால் அனைத்தும் சாதாரணம் தான். ஒரு மொழியியலாளன் என்ற முறையில் பார்த்தால் அவ்விழப்பு பேரிழப்பு தான். பேரிழப்பு ஏற்படுகின்றதே என்று புதிதாக வரும் கருவியைத் தடுப்பது நமக்கு வளர்ச்சியைக் காட்டாது. அதை விடுத்து, அது வந்து நுழையும் இடத்தில் விலகி செல்லும் தரவுகளை பதிவு செய்தல், அந்த இழப்பிற்கு ஈடு செய்யும். எந்தத் துறையில் நுழைந்த கருவியால் என்ன மொழி பாதிப்பு ஏற்பட்டது என்று இங்கே காண்போம்.

## கருவி உற்பத்தி

புதிய தொழில் நுட்பம் என்பது மனித வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. புதிய தொழில் நுட்பம் தோன்றுவதால் மனித உழைப்பு குறைந்து கருவிகளின் உழைப்பு அதிகரிக்கின்றது. ஒரு கருவி தோன்றுவதற்கு இவை காரணமாக இருக்கலாம்.

1. மனித உயிர்கள் பெருகுவதால்
2. உழைப்பின் பற்றாக்குறையைப் பூர்த்திசெய்ய
3. உணவின் தேவையைப் பூர்த்தி செய்ய

நவீன மேலைநாட்டுக் கருவிகள் நுழைவதற்கு முன்பு, மக்கள் குழுவாகவும், தினந்தோறும் வேலைகளைச் செய்தனர். தினந்தோறும்

குழுவாக இணைந்தனர். வேலையை உடல் உழைப்பால் செய்தனர். செய்யும் போது எத்தனையோ நேரம் களைப்பைப் போக்கப் பேசினர். கருத்துக்களை வெளியிட்டனர். கலைச்சொற்களைப் பிறக்க விட்டனர். பேசுவதற்கும்/இணைவதற்கும் பணியாற்றுவதற்கும் களங்கள் கிடைத்தன. எந்தந்த சூழலில் எந்தக்கலைச் சொற்களைப் பேசினார்களோ, எந்த சூழலில் எந்த கருவிகளைப் பயன்படுத்தினர்களோ அது அப்படியே தொடர்ந்தது. ஆனால் புதிய தொழில் நுட்பக் கருவி நுழைந்ததால் பல வேலைகளை அக்கருவியே செய்யும் படிதான் வடிவமாக்கப்பட்டுள்ளது. 50 பேர் சேர்ந்து செய்ததை ஒரு கருவி செய்து விடுகிறது. அந்தச் சூழலில் அக்கருவி அவ்விடத்தைப் பூர்த்தி செய்வதால் 50 பேர் பேசிய பேச்சுகளை அவ்விடத்தில் பயன்படுத்திய கலைச்சொற்களை அவ்விடத்தில் பயன்படுத்திய கருவிகளை என்ன செய்வது, அது பயனற்றதாகிறது. அந்தக் களம் அழிக்கப்படுகிறது. எந்தக் கூட்டம், களம் அழிக்கப் படுகின்றதோ அந்த மொழியும், கருவிகளும் அழிக்கப்படுகின்றன. அந்தக் களத்தில் பயன்படுத்தியவை வேறு இடத்தில் பயன்படா. இச்சூழல் ஏற்படுவதால் அந்த நாட்டுப்புறக் களங்கள் எல்லாம் மறந்து மறைந்து போகின்றன.

## எத்தனை களங்கள் மறைந்ததோ

சிறந்த மொழி வழங்கும் நாட்டில் களங்களே மொழியைப் பாதுகாத்தன. எப்போது களங்கள் அழிக்கப்பட்டதோ அப்போது அதன் கருக்களும் அழிந்தன. நம் மொழியில் இழந்த களங்களைப் பதிவு செய்யவோ அதைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்யவோ எவரும் முற்படுவதாகத் தெரியவில்லை. சில ஆய்வுகள் ஆங்காங்கே நடந்து கொண்டு தொக்கி நிற்கின்றன.

**இழந்த சில களங்களை இங்கே பார்ப்போம்**

1. புறநானூறு, கலிங்கத்துப்பரணி எழுதப்பட்ட நம் நாட்டில் அந்தக் களங்களில் எத்தனை சொற்கள் பேசப்பட்டனவோ, எத்தனை கருவிகள் பயன்பாட்டில் இருந்தனவோ, அவை எங்கே? (புத்தகத்தில் குறிப்பிட்ட உயர் வழக்கே உள்ளது)
2. எழுத்தாணிகளில் எத்தனை வகை இருந்ததோ, எத்தனை கலைச்சொற்கள் இருந்ததோ.
3. எழுத்தோலை பதனிடும் தொழிலில் எத்தனை கலைச்சொற்கள் இருந்தனவோ, எத்தனை கருவிகள் இருந்தனவோ

4. தோல் கருவிகள் செய்ய மாடு, ஆடு உரிக்கும் போது எத்தனை கருவிகள் கலைச்சொற்கள் இருந்தனவோ.

5. இசைக்கருவிகள் செய்யும்போது எத்தனை கருவிகள், கலைச்சொற்கள் இருந்தனவோ.

6. பிணம் எரிக்கும் தொழிலில் எத்தனை கருவிகள், கலைச்சொற்கள் இருந்தனவோ.

7. புதைப்பதற்கு குழிவெட்டும் போது எத்தனை கருவிகள் சொற்கள் இருந்தனவோ.

8. கோயில் கட்டும்போது எத்தனை கருவிகள், எத்தனை கலைச்சொற்கள் இருந்தனவோ.

9. கருங்கல்லை சிலை வடிக்கும் போது எத்தனை கருவிகள், கலைச்சொற்கள் இருந்தனவோ.

10. எண் தேர் செய்யும் தச்சன் தேர் செய்யும் போது எத்தனை கலைச்சொற்கள், கருவிகள் இருந்தனவோ.

11. துணி துவைக்கும் தொழிலாளர்களிடம் எத்தனை கலைச்சொற்கள் கருவிகள் இருந்தனவோ.

12. தமிழ் சைவ, வைணவ நாயன்மார்களிடம் எத்தனை பூசைக் கருவிகள், கலைச்சொற்கள் இருந்தனவோ

13. பழங்காலப் போர் காலங்களில் எத்தனை ஆடைமுறை, கட்டும் கலைச்சொற்கள் இருந்தனவோ.

14. நளன் போன்றவர்கள் சமைக்கும் போது எத்தனை கலைச் சொற்கள், கருவிகள் இருந்தனவோ, பரத்தை தொழில் (வேசியர்) செய்தவர்களிடம் எத்தனை கலைச்சொற்கள், ஆபரணங்கள் இருந்ததோ

15. நடன மங்கையிடம் எத்தனை வகையான ஆடை முறைகள், அணிகலன்கள், கலைச்சொற்கள் இருந்தனவோ.

16. சிலம்பு செய்வதற்கு எத்தனை வகையான மணிகள், வைரங்கள், கருவிகள் சொற்கள் இருந்தனவோ.

இதைப் போன்று எத்தனையோ களங்கள் இருந்திருக்கலாம். அவை எல்லாம் குறிஞ்சிப்பாட்டு போன்று பாடியிருந்தால் நமக்குக் கிடைத்திருக்கும். மிகப்பெரிய சொத்து அதுதானே. அவை எல்லாம் பதிவு செய்து கிடைக்கவில்லையா, பதிவு செய்யாமல் விட்டு விட்டார்களா?

## எந்தத் துறையில்

இதுவரையில் பொதுவாக நாம் பேசிவந்தாலும் இக்கட்டுரை விரிவாக்கத்திற்காக ஒரு களத்தை இங்கே காண்போம்.

## விவசாயத்துறை

விவசாயத்துறையை நாம் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நம் தமிழ் நாட்டின் முதுகெலும்பு விவசாயம்தான். ஒரு தமிழரின் மொழி அதிகமாக எங்கே இருக்கின்றதென்றால் விவசாயத்துறையில்தான். விவசாயப் பொருட்களத்தில் தான். தமிழ்மொழியில் ஒட்டுமொத்த சொற் தொகுதியில் முக்கால் பங்கு விவசாயக் கலைச் சொற்களாகத்தான் இருக்கின்றன. எனவே அந்தத் துறையில் ஒரு கருவி நுழைந்ததால் என்ன வகையான இழப்பு ஏற்படுகின்றது என்பதைப் பார்போம்.

விவசாயத்தில் பல பொருட்களங்கள் உள்ளன. அவைகளில் கருவிகளின் களங்களை இங்கே காண்போம்.


விவசாயக் கருவிகள்
பயிர் செய்வதற்கு முன்பு
பயிர் செய்யும் போது
அறுவடைக்குப் பின்பு
சுத்தம் செய்தல் தொடர்பானது
நிலத்தைத் தயார்படுத்துதல் தொடர்பான கருவிகள்
உழுதல் தொடர்பான கருவிகள்
நிலத்தைச் சமப்படுத்துதல் தொடர்பான கருவிகள்
நீர் இறைக்க/நீர் செல்ல உதவும் கருவிகள்
விதை தயார் செய்தல் தொடர்பான கருவிகள்
விதைக்கப் பயன்படும் கருவி
அறுவடைக்கு முன்பு பயன்படும் கருவிகள்
அறுவடைக்குப் பயன்படும் கருவிகள்
களத்தில் பயன்படும் கருவிகள்
அளக்கப் பயன்படும் கருவிகள்
போக்குவரத்திற்குப் பயன்படும் கருவிகள்
பாதுகாப்பிற்குப் பயன்படும் கருவிகள்

## கருவிகளின் களங்கள்

### ஒவ்வொரு களத்திலும் பயன்படும் கருவிகள்

**பயிர் செய்வதற்கு முன்பு**

1. சுத்தம் செய்தல் தொடர்பான கருவிகள்
   1. மண்வெட்டி
   2. காடவெட்டி
   3. அலக்கருவா
   4. அருவா
   5. தட்டுக்கூட
   6. பஞ்சாரம்

**பயிர் செய்யும் போது**

2. நிலத்தை தயார்படுத்துதல் தொடர்பான கருவிகள்
   1. மண்வெட்டி
   2. பார
   3. முள்ளு
   4. கொந்தாளம்
   5. அலவாங்கு

3. உழுதல் தொடர்பான கருவிகள்
   1. கேஜ்வீல்
   2. சட்டிக் கலப்பை
   3. ஒன்பது கலப்பை
   4. கைடிராக்டர்
   5. மரக்கலப்பை
   6. ஒன்சைடு கலப்பை
   7. போஸ்டுகலப்பை

3. உழுத நிலத்தை சமன்படுத்தப் பயன்படும் கருவிகள்
   1. கொடங்குப் பலகை
   2. சட்டிக் கலப்பை
   3. பரப்புப் பலகை
   4. மோது
   5. பல்லுனிக் கலப்பை/முள்ளுக்கலப்பை

4. நீர் இறைக்கப் பயன்படும் கருவிகள்

1. ஏற்றம்
2. எறப்பொட்டி
3. வெற்றிலைத் தட்டு
4. ஓடு
5. டின்
6. கமலஏத்தம்
7. மோட்டார்
8. ஸ்பிரிங்கிலர்
9. பானை
10. டியூப்
11. வாய்க்கால்
12. பைப்

5. விதை தயார் செய்யப் பயன்படும் கருவிகள்

1. பாக்குட்டி
2. அலவாங்கு
3. கத்தரி
4. சாக்கு

6. விதை விதைக்கப் பயன்படும் கருவிகள்

1. கூடை
2. வெதப்பொட்டி
3. மிசின்
4. கை

7. பயிர் விளையும் போது அறுவடைக்கு முன்பு பயன்படும் கருவிகள்

1. கூடை
2. இரும்புசட்டி/சீனாச்சட்டி
3. பிரெயர்
4. பாத்திரம்
5. எலிக்கிட்டி
6. வேலி
7. கலமிசின்
8. கலக்கொட்டு
9. மண்வெட்டி

8. அறுவடை செய்யும் போது பயன்படும் கருவிகள்

1. மண்வெட்டி
2. கத்தரி
3. அறப்பருவாள்
4. பாரை
5. அரிவாள்
6. வாழவெட்டி அருவா
7. இரும்பு நகம்
8. மிசின்
9. அலக்கு
10. கம்பரகத்தி
11. பிரி
12. கயிறு
13. ஆக்க
14. மோது
15. சும்மாடு
16. சுருனை
17. முன்டாசு

அறுவடை செய்த பின் பயன்படும் கருவிகள்

1. கதிரடிக்கும் களத்தில் பயன்படும் கருவிகள்

1. கோட்டுக்கயிறு
2. உரல்
3. கல்
4. கதிரெடிக்கிறமிசின்
5. பொலி இழுக்கிறது
6. விளக்கமாறு
7. தடிக்கழி
8. சக்கப் பிரட்டி
9. கலவை
10. முறம்

2. அளக்கப் பயன்படுவன

1. டிராக்டர்
2. வண்டி
3. தட்டுக் கூடை
4. மரக்கால்
5. வாலி
6. பரை
7. கல்ல மரக்கால்
8. திராசு
9. வில் தராசு
10. தட்டுத்தராசு

3. போக்குவரத்துக்குப் பயன்படும் கருவிகள்

1. மாட்டுவண்டி
2. டயர் வண்டி
3. டிராக்டர்

4. சேமிக்கப் பயன்படும் கருவிகள்

1. பொய்குழி
2. சோலக்குழி
3. குலுக்கு/குலும
4. இருவாசல்
5. பாங்காலம்/காங்கு
6. பானை
7. கலஞ்சியம்
8. குதிரு
9. பத்தாயம்
10. தொம்பை
11. பல்லப்பெட்டி
12. சாக்கு
13. கோட்டை
14. மச்சி
15. பரனி

மேலே கண்ட 107 விவசாயக் கருவிகளுள் 80% கருவிகளை தற்போது பழக்கப்படுத்துவதை மக்கள் தவிர்த்து வருகின்றனர். இக்கருவிகள் பலவடிவங்கள் மற்றும் அதன் பெயர்கள் கூட மற்ற இடங்களில் உள்ளவர்களுக்குத் தெரிவதில்லை. இவ்வாறு இருக்க, இந்தக் கலைச்சொற்கள் எல்லாம் பொது அகராதியில் எப்போது இணைத்துப் பாதுகாப்பது.

## இதை யார் பாதுகாப்பது/எப்படிப் பாதுகாப்பது?

மேற்கண்ட சொற்களையும் கருவிகளையும் யார் பாதுகாப்பார்கள்? அதை ஒரு மொழியியலாளன், சமுதாய மொழிப் பற்று கொண்டவன் செய்ய வேண்டும். இதை இதுவரை நாம் எவ்வளவு செய்திருக்கிறோம் என்று நம்மை நாம் கேட்டுக் கொண்டால் அதற்கு விடை தெரியும். இன்றும் காலம் மாற மாற அவை எப்படி இருக்கும் என்று நமக்கு சந்தேகம் வரும். தொழில் கருவிகளுக்கென்றும், வட்டார வழக்குக் கென்றும் ஒட்டுமொத்த தமிழகத்திற்கும்/இதுவரையும் எந்த அகராதியும் வந்ததாகத் தெரியவில்லை. எங்கோ சில ஆய்வேடுகளும் சில ஆராய்ச்சி நிலையங்களில் திட்ட அறிக்கையாகச் சில நூல்களில் இருக்கலாம். ஒட்டுமொத்தத்தையும் நாம்

பதிப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எத்தனையோ மேலை நாட்டு அகராதிகளை மொழி பெயர்க்கவும், வாங்கவும் செய்கின்ற அரசாங்கம் நம்மிடம் உள்ள சொல்வளத்தைப் பதிவு செய்ய, பாதுகாக்க எந்தத் திட்டமும் வகுக்கவில்லை. தற்போது வந்துள்ள செம்மொழி திட்டத்திலாவது இதை இடம் பெற வழி வகுக்க வேண்டும். பலபேர் தனிமனித தேவையையும், தனிமனித வளர்ச்சியையும் தனிமனித பாதுகாப்பையும் மேம்படுத்துவதில் குறியாக இருக்கின்றார்களே ஒழிய இந்தச் சமுதாயத்தை, சமுதாயத்தில் நடக்கின்ற நிகழ்வுகளை பதிவு செய்ய, பாதுகாக்க எந்த ஒரு கல்விகற்றவர்களும் முன்வருவதாகத் தெரியவில்லை. தனி மனித வாழ்க்கை வளர்ந்த அளவிற்கு சமுதாய, கலாச்சார மொழி பாதுகாப்பு வளரவில்லை. அப்படி வருபவர்களை இச்சமுதாயக் கட்டமைப்பு உருவாக்கவில்லை என்றே கூறலாம்.

## அறிமுகமான கருவி

விவசாயத்தில் எத்தனையோ கருவிகள் புதியதாக வந்துள்ளன. அதில் குறிப்பிட்ட மாற்றங்களை செய்தது அறுவடை மிஷின் தான். இக்கருவியில் இரண்டு வகை உள்ளது.

1. வயலில் நேரடியாகத் தாள் அறுக்கும் மிஷின்
2. நாம் அறுத்ததை நெல் நீங்குவதற்காக மட்டும் பயன்படும் மிஷின்.

வயலில் நேரடியாக அறுக்கும் மிஷின் அறுவடை செய்து தூய நெல்லை மட்டும் கொடுக்கிறது. விவசாயி நேரடியாகப் பயனடைகிறான். முன்பெல்லாம் அறுவடைக்கு ஆள் சேர்க்க வேண்டும். அறுத்து மழையில் பாதிக்காமல், அதை இரவில் பாதுகாத்து அதே ஆட்களைக் கொண்டு கட்டுக்கட்டி, களம் ஒரு இரண்டு மைல் தூரத்தில் இருக்கும். அங்கே கொண்டு போட்டு சுத்தம் செய்து ஆட்களுக்கு கூலி பாதிநெல். களத்தில் அடிக்கும் போது கீழே சிந்தியது பாதி நெல். களத்தில் அடிக்கும் போது, தெறித்து சிந்தியது பாதி நெல், திரும்பவும் அதனைப் போர் போட்டு ஒரு மாதம் சென்று அதை பொனையல் அடித்து மீண்டும் அந்த நெல்லை வீட்டிற்கு கொண்டுவர வேண்டும். இவை எல்லாம் போக வீட்டிற்கு கொண்டு சேர்ப்பது மிஞ்சியதுதான். ஆனால் தற்போது இந்த சிரமம் எல்லாம் இல்லை.

விதைத்த பலனை எந்தச் சேதமும் இல்லாமல் நட்ட வயலிலே அனுபவிப்பது தற்போதுதான். இக்கருவி வந்ததால் நிலம் வைத்திருப்பவருக்கு மகிழ்ச்சி. நிலமற்று உழைப்பவனுக்கு ஏமாற்றம். நிலமற்ற ஏழை ஒருவன் ஒரு மாதம் அறுத்து நெல்லை கூலியாகப் பெற்றால் அந்த கூலி நெல் 6 மாதத்திற்காவது உணவுக்குப் பயன்படும். தற்போது அந்த முறையும் இல்லை.

இக்கருவி அறிமுகப்படுத்தியபோது தஞ்சை/திருவாரூர் மாவட்டத்தில் ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்கள் அக்கருவியைத் தடுத்துப் போராட்டம் செய்தார்கள். பலன் இல்லை. அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டது பொருளாதாரத்தின் அடிப்படையில் ஆனால் நமக்கு ஏற்பட்டது மொழி அமைப்பில்.







அறுவடை மிஷின்

## புதிய கருவியால் தொலைந்த களங்கள்

இக்கருவி ஒன்று வந்ததால் பல களங்கள் அழிந்தன. அதில் குழுவாகப் பேசிய பேச்சு கலைக்கப்பட்டது. குழுவாக கூடிய இடம் இடிக்கப்பட்டது.

அதில்:

இருந்த களங்கள் மொத்தம் மூன்று.

1. – அறுவடை நடக்கும் வயல்
2. – கட்டுக் கட்டிய வயலுக்கும் களத்துக்கும் உள்ள தூரம்
3. – கதிரடிக்கும் களம்

| வயல் | | களம் |
|---|---|---|
| – | இடைப்பட்டதூரம் | – |

இந்தக் கதிரடிக்கும் மிஷின் வந்ததால்/இந்த மூன்று முக்கிய களங்கள் அழிந்தன. அதில் வேலையைப் பார்த்தவர்கள் ஓய்வு பெற்றார்கள். இதில் பேசிய பேச்சுகள் ஓய்வு பெற்றன. இதில் பயன்படுத்திய கருவிகள்

கரையான் கண்களுக்குப்பட்டன. இதில் செய்த வேலை மறைந்தது. இந்த இழப்பில் பாதிப்படைந்தது விவசாயிகள் மட்டுமல்ல—பாதிக்கப்பட்டவை,

1. நிலமற்ற கூலித் தொழிலாளி
2. நிலமற்ற கூலித் தொழிலாளிக்கும்/முதலாளிக்கும் நடந்த உரையாடல்
3. ஆண் தொழிலாளிக்கும்/பெண் தொழிலாளிக்கும் நிகழ்ந்த உரையாடல்.
4. தொழிலாளிக்கும் மற்ற தொழிலாளிக்கும் நடந்த உரையாடல்.
5. அத்தொழிலாளிக்கு தொழில் செய்யப் பயன்பட்ட கருவிகள்
6. மண் வாசனையின் கலைச்சொற்கள்

ஒரு கருவிக்கு இத்தனை களங்கள் அழிந்தன. மற்ற இடங்களில்!! விவசாயத் தொழிலை, குறிப்பாக நடவுத் தொழிலை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1. நடுவதற்கு முன்பு நிலத்தை தயார் செய்யும் பணி
2. நட்டபின் அறுவடைவரைக்கும் பாதுகாக்கும் பணி
3. அறுவடை செய்து நெல்லைச் சேகரித்து வீட்டிற்கு வரும் வரைக்கும் உள்ள பணி.

இந்த மூன்று களங்களில்தான் ஆயிரக் கணக்கான கலைச் சொற்கள் பழக்கத்தில் இருந்தன. இந்த மூன்று களங்களில்,

1. முதல் களத்தை முழுவதையும் ஆக்கிரமித்தது.



டிராக்டர் (உழுவை இயந்திரம்)

2. மூன்றாவது களத்தை முழுவதையும் ஆக்கிரமித்தது கதிரடிக்கின்ற மிஷின்.

முதலாவது களத்தை ஆக்கிரமித்த கருவிகளால் இழந்த கலைச் சொற்களின் தலைச்சொல்–150. இதே களத்தில் இருந்த கருவிகள் ஏறக்குறைய எண்ணிக்கை–30 ஆகும். இதே எண்ணிக்கையை வட்டார வழக்குக் கருவி, சொற்களோடு ஒப்பிட்டால் இன்னும் மிகும். இது மொழிக்கு ஒரு சாதாரண இழப்புக் கிடையாது. இந்த சொற்களும், கருவிகளும் மண் வாசனையின் இயற்கைச் சொற்கள். தமிழ் இனத்தின் அடையாளச் சொற்கள்.

## இழந்த சொற்களும், கருவிகளும்

அறுவடைசெய்து நெல்லைச் சேமித்தல் வரைக்கும் உள்ள சொற்கள் மற்றும் கருவிகள்.

### கலைச்சொற்கள்

| | |
|---|---|
| அட்டிக்கட்டத்தாள் | சாவி |
| அட்டிப் போடு | சூடுபுடி |
| அடிக்கட்டு | தலக்கூட்டு |
| அடிக்கட்டுத் தூக்குற ஆள் | தலப்போர் |
| அடிக்கோட்டு | தலமாடு |
| அடித்தாள் | தாள் |
| அடிப்பொலி | தூளடி |
| அடிப்பட்டர | தாளடிப்பட்டம் |
| அடிப்போர் | தூசி |
| அடிப்போடு | கூஷதர |
| அரி | நுனி போர் |
| அரிப்பட்டம் | நுனிக்கட்டு |
| அரிகாச்ச | நுனிபொலி |
| அளவை (அனைத்தும்) | நுனிகட்டுத்தூக்குற ஆள் |
| அறப்பு வாய் | நெல்லுபுடி |
| அறப்புப் போடு | நெட்டப்புளி |
| அறப்புவை | பட்ர |
| இடுக்குச் சந்து | பட்ரபோடு |
| ஈரன மாடு | பதறு |
| உள்ளனமாடு | பாட்ட |
| ஏறாங் கடைசி | புதுக்கதுரு |
| ஏறு கட்டு | பிரி உடு |
| ஒதறு | பிரி முறுக்கு |
| ஒடங்கட்டு | பொலி விடு |
| ஓரன மாடு | பொலி கட்டு |
| கற்கா | பொனைய உடு |

கலத்தடி நெல்
கலப்பு நெல்
கலப்புக் கதிர்
கலம்
களத்து வெளக்குமாறு
கால் மாடு
குத்துப்பொளி
குறி
குறிபொடு
கூட்டிப்போடு
கூலம்
கொம்பு சுத்தி அடி
கொம்புதாள்
கொடி மாடு
கோட்டு
சங்க
சனி மூலை
சாக்கு
சாணிப்பால்
பொனைய மாடு
பொனைய புடி
பொனையடி
பொருக்கு கதிரு
போர்
போர் ஆள்
போருக்கட்டு
போரடி
போரடிக்கிரகளம்
போரடிநெல்
மய்யுதல்
மூட்டம் பிரி
முகூர்த்த நெல்
முகூர்த்தம்
லாபம்
விசுறு
வெக்க
வெக்கப்புடி

கருவிகள்

ஆக்க
ரெட்டாக்க
ஒத்தாக்க
அறப்பருவா
சும்மாடு
சுருன
கட்டப் பிரி
கவட்ட
கோட்டுக் கயிறு
குறிவாலி
கூடை
கோணி
மரக்கா
மோது
மொறம்
ஒர
ஒத்தப்பிரி
பற
பிரி
பொனைய கயிறு
ரெட்டப்பிரி
தல கயிறு
துண்டு பிரி
ஒழவாரம்
வாளி
குச்சி

இது மட்டுமல்ல இன்னும் எத்தனை நேரடி, மறைமுக வார்த்தைகள் மற்றும் கருவிகள். இந்த ஒரு களத்தில் இத்தனை வார்த்தைகள் இழக்க நேரிட்டது என்றால், மீதம் உள்ள களங்களில், நினைத்தால் சற்று அல்ல

மிகுந்த வருத்தம் தான். விவசாயத்தில் ஒரு களத்தில் இத்தனை, மற்ற தொழில்களில் இழக்கும், இழந்த வார்த்தைகளை யார் பதிவு செய்வது. இது மட்டுமல்லாமல் இதற்கு இணையான வட்டார வழக்குச் சொற்களும், ஒரு வார்த்தைக்கு குறிப்பாக 5 வேறுபட்ட வடிவமாவது கிடைக்கும். அதையும் யார் பதிவு செய்வது?

## நிலத்தைத் தயார் செய்தலில் உள்ள கலைச்சொற்கள்

| | |
|---|---|
| பொன்னேரு | சேட |
| வெதப்பு | எடத்தரிசு |
| முகூர்த்தம் | கட்டி |
| ஒர்னமாடு | மரக்கலப்பை |
| ஈர்னமாடு | போஸ்டு கலப்பை |
| முன்னேரு | ரெட்டகலப்பை |
| பின்னேரு | ஏர்கா |
| விலாபோடு | மோழி |
| படச்சா | பூட்டாங்கயிறு |
| சால் | குறி |
| கங்கு | எடது நெவத்தடி |
| அண்ட | வலது நெவத்தடி |
| அண்ட வாய் | கொழு |
| கொத்து சோறு | கொழு ஆணி |
| ஒண்ணாஞ்சால் | கொழுகட்ட |
| ரெண்டாஞ்சால் | கொண்டி |
| உள்ளனமாடு | வட கயிறு |
| கொடி மாடு | சங்கிலி |
| பூட்டு | ஆப்பு |
| ஏர் ஒட்டு | பரம்புபலகை |
| சேரபுடிச்ச ஒட்டு | அடிவடம் |
| | எதுவடம் |

இது போன்ற எண்ணற்ற வார்த்தைகளை இந்த ஒரு கருவியான டிராக்டர் வந்து மக்கச் செய்துவிட்டது. தற்போது பல்வேறு இடங்களில் கலப்பையை யாரும் உபயோகிப்பது கூட இல்லை. கலப்பை 10 நாட்கள் செய்யும் பல்வேறு பணிகளை ஒரே ஆள் ஒரே மிஷின் இரண்டு நாட்களில் சிறப்பாகச் செய்து முடிக்கிறது. எனவே அந்த வார்த்தைகளையும், கருவிகளையும் வட்டார வழக்குச் சொற்களையும் நாம் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும்.

மேலே பார்த்தது நடவு நடும் தொழில் மட்டும் தான். இன்னும் விவசாயத்தில் பல களங்களில் எத்தனையோ சொற்கள் புதிய கருவிகளாலும், புதிய தொழில் முறைகளாலும் மாற்றம் பெற்றுக் கொண்டு இருக்கின்றன. அவை அனைத்து சொற்கள் மற்றும் கருவிகள் எல்லாம் பதிவு செய்து அகராதியாக அமைத்தல் மொழி பாதுகாப்பு செய்வோரின் பணியாக அமையும். மொழிக்கு இலக்கண ஆராய்ச்சி, நாட்டுப்புற இலக்கிய ஆராய்ச்சி, இலக்கிய ஒப்பீடு ஆராய்ச்சி என்பது மிகுதியாக நடைபெற்று வருகிறது. நாம் நமது சொற்களை இன்னும் முழுமையாகப் பதிவு செய்யும் ஆராய்ச்சி முழுமை பெறவில்லை என்றே கூறலாம். அந்த ஆய்வுகளை நாம் மொழியியல், மொழித்துறை வல்லுனர்கள் கண்டிப்பாகச் செய்தாக வேண்டும். நாட்டுப்புறத் தொழில் மற்றும் பேச்சு வழக்குச் சொற்களை பதிவு செய்து சொற்தொகுதியாக வெளிவந்துள்ள ஆராய்ச்சி நூல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. முழுமை பெறாமலே இருக்கிறது. அதனை நாம் கண்டு இனி மேம்படுத்த வேண்டும்.

தற்போது தமிழ் நாட்டில் விளைநிலங்கள் அனைத்தும், வீடுகளாகவும், தொழிற்சாலைகளாகவும், நகரங்களாகவும் மாறி வருகின்றன. மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், பொருளாதார வளர்ச்சியினாலும் கண்டிப்பாக ஒரு காலக் கட்டத்தில் விவசாயத்தொழில்களில் நாமே நம் தேவையை உற்பத்தி செய்வதை விடுத்து அனைத்தும் விலை கொடுத்து வாங்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவோம். அப்போது பல தொழில்களையும், கருவிகளையும் காதால் கேள்விதான் பட முடியுமே ஒழிய – கண்காட்சி கூடங்களில் காணத்தான் முடியுமே தவிர, அதை நம்மால் பயன்படுத்த முடியாது. இதுவரையிலும் நாட்டுப்புறப்பேச்சு வழக்கு சொற்கள் இலக்கிய சொற்கள், தொழிற்கலைச்சொற்கள் அனைத்தும் எத்தனை சொற்கள் இதுவரை நம் மொழியில் உள்ளன என்று யாராலும் உறுதியாக, சரியாக கூற முடியவில்லை. அதற்கு நாம் இதுவரை முழுமையாகப் பதிவு செய்யாததே காரணம். எனவே தொழில் நுட்ப வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பதிவு செய்தல் நம் தலையாய கடமையாகும்.

# 9. தரகுத் தொழிலும் - மதிப்பீட்டு எண்களும்

தரகர் என்பவர் இரு தரப்பினருக்கும் (ஒரு பொருளை விற்பவர்க்கும், அப்பொருளை வாங்குபவருக்கும்) இணைப்பாக இருந்து பொருளின் விற்பனையை, ஒப்பந்தத்தை முடித்துத் தருபவர். அச்சேவை தொழிலுக்காக இருவரிடமிருந்து கழிவினைப்பெறுபவர் (Middle man/broker, negotiator).

தரகு என்ற இத்தொழில் பழங்காலத்தொட்டு இருந்து வந்திருக்கிறது. ஒரு புதிய ஊரில் உள்ள பொருளை ஒருவர் வாங்க வேண்டும் என்றால் ஒருவரின் அறிமுகத்தோடு அந்தப் பொருளைப் பெற வேண்டும், பெற முடியும். அவ்வாறு மற்றவர் துணையுடன் செல்லும்போது மற்றவர் இருவருக்கும் பொது நிலையில் நின்று அந்தப் பொருளை மற்றவருக்கு கைமாறச் செய்திருப்பார். இந்த வழக்கம் கிராமங்களில் இன்னும் நடந்து கொண்டு இருக்கின்றது. அவ்வாறு கைமாற உதவியவர் கழிவினைப் பெறாமல், பிறகு கழிவினைப் பெற்று இன்று தரகர் என்ற ஒரு தனித் தொழில் பிரிவிற்கு உரியதாக மாறிவிட்டது.

**தரகர்**

இத்தரகர் என்பவர் மற்றவருக்குப் பயன்படக்கூடிய பொருள், மதிப்புடைய, விற்பனையாகும் பொருள்களைப் பற்றிச் சில பொது விஷயங்களை அறிந்திருப்பவர். மிகுந்த உலக அனுபவம் பெற்றவர். ஒரு பொருளைப் பற்றி, ஒரு செய்தியைப் பற்றி வாதம் செய்வதில் வல்லவர். எந்தப் பொருளை விற்பதில் அவர்கள் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றார்களோ அப்பொருளின் நிறைகுறைகளை அறிந்தவர். அப்பொருளைப்பற்றி மத, ஜாதி, நம்பிக்கை பொது ஜோதிட ஞானம் போன்றவைகளைப் பற்றி மிகுதியாக அறிந்தவர். தான் வாழும் சமுதாயத்தில் சற்று நன் மதிப்பைப் பெற்றவர்.

ஊர் கடந்து, மாவட்டம் கடந்து பொருள்களை வாங்க, விற்கச் செல்வதால் அவ்விடங்களில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அப்பொருளை/ பணத்தைப் பாதுகாக்கவும், தற்காப்புக் கலைகளை கற்றவர். சமுதாயத்தில் சொத்து மதிப்புள்ள பொருள்களைப் பற்றி குறிப்பிட்ட விஷய ஞானம் பெற்று, அதன் நிறை குறைகளை அறிந்தவர். ஒவ்வொரு மதத்திற்கும், சிறு தெய்வங்களுக்கும் உள்ள நம்பிக்கை, நிறத்தின் அடிப்படையில், அதன் நன்மை தீமைகளை அறிந்தவர்.

உதாரணமாக

மரத்தைப் பற்றி
ஆடு,மாட்டின் சுழியைப் பற்றி
அதன் நிறங்களைப் பற்றி
அதன் நடைகளைப் பற்றி
இடத்தின் அமைப்பு, அதன் எதிர்
பின்புறம் உள்ள நீர்நிலை
தெய்வத் தொடர்பான செய்திகளைப் பற்றி

எனப் பொருளுக்கும் மக்களின் நம்பிக்கைகளுக்கும் உள்ளத் தொடர்பை நிறைய அறிந்தவர்.

## தரகரின் வகைகள்

தரகர் என்று கூறினால் அவர் ஆடு, மாடு விற்பதற்குத் துணை செய்பவர், கல்யாணத்திற்கு வரன்களைப் பொருத்துபவர் என்ற பொருள்களில் தான் பெரும்பாலும் குறிப்பிடுகின்றார்கள். முற்காலத்தில் பெரும்பாலும் இந்த இருவகையில் இருந்தவர்கள் தற்போது எல்லாத் துறைகளிலும் பரந்து இருக்கிறார்கள். திருமணப் பொருத்தம் பார்ப்பவர், ஆடு மாடுகளான பொது பொருளை விற்பதற்கு உதவி செய்பவர் என இரண்டு பிரிவில் பார்க்கலாம்.

## தரகர் தொழில் செய்பவர் ஆண்களா/பெண்களா?

இத்தொழிலைச் செய்பவர் பெரும்பாலும் ஆண்களாகத்தான் இருக்கின்றார்கள். தற்போதுதான் திருமண விஷயங்களுக்கு பெண்களும் வரத்தொடங்கியுள்ளனர். பழங்காலத்தில் ஒரு பொருளை வாங்குவதற்கு ஊரு விட்டு ஊரு சென்று இரண்டு மூன்று நாட்கள் தங்கி இருந்து, பின்பு பொருள்களைப் பெற்று வருவார்கள். அது மட்டுமல்ல பழங்காலத்தில் தரகர் தொழில் பெரும்பாலும் ஆடு மாடு வாங்கி விற்பனை, செய்யும் தொழிலாகத்தான் இருந்திருக்கிறது. அதை வாங்கி ஓட்டிவருவதற்கும், அதை ஊரு விட்டு ஊரு கொண்டு செல்வதற்கும் பெண்களால் தொழில் செய்ய இயலாது, எனவே பெரும்பாலும் இத்தொழிலில் ஆண்களே இருக்கின்றார்கள். மேலும், விற்பனை செய்யப்பட்ட பொருள்களில் ஏதேனும் தொந்தரவு, இழப்பு, நஷ்டம் ஏற்பட்டு பிரச்சனை வரும் போதும் அதை சமாளிப்பதற்கு தேவையான தற்காப்பு பயிற்சி காரணமாகவும் இத்தொழிலில் ஆண்களே சிறந்து விளங்குகின்றனர்.

ஒவ்வொரு ஜாதி, மதம், ஏழை, பணக்காரன் போன்றவர்களின் நம்பிக்கைக்குத் தக்கவாறு வாதத்திறமை வேண்டும். இத்தொழிலை

பார்ப்பதற்கு குறிப்பிட்ட நேரம், காலம் கிடையாது. எந்த நேரமும் தயாராக இருக்க வேண்டும். எனவே இத்தொழிலில் ஆண், பெண் என்று தனித்தனியாக இல்லாமல் இச்சொல் பொது சொல்லாக அமைந்துள்ளது.

## தரகர் தொழில் பரம்பரையா?

தரகர் தொழில் செய்யப் பரம்பரையாக வருபவரும் உண்டு. ஒருவரிடமிருந்து பயிற்சி பெற்று வருபவரும் உண்டு. பெரும்பாலும் இவர்கள் சிறிது படித்தவர்களாகவும், அவர்கள் குடும்பம் வறுமையில் இருந்தாலும், அவர்கள் அணியும் ஆடை தூய்மையும், மிடுக்கும் உடையவர்களாக இருக்கின்றார்கள். கல்வியறிவு இல்லையென்றாலும் அவர்கள் பேசும் சொல்லாற்றல், விஷயஞானம், வாதத்திறமைகளைக் கொண்டு அவர்கள் படித்தவர்கள் போல் காட்டிக் கொள்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றார்கள். மனதைரியம் மிக்கவர்களாகவும், உலக நடப்பு, புராணங்கள் போன்றவற்றில் போதுமான அறிவு பெற்றவர்களாகவும், இருக்கின்றார்கள். எந்தப் பொருளை விற்பது/ வாங்குவதாக இருந்தாலும் அந்தப் பொருளைப் பற்றி சிறந்த விளக்கம் கொடுப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாமலும், ஊரில் அனைவரிடமும் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். ஒரு பொருளை விற்பது என்ற முடிவு எடுத்து விட்டால் சில பொய்களைக் கூறவும் தயங்குவதில்லை.

## தரகரும்/தரகரும்

ஒரு பொருளை விற்க/ வாங்க வேண்டும் என்று நினைக்கும் இருவரும் நேரடியாக விற்பனை மதிப்பீட்டை/பேச்சு வார்த்தையைத் தொடங்கி விட முடியாது. பேசும் போது இருவருக்கும் மாற்றுப் பாலமாக இருவரின் கருத்தை வியாபார உத்தியோடு இருவருக்கும் விளக்கவும், அதோடு தன்னுடைய அனுபவத்தால் அப்பொருளுக்கு அன்றைய காலக் கட்டங்களில் நிலவும் பொருள் மதிப்பீட்டை விலையாக நிர்ணயிக்கவும், இருப்பவர். இரு பயனாளிகளுக்கும் இடையில் ஒரு தரகரும் இருக்கலாம், இரு தரகரும் இருக்கலாம்.

ஒரு பொருளை விற்பதற்கு இரு தரகர் இருந்தால் இரு தரகரின் வியாபார மொழி அதிகமாக இருக்கும். நன்மை, தீமைகளை அவர்களே கலந்து ஆலோசித்து தெரிவிப்பர். அதே சமயத்தில் ஒரு தரகர் மட்டுமே இருந்தால் இரு பயனாளிகளுக்கும் இடையில் அப்பொருளை மற்றவருக்கு கைமாற மிகுதியாகக் கவனத்துடன் செயல்படுவார். அவரின் வியாபார மொழி குறைவாகவும், மிகுந்த விழிப்புணர்ச்சியுடனும் இருக்கும். தரகர் ஒருவராக இருந்தாலும், இருவராக இருந்தாலும் அவர்களுடைய நோக்கம்

அப்பொருள் கைமாற வேண்டும். கைமாறினால்தான் அவர்களுக்கு வருமானம். இதில் பெரும்பாலும் வெற்றிகண்டு விடுவார்கள். ஒருகால் அதில் பொருளை விற்றவர்/பெற்றவருக்கு இழப்போ ஏமாற்றமோ ஏற்பட்டால் அவர்களுக்கு ஆறுதல் கூறி தேற்றுவதில் இருவரும் கை தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

## மொழிப் பயன்பாடு

தரகர் விற்பனையாளர்களிடம் பேசும் பேச்சு மொழிக்கும், அவர் மற்றொரு தரகரிடம், பேசும் பேச்சு மொழிக்கும் வேறுபாடு உள்ளது. இதனைக் குழுக்குறி அல்லது கலைச்சொற்களாகக் கொள்ளலாம். இந்த குழுக்குறிச் சொல் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து தரகரும் பயன்படுத்துகின்றார்களா என்றால் இல்லை என்றே குறிப்பிடலாம். பெரும்பாலான தரகு நிகழ்வுகளில் பொது மொழியே பேசப்படுகிறது. ஆனால் சில பகுதிகளில் குறிப்பிட்ட பொது மொழியிலிருந்து மாற்றம் பெற்ற சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

பொருளை விற்பவர் கூறும் பொதுமொழி மதிப்பீட்டை பெற்று அதை மற்ற தரகருக்குக் குழுகுறிச் சொல்லாக மாற்றித் தெரிவிக்கிறார். அந்தத் தரகர் அந்த குழுக்குறி சொற்களைப் பொது மொழியாக மாற்றி பொருளை பெறுபவற்குத் தெரிவிக்கிறார்.

இதனை




எனவே தரகர்கள் குறிப்பிட்ட இடத்தில் ஒரு மொழி பெயர்ப்பாளராகவே திகழ்கிறார்கள்.

ஒரு பொருளை விலை நிர்ணயம் செய்யும்போது மற்றவர்களுக்குத் தெரியாத வண்ணம் அவர்கள் மொழியாளுமையுள்ளது. அவ்வாறு மறைமுக எண்களால் விலை நிர்ணயம் செய்யும் போது அப்பொருளின் தர மதிப்பீடு குறையாமல் இருக்க நேரிடுகிறது. ஒரு பொருளின் விலையை நேரடியாகத்

தெரிவித்தால் அப்பொருளின் மதிப்பீட்டு அடிப்படையிலேயே மற்றவர்களும் மதிப்பீடு செய்வார்கள். அதைத் தவிர்க்க இந்த குழுகுறி பயன்படுகிறது.

## கிராமப் பொருள் விற்பனையில்

1. ஒரு பொருளை விலை நிர்ணயம் செய்து அவ்விலைக்கு கேட்பவருக்கு கொடுப்பது.
2. விலை நிர்ணயம் செய்யாமல் எவ்வளவு மதிப்பீட்டில் பொருள் வாங்க வருகிறாரோ அதே அடிப்படையில் பொருளை நிர்ணயம் செய்து விற்பது.

இந்த விற்பனை இரண்டாம் நிலையில் மிகுதியாகப் பேசப்படுகிறது. வியாபாரத்திற்கென்று மொழிப் பயன்பாடு தனியாக இருக்கலாம். ஆனால் அதற்கென்று மொழி வார்த்தைகளே தனியாக இருப்பதை என்னை வியப்பில் ஆழ்த்தியது. கீழே கொடுக்கப்படும் தகவல். தூத்துக்குடி மாவட்டம், ஜமீன் கோடாங்கிப்பட்டியில், விளாத்தி குளம், பகுதியில் களப்பணியாக சென்றிருந்தேன். அங்கு ஒரு தரகரை சந்திக்க நேரிட்டது. அவர்கள் அளித்த தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### மாடு விற்பனை செய்யும் முறை

தன்னுடைய மாட்டை விற்பனை செய்ய வேண்டும் என நினைப்பவர்கள் வாரத்தில் ஒரு நாள் நடக்கும் சந்தைக்கு கொண்டு வந்து விடுகின்றனர். மாட்டை சந்தையில் வாங்க நினைப்பவர் தன் ஊர்ப்பகுதியில் அல்லது தனக்கு நம்பிக்கைக்கு உரிய தரகரை அழைத்துச் செல்கிறார்.

சந்தையில் மாட்டை விற்பதற்காக ஓட்டிவந்த மாட்டின் உரிமையாளரும், ஒரு தரகரை அழைத்து வந்து விடுவார். மாடு வாங்க நினைப்பவர். தன்தேவை, மாட்டின் நிறம், எந்த இனத்தின் மாடு, அதன் விலை, ஆரம்ப விலையின் மதிப்பீடு, முடிவு விலையின் மதிப்பீடு போன்ற அனைத்துத் தகவல்களையும் தெரிவிக்கிறார். இந்த தகவலை மாட்டை விற்பவரும், தான் அழைத்து வந்த தரகரிடம் தெரிவிக்கிறார். இருவர் கண்ணெதிரே இருதரகர்களும் இரண்டு வலது கை விரல்களையும் சேர்த்து துணியால் மூடி, விலையை நிர்ணயம் செய்வார்கள். அல்லது அதன் விலை மதிப்பீட்டை மற்றவர்கள் அறியாத வண்ணம் அவர்களின் குறியீட்டு சொற்களால் கூறி அதன் இறுதி விலையை நிர்ணயம் செய்கின்றனர். பொதுவாக அந்த குறியீட்டுச் சொல் பேச்சு மொழியாக அமையாமல் எண்களில் மட்டும் மாற்றம் பெற்றுள்ளது.

## அடிப்படை எண்கள்

மேலே இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள தரகு முறை கீழே விளக்கப்படுகிறது. (விலையை எழுத்தாலும் எண்ணாலும் குறிப்பிடலாம்)

ஒன்று இவ்வாறு இரண்டு வகையாலும் எழுதலாம். பொது மொழியில் 0 முதல் 9 வரை அடிப்படை எண்களாக உள்ளன. இதிலிருந்துதான் நாம் விலை நிர்ணயம் செய்கிறோம். விலை நிர்ணயம் செய்யும் போதும் எழுத்தால் எழுதும் போது.

எண்களை – 1000, (ஆயிரம்) பேச்சாலும்

அதே எண்களை ஒலியாலும் 'ஆயிரம்' என்றும் வெளிப்படுத்துகிறோம்.

தரகர்களின் இந்த பேச்சு மொழியில் பொது மொழியில் உள்ள வார்த்தையை உபயோகிக்காமல் குறியீட்டு சொற்களைப் பயன் படுத்துகின்றார்கள். நாம் பொது மொழியில் ஒவ்வொரு எண்ணிற்கும் ஒவ்வொரு சொல்லை குறிப்பிடுகின்றோம்.

உதாரணம்

### பொது மொழியில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எண் : | 10 | 100 | 1000 | 10,000 | 1,00,000 |

### எழுத்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பேச்சில் : | பத்து | நூறு | ஆயிரம் | பத்தாயிரம் | லட்சம் |

### தரகர் மொழியியல்

மேற்கண்டதை ஒரே வார்த்தையில் பேச்சில் – வாட்சி என்று கூறுகின்றனர். அவர்கள் ஒவ்வொரு இனவர்க்கத்திற்கும் ஒரே பொதுச் சொல்லை வைத்து அழைக்கின்றனர்.

'வாட்சி' என்பது 1,10 இனவர்க்கத்திற்கும்
'சவுடு' என்பது 2,20 இனவர்க்கத்திற்கும்
'காய்' என்பது 3,30 இனவர்க்கத்திற்கும்
பனியன்/ பாத்து என்பது 4,40 இனவர்க்கத்திற்கும்
'தட்ட' என்பது 5,50 இனவர்க்கத்திற்கும்
'பொருத்து' என்பது 6,60 இனவர்க்கத்திற்கும்
'பிச்சி' என்பது 7, 70 இனவர்க்கத்திற்கும்
'வலுவு' என்பது 8,80 இனவர்க்கத்திற்கும்
'தாயம்' என்பது 9,90 இனவர்க்கத்திற்கும்

குறிப்பிடுகின்றனர்.

## பொருளின் விலை மதிப்பீடு

உதாரணமாக 'சவுடு' என்றால் ரூ. 2, 20, 200, 2000, 20,000, 200000 அனைத்திற்கும் ஒரே சொல் தான் உள்ளது. இதை வைத்து எவ்வாறு பொருளை மதிப்பிடுவார்கள் என்று பார்த்தால், ஒரு பொருளைப் பார்த்தால் அதன் பொது மதிப்பீட்டில் வைத்து அதற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கோழி வாங்க வேண்டுமானால் ஒரு கோழியின் பொது மதிப்பீடு, 100 ரூபாய்க்கு உள்ளே தான் அமைய வேண்டும். அதை 200 ரூபாய்க்கு மதிப்பிட முடியாது. எனவே ஒரு கோழி கேட்கப்படும் போது வாட்சி என்றே ஆரம்பிக்கப்படுகின்றார்கள். ஒரு வேளை 90 ரூபாய்க்கு கேட்க வேண்டுமானால் தாயம் என்று மதிப்பிடப்படுகிறது. ஒரு கோழியைப் பார்த்து தாயம் என்றால் விலை 9 ரூபாயோ, 900 ரூபாயோ இல்லை. பொது மதிப்பீடாக 90 ரூபாயாக இருக்கலாம். ஒரு வேளை அதனை 95 ரூபாய்க்கு கேட்டால் தாயம் தட்ட என்று கேட்கப்படுகிறது. தாயம் தட்ட என்றால் 95 ரூபாய் என்று விளக்கப்படுகிறது. இதே விலையை ஒரு பசுமாட்டைப் பார்த்து தாயம் தட்ட என்றால் அது 9500 ரூபாயாக மதிப்பிடப்படுகிறது. எனவே ஒரு பொருளின் பொது மதிப்பீட்டை வைத்து அவ்விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

தற்காலத்தில் எந்தப் பொருள் உற்பத்தி செய்தாலும், அப்பொருளை விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்கின்றனர். ஆனால் நாட்டுப்புறத்தில், ஒரு பொருளின் அன்றையத் தேவை அப்போது உற்பத்தியாகும் அளவு சில நேரங்களில் கேட்பவரின் விலை மதிப்பீடு போன்றவற்றை வைத்தே விலை நிர்ணயம் செய்கிறார்கள். சாதாரணமாக நாட்டுப்புறத் தரகர் விலை மதிப்பீடு, அந்த பொருளின் வளர்ச்சி, அப்பொருள் அப்போது சமுதாயத்திற்கு அளிக்கப்படும் பலன் போன்றவற்றை வைத்தே நிர்ணயம் செய்யப்படுகிறது. நாட்டுப்புற இக் குழுக்குறிச்சொல் அனைத்தும் தமிழக வட்டாரத்திலும் ஒப்பிட்டு இதைப் பற்றியே முழுமையான ஆய்வு மேற்கொண்டால். சிறந்த புதிய கலைச்சொற்களை நம்மால் வெளிக்கொணர முடியும். தற்போது ஆடு, மாடுகளும் குறைந்து, பயன்பாடு அற்று வருவதால் அதன் கலைச்சொற்களும் மறைகின்றன.

## மதிப்பீட்டு எண்கள், குறியீட்டு சொற்களின் விளக்கம்

| பொது மொழி | | தரகர் மொழி |
|---|---|---|
| 1. ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம் | – | வாட்சி |
| 1, 10, 100, 1000, 10,000 | | |

2. இரண்டு, இருபது, இறுநூறு, இரண்டாயிரம், இருபதாயிரம் – சவுடு
2, 20, 200, 2000, 20,000

3. மூன்று, முப்பது, முன்னூறு, மூவாயிரம், முப்பதாயிரம் – காய்
3, 30, 300, 3000, 30,000

4. நான்கு, நாற்பது, நானூறு, நாலாயிரம், நாற்பதாயிரம் – பனியன்/ பாத்து
4, 40, 400, 4000, 40,000

5. ஐந்து, ஐம்பது, ஐநூறு, ஐயாயிரம், ஐம்பதாயிரம் – தட்ட
5, 50, 500, 5000, 50,000

6. ஆறு, அறுபது, அறநூறு, ஆராயிரம், அறுவதாயிரம் – பொருத்து
6, 60, 600, 6000, 60,000

7. ஏழு எழுபது, எழுநூறு, ஏழாயிரம், எழுபதாயிரம் – பிச்சி
7, 70, 700, 7000, 70,000

8. எட்டு, என்பது, எண்ணூறு, எட்டாயிரம், என்பதாயிரம் – வலு
8, 80, 800, 8000, 80,000

9. ஒம்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம், ஒன்பதாயிரம், தொண்ணூறாயிரம் – தாயம்
9, 90, 900, 9000, 90,000

இது போன்று குறியீட்டுச் குழுக்குறிச் சொற்கள் தரகர் தொழிலில் மட்டுமல்ல அனைத்து தொழில்களிலும் இருக்க வாய்ப்புள்ளது. உதாரணமாக: பொருள் விற்பவர்கள், அதன் அதிக லாபமிகுந்த விலையை பொதுமொழி எண்களாலும், குறிப்பிட்டு இருப்பதை அனைத்து பொருள்களில் ஒட்டப்பட்டிருக்கும் விலை சீட்டில் பார்க்கலாம். உதாரணமாக ஜவுளி கடையில் இது போன்று குறியீட்டுச் குழுக்குறி சொற்களும் எண்களும் மிகுதியாக இருக்கி ன்றன.

உதாரணமாக ஒன்று

ஜவுளிக் கடையில் விற்பனை செய்பவர் (விற்பனையாளர்) பொருள் வாங்க வரும் நபர்களில் ஒருவரைப் பார்த்து 'சல்லு' என்று குறிப்பிட்டால் வாங்க வந்திருப்பவர் கண்டிப்பாகத் துணி எடுக்கும் நோக்கத்தில் கடைக்கு வரவில்லை. ஏதோ ஒரு பொருளைப் பார்த்து விட்டு இறுதியில் நாளை வருகிறேன்/பிடிக்கவில்லை என்று பதில் கூறும் தன்மை கொண்டவர்களேயே விற்பனையாளர்கள் தங்கள் குறியீட்டு மொழியில் தரம் பிரித்து 'சல்லு' என்ற சொல்லால் உணர்த்துகிறார். அவ்வாறு, சல்லு வாடிக்கையாளர்களை அவ்வளவு சீக்கிரம் திருப்திப் படுத்திவிடவும் முடியாது. அந்த

# 10. கருவிகளின் அகராதி அமைப்பு

உலகத்தில் ஒருபொருள்/கருத்து தோன்றினால் அப்பொருள் வளரும், உருமாறும், பின்பு அழியும். இது தத்துவ உண்மை விளக்கம். இக்கருத்திற்கு எப்பொருளும், எவ்வுயிரும் விதிவிலக்கல்ல. மொழியும் அப்படித்தான். இவ்வுலகத்தில் மிகப் பெரிய போட்டி ஒன்று நிலவிக் கொண்டிருக்கிறது.

அது,

இவ்வுலகில்

எந்த மொழி முதலில் தோன்றியது
எந்த இனம் முதலில் தோன்றியது

எவ்விடத்தில் வாழ்ந்தவர்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்தார்கள் என்பதுதான். இவைகள் பற்றி எவ்வளவோ ஆய்வுகள் வெளிவந்து விட்டன. தற்போதும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இனியும் வெளிவரும். இதற்கு ஒரு முடிவில்லை.

காலமாற்றத்தாலும் இயற்கையின் பேரழிவு காரணமாகவும் குறிப்பிட்ட மனித இனம் அழிந்தால் அவர்களோடு அந்த மொழியும் (பேச்சு மொழி) அழிய வாய்ப்புள்ளது. அதற்கு பல சான்றுகள் உள்ளன. மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற நாகரீகம் எல்லாம் அதைத்தான் உணர்த்துகின்றன. அந்த மக்கள் அப்போது பேசிய பேச்சு மொழிகள் இல்லை. அவர்கள் பயன்படுத்திய எழுத்து மொழிகளின் அகரவரிசை இல்லை. அவர்கள் பயன்படுத்திய ஒலிகளின் வடிவம், மதிப்பீடு, போன்றவைகளை நம்மால் உணரமுடியவில்லை. ஆனால் அவர்கள் ஏதேச்சையாக கருவிகளில் எழுதிய சில குறி வடிவங்கள், அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் சில மட்டுமே கிடைத்தவாறு உள்ளன. தற்போது அதை வைத்துக் கொண்டு அவர்களின் மொழி அமைப்பு, பின்னணி போன்றவற்றை ஆய்வது அவரவர்களின் அறிவின் முடிவு. முழுமையான உய்த்துணர் தன்மையை நம்மால் கொடுக்க முடியவில்லை. காரணம் அவர்களுக்கும், நமக்கும் உள்ள இடைவெளி அதிகம், அதனால் அங்கு கிடைத்த கருவிகளை நோக்கினால் அது மாறுபடும். கருவிகள் தான் கலாச்சார பண்பாட்டுப் பெட்டகம். அவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் விட்டுச் சென்ற எச்சம் பயன்படுத்திய கருவிகள்தான். கருவிகளை, அதன் வடிவ அமைப்புகளை அன்றைக்கும், இன்றைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தாலே வளர்ச்சியைக் கணித்து விட முடியும். ஒரு மொழியை வெளிக் காட்டுவதனால் மட்டுமே

அவர்களின் உள்மதிப்பீட்டை, மொழி ஆளுமையை, வளர்ச்சியை மதிப்பிட்டு விட முடியாது. அவர்கள் இல்லத்தில்/வெளியில் பயன்படுத்தும் பொருட்களே அதன் வளர்ச்சியை உணர்த்தும். மொழிவளர்ச்சி, மொழி ஆய்வு, மொழி மாற்றம் என்பது அம்மொழியில் மட்டும் இல்லை. அம்மொழியை பேசும் மக்கள் பயன்படுத்தும் கருவிகளிலும் உள்ளது.

மொழி, பாதுகாப்பு என்பது மொழியை பேசுவதால் மட்டுமே நிகழ்ந்து விடுவதில்லை. அவர்கள் சொந்த மண்ணில் பயன்படுத்தும் பொருட்களைப் பாதுகாத்தலிலும் அடங்கி இருக்கின்றது. தற்காலத்தில் வாழுகின்ற மக்களுக்குத் தாத்தா காலத்தில் பயன்படுத்திய கருவிகளின் வடிவம், பெயர்கூடத் தெரிவதில்லை. தற்காலத்தில் இப்படி என்றால் வருங்காலத்தில், எனவே அழிந்த பொருள், அழிகின்ற பொருள்களைத் தொகுத்து பாதுகாத்தல் முக்கியம்.

## கருவியின் பாதுகாப்பு

கருவிகள் பாதுகாப்பு என்பது அக்கருவியைப் பாதுகாத்தல் ஒன்று. அதன் வடிவம் மற்றும் வார்த்தை பாதுகாத்தல் மற்றொன்று. மொழி வார்த்தைகளைப் பாதுகாத்தல் என்பது பெரும்பாலும் தற்காலக் கட்டங்களில் அகராதிகளில்தான் நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன. முன்பு அகராதி என்பது மெத்தப்படித்தவர்கள் மட்டுமே கையாலும் நூலாகத் தயாரிக்கப்பட்டது. தற்போது அந்த நிலையிலிருந்து சற்று மாறி முதலாவதாக தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பெருக்குவதற்காக மொழியில் வழங்கப்படும் அனைத்துச் சொற்களையும் பதிவு செய்தல் என்பது முக்கியப் பணியாக தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. அந்த வரிசையில் தற்போது வட்டார வழக்குச் சொற்களையும் பதிவு செய்து அகராதி அமைக்கும் பணியும் தமிழகத்தில் தற்போது நடந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் என். இராசசேகரன் நாயர், அவர்களை முதன்மை ஆய்வாளராகவும், இணைப்பேராசிரியர் எஸ். ராஜா அவர்களைத் துணை ஆய்வாளராகவும் இணைந்து தமிழக விவசாய வட்டார கலைச் சொற்களின் அகராதி தமிழக அளவில் முடிந்து விட்ட பணி. இது போன்று மற்றத் தொழில்களுக்கும் நிகழ்த்த வேண்டும். இக்கட்டுரை அதைக் கடந்து வட்டார வழக்கில் இருக்கும் அனைத்துத் தொழில் கருவிகளுக்கும் அகராதி அமைக்கும் முறையினை விளக்குகிறது.

அகராதி என்பது சொற்களின் பொருளின் தன்மையிலே கவனம் கொண்டு அதை விளக்குவதற்குத்தான் என்ற நிலையில் வார்த்தைகளைக் கொடுத்து, ஏதேனும் சில பொருளின் தெளிவிற்கே படத்தைக்

கொடுக்கிறார்கள். அங்கே வட்டார வழக்கில் உள்ள அனைத்து கருவிகளையும் கொடுப்பதில்லை.

ஒரு சாதாரண அகராதியில்,

மண்வெட்டி என்ற ஒரு வார்த்தை கொடுக்கப்பட்டிருந்தால் அந்த மண்வெட்டியின் செயல்பாடு, பொதுவடிவம், (அடிப்படை வடிவம்) பொருள் (Meaning) மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. தாய்மொழி அல்லாதார் ஒரு மொழியை ஆய்வு/குறிப்பிடுகின்ற போது மண்வெட்டி என்ற ஒரு வார்த்தையை நோக்கும் போது,

1. அவர் பார்த்த மண்வெட்டியின் வடிவத்தை உணருவார்.

2. அகராதியில் கொடுக்கப்பட்டிருக்கும் மண்வெட்டியின் வடிவத்தை உணருவார்.

ஆனால், இதில் இல்லாத எத்தனையோ வட்டார இடங்களில் உள்ள பல வடிவ மண்வெட்டியின் வடிவத்தை உணரமுடியாது. அந்த வடிவம் கொடுக்கப்படாமலே ஏதோ ஒரு பகுதி மண்வெட்டியை மட்டும் ஒட்டு மொத்த தமிழகத்தின் மண்வெட்டியாக பதிவு செய்யப்படுகிறது. மற்ற அனைத்து வடிவங்களும் தெரியாமலே போய் விடுகின்றன.

## சிறு வடிவ மாற்றத்தைக் கூட பதிவு செய்ய வேண்டும்

ஒரு கருவியின் வடிவத்தை மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடும் போது சில வட்டாரத்தில் உள்ள கருவிகள் பொதுக் கருவியிலிருந்து சிறிய அளவில் தானே மாறுபட்டிருக்கின்றன. அது ஆசாரியின் தனிப்பட்ட சுய கற்பனையின் வடிவமாகக் கூட இருக்கலாம். அதை ஏன் வட்டார வழக்காக பதிவு செய்ய வேண்டுமா என்று கேட்டால் அதையும் செய்ய வேண்டும்.

**உதாரணம்:**

தற்போது இருசக்கர வாகனத்தில் ஹீரோ ஹோண்டா வண்டியை எடுத்துக் கொள்வோம்.

ஒரு வண்டியின் வடிவம் 2002 ஆம் ஆண்டில் பேஷன் என்று அறிமுகப்படுத்தினார்கள். அடுத்து பேஷன்+ என்று அறிமுகப் படுத்தினார்கள். இந்த இரு வண்டிக்கும் அடிப்படை வடிவம் ஒன்றுதான். சில மேல் வடிவப் பாகம் மட்டுமே மாற்றம் பெற்றிருக்கலாம். இதனால் இதன் விலையும் அதிகம். சில மாறுதலுக்கு ஒரு கருவி உட்படும்போது அங்கே, தனிமனித/சமுதாயத்தின் பொருள் மதிப்பீடு, அக்கருவி வடிவமைக்கும் முயற்சி, அனைத்தும் மாற்றம் பெறுகின்றது. எனவே தனிமனித வட்டார மாற்றம் எதுவாக இருந்தாலும் அதை நாம் சாதாரண

நிலை என்று ஒதுக்காமல், அதன் காரண காரியத்தை உணர்ந்து பதிவு செய்தல் நமது கடமை.

## சாதாரண வட்டார வழக்கு, வட்டார வழக்குக் கருவிகளின் அகராதி அமைப்பு

ஒரு சாதாரண அகராதி என்பது பொருண்மையியல் கோட்பாட்டின் படி சொற்களுக்கு இலக்கணப் பொருளும், உலகப்பொருளும் இருக்கும். அதன் அடிப்படையில் உதாரணமாக க்ரியாவை எடுத்துக் கொள்வோம்.

1. **மண்வெட்டி** *பெ.* (மண்ணைவெட்டி, அள்ளிப் போடப் பயன்படுத்தும்) மரக்கட்டையில் தடித்த இரும்புத் தகடு பொருத்தப்பட்ட கருவி; hoe with a short handle; spade.



மண்வெட்டி

**2. வட்டார வழக்கு அகராதியில் மண்வெட்டி**

மமுட்டி mamutti பெ. hoe with a short handle காம்பு மரத்தாலும், வெட்டும் பகுதி இரும்புத் தகட்டாலும் இணைத்துச் செய்யப்பட்ட (மண்ணை வெட்டுவதற்குப் பயன்படும்) ஒரு வகை கருவி. மம்புட்டி (திரு.) மமுட்டி (நா.) மமட்டி (கட.) மம்பட்டி, மமுட்டி, மமட்டி (பெ.) நம்பட்டி (கன்.) சனுக்க/சனிக்கி (தரு.) மம்பட்டி (சிவ.) (இத் தலைச் சொல் இராஜசேகரன் நாயர் செய்த அகராதியில் உள்ளது)

**3. வட்டாரக் கருவிகளின் அகராதி**

மண்வெட்டி பெ. (st) hoe with a short handle காம்பு/கைப்பிடிப்பகுதி மரத்தாலும், வெட்டும் பகுதி இரும்புத்தகட்டாலும் இணைத்து மண்தொடர்பான வேலைகளுக்குப் பயன்படும் வகையில் செய்யப்பட்ட ஒரு கருவி. மம்புட்டி (திரு.) மமுட்டி (நா.) மமட்டி (கட.) மம்புட்டி/மமட்டி, மமட்டி (பெ.), நம்பட்டி (கன்.), சனுக்க, சனிக்கி (தரு.), மம்பட்டி (சிவ.)



(நாக.) (தூ.) (தரு.)

எனவே மேற்கண்ட வேறுபாட்டை கருத்தில் கெண்டு நாட்டுப்புறக் கருவிகளின் அகராதி தேவையை உணரமுடியும். இதில்

**முதல் அகராதியில்**

எழுத்துத் தமிழில் கலைச்சொல், இலக்கணக்குறிப்பு, அதன் செயல்பாடு, அமைப்பு விளக்கம், தேவைப்பட்டால் அக்கருவியின் பொது வடிவம்.

**இரண்டாவது அகராதியில்**

பேச்சுத்தமிழில் கலைச்சொல், இலக்கணக்குறிப்பு, அதன் செயல்பாட்டு அமைப்பு விளக்கம், தேவைப்பட்டால் கருவிகளின் வடிவம், முக்கியமாக வட்டாரவழக்கு வேறுபாட்டு சொற்கள், வட்டாரக் கருவிகளின் பெயர்.

**மூன்றாவது அகராதியில்**

1. எழுத்துத் தமிழில் தலைச்சொல்
2. இலக்கணக்குறிப்பு
3. அதன் செயல்பாட்டு, அமைப்பு விளக்கம்.
4. தலைச்சொல்லுக்கு இணையாக வட்டார வழக்குச் சொல் வேறுபாடு
5. வட்டார வழக்கு கருவிகளின் வடிவ மாறுபாடு
6. வட்டாரத்தின் பெயர்

போன்றவை உணரப்படுகிறது.

எனவே சாதாரண வட்டார வழக்கு அகராதியில் அமைக்கப்படும் கருவிகளைப் பற்றிய தலைச்சொற்களின் அமைப்பை விட வட்டார வழக்குக் கருவிகளின் அகராதியில் மிகுதியாக ஒரு கருவியின் முழுவடிவத்தை முற்றிலும் உணர முடிகிறது.

## எளிமைப் படுத்துதல்

1. ஒவ்வொரு தொழிலின் கருவிகளுக்கும் வட்டார வழக்கு அகராதி அமைத்தல்.

(உதாரணம்)

'பொற்கொல்லர் தொழில்' ஒரு மாவட்டம் வட்டத்தை முதன்மையாக எடுத்துக்கெண்டு அதை அனைத்து வட்டம்/மாவட்டம் அதே தொழில்களுடன் ஒப்பிட்டு அகராதி அமைத்தல். இதைப் போன்று அனைத்துத் தொழில்களுக்கும்.

2. இரண்டாவது வட்டார வழக்கு இல்லாமல் அனைத்து தொழில் கருவிகளையும், ஓவியத்துடன் அகராதி அமைத்தல்.

3. தனிப்பட்ட தொழில் பிரிவு இல்லாமல் தமிழகத்தில் இருக்கும் அனைத்துக் கருவிகளையும் ஒட்டு மொத்தமாக அகரவரிசைப்படி செய்து கருவிகளுக்கு அகராதி அமைத்தல்.

## கருவியும் மனிதனும்

மனிதர்களின் செயல்பாடுகளில் கருவிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மனிதனோடு பாதி மனிதனாகக் கருவிகள் கலந்து விட்ட ஒன்று. மனித முயற்சியை எளிமைப் படுத்துவதாகவும், மனித வளர்ச்சியின் தேவையை முழுமைப் படுத்துவதாகவும், பயன்படுவது கருவி. கருவிகள் என்பது மனிதனின் உடல் உறுப்புகளே கருவிகளாக மாறலாம். கருவி இல்லாத ஒரு செயலை மனிதனால் எந்தச் சூழ்நிலையிலும், எவ்விடத்திலும் செய்ய இயலாது.

'ஆயுதம்', 'கருவி', 'உபகரணம்', எது பொருத்தமான சொல்.

இந்த மூன்று சொற்களும் கருவிகளுக்கு பொருள் சொல்வதில் தொடர்புடைய சொற்களாக இருந்தாலும் இதில் ஒரு சொல் பொருத்தமானதாக அமையும். முதலாவது இந்த மூன்று சொற்களின் அடிப்படைப் பொருள்களை அகராதியில் நோக்குவோம்.

**ஆயுதம்** *பெ.* போரில் பயன்படுத்தும் கருவி weapons of war: arms (எ.கா) ஆயுதம் ஏந்திய வீரர்கள் (ஒருவரை ஒருவர்) தாக்கி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த கூடிய கருவி. weapons (எ.கா) அவர் ஏதோ ஒரு ஆயுதத்தால் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார்.

**உபகரணம்** *பெ.*1 (நுணுக்கமான) தொழிலுக்குத் தேவையான கருவி Instrument (to help in precision work) அறுவை சிகிச்சைக்கு தேவையான உபகரணங்கள். 2. ஒரு பொருளின் பகுதியாக உள்ள கருவிகள் அல்லது ஒரு செயலுக்குத் தொகுப்பாகப் பயன்படும் கருவிகள் apparatus மின்சார உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

கருவி *பெ.* 1 வேலையை எளிதாக்கும் பொருட்டு அல்லது வேலைக்கு உதவும் பொருட்டுக் கையாலோ மின்சக்தியாலோ இயக்கிப் பயன்படுத்தும்

சாதனம். Tool. Imement, Instrument கற்காலக் கருவிகள், தொழில் நுட்பக்கருவிகள்

இவ்வாறு க்ரியா அகராதி விளக்கம் அளித்துள்ளது. எனவே, இக்கட்டுரையில் பெரும்பான்மையாகக் கருவி என்ற சொற்களால் அப்பொருள் குறிக்கப்பட்டுள்ளது. இருந்தும் கருவி, உபகரணம், ஆயுதம் என்று மூன்று சொற்களில் மிகப்பொருத்தமான பொருளைக் கொண்டுள்ள கருவி என்ற சொல்லையே Implement, Insturment tool என்ற சொல்லுக்குப் பொருள் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

### கருவிகளின் உருவாக்கம்

மனிதர்களின் பயன்பாட்டிற்காக உருவாக்கப்படும் கருவிகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. உலகப் பொருளின் இயக்கங்களைப் பார்த்து செய்தல்.
   பறவை பறத்தல் – மனிதன் பறத்தல்
2. உடல் இயக்கங்களைப் பார்த்து உருவாக்குதல்.
   கையால் அள்ளுதல் – கரண்டியால் அள்ளுதல்
3. இயக்கங்களை எளிமைப் படுத்த உருவாக்குதல்
   நடப்பதைத்தவிர்க்க – மிருகங்களைப் பயன்படுத்துதல்.

### கருவிகளின் வளர்ச்சி . மனித இனத்தின் வளர்ச்சி

புதிது புதிதாக உருவாக்கப்படும் கருவிகளின் வளர்ச்சியை மனித இனத்தின் வளர்ச்சியாகக் கருதலாம். மனித வளர்ச்சியின் பரிணாமத்தை பல அமைப்பு நிலைகளில் ஆய்வு செய்ய முற்பட்டாலும் கருவிகளின் வளர்ச்சி நிலைகளைக் கொண்டே ஒரு மனித இனத்தின் வளர்ச்சி நிலைகளை எளிமையாக ஆதாரத்துடன் விளக்கி விட முடியும். (உதாரணமாக) போக்குரத்துக் களத்தை எடுத்துக் கொள்வோம். இதில் மூன்று பிரிவுகள் உள்ளன. தரைவழி, நீர்வழி, வான்வழி.

1. நடத்தல் – தனிமனித முயற்சியில் (தானாக)
2. ஆட்களைத் தோளில் சுமத்தல் – ஒருவனைக் கருவியாகப் பயன்படுத்துதல்
3. மிருகங்களைப் பயன்படுத்துதல் – மிருகங்களின் மேல் அமர்ந்து செல்லுதல்.
4. பல்லாக்கு என்ற கருவி உருவாக்கி அதில் அமர வைத்துத் தூக்குதல் – சுமையைத் தான் மட்டும் சுமக்காமல் பகிர்ந்தளித்தல் (இதில் பலவடிவம்)

5. மரத்தால் வண்டி கண்டு பிடித்து அதை மனிதன் இழுத்தல் – மரத்தின் உபயோகம்
6. அவ்வண்டியை மிருகம் இழுத்தல் – வண்டியில் பல வடிவம்.
7. மிதி வண்டி கண்டு பிடித்து அதை மனிதனே மிதித்தல் – உலோகத்தின் உபயோகம் பல வடிவங்கள்.
8. எரிபொருள் மோட்டார் பொருத்தி இயக்குதல் – தானே இயக்குவது, தான் அமர்ந்து மற்றவரை இயக்க வைப்பது. பல வடிவங்கள்.
9. மூன்று, நான்கு பல சக்கரத்தில் (பொருத்தி) உருவாக்குதல் – தனியாகவும், குழுவாகவும் செல்லுதல்.
10. இரயில் – குழுவாகச் செல்லுதல்

மேற்கண்டது

கரியில் இயக்குதல்
எரிபொருளில் இயக்குதல்
மின்சாரத்தில் இயக்குதல்
சூரிய ஒளியில் இயக்குதல்

நீரில் செல்லுதல்

1. மனித முயற்சியில் நீந்துதல் – உடலையே கருவியாக பயன்படுத்துதல்
2. தோனி செய்து அதில் துடுப்புப் பொருத்துதல்– மனித உடல் உழைப்பால் செலுத்துதல்.
3. பாய் மரப் படகு உருவாக்குதல் – காற்றின் திசையில் செல்லுதல்
4. கப்பல் உருவாக்குதல்

நீரின் மேல் }
} பல வடிவம்
நீரின் அடியில் }

## வான் வழி செல்லுதல்

1. ஹெலிகாப்டர் கண்டுபிடித்தல்
2. ஏரோபிளேன் கண்டுபிடித்தல் – பல வடிவங்கள், பல வகையில் பயன்படுதல்

இவ்வாறு ஒரு களத்தின் அமைப்பில் உள்ள கருவியின் வளர்ச்சியைக் கண்டால் ஒட்டு மொத்த மனித வளர்ச்சியைக் கண்டு விடலாம். இதில் எத்தனையோ கருவிகள் புதிதாகத் தோன்றும்போது முன்பு பழக்கத்திலிருந்த

கருவிகளின் பயன்பாடு குறைந்து விடும். பழையன கழிதலும், புதியன புகுதலும், காலத்தின் கட்டாயம் என்பது அறிஞரின் வாக்கு. எனவே, தற்கால கருவிகளில் இம்மாற்றம் நிகழ்ந்தால் நாட்டுப்புறக் கருவிகளின் நிலை! அதில் நிறையவே மாற்றம் நிகழ்ந்திருக்கும். பல கருவிகள் அழிந்தே போயிருக்கும். அதனை நாம் பதிவு செய்ய வேண்டாமா?

உதாரணமாக;

பழங்காலத்தில் அனைத்து வீடுகளும், மண் சுவரும் பனை ஓலையில் கூரையும் அமைக்கப்பட்ட வீடுதான் அதிகம். இந்தத் தொழில் தெரிந்தவர்கள் அன்றைய காலக்கட்டத்தில் நிறையபேர். அன்று சுவரை அமைக்க, மண்குழைக்க, அதன் வடிவத்தை சீவ, மட்டம் பார்க்க, கூரை கட்ட போன்ற அனைத்துத் தொழில்களுக்கும், ஏராளமான கருவிகள் இருந்தன. அவை அனைத்தும் தற்போது எங்கே? அந்த கருவிகளின் பெயர்கள் கூட நன்கு தெரிவதில்லை. தொழில் வளர்ச்சியில், கால மாற்றத்தில் எதுவும் இல்லாமல் போய்விட்டன. வீடு கட்டுதல் என்ற தொழில் கருத்து இருக்கின்றதே ஒழிய மண் சுவர் வைத்து வீடு கட்டும் முறை, அதற்குப் பயன்படுத்திய கருவிகள், அத்தொழிலில் பயன்படும் கலைச் சொற்கள் அனைத்தும் இல்லாமல் போய்விட்டன. அவ்விடத்தில் வேறொருமுறை வந்தவுடன் அக்கருவிகளை நாம் இழந்து விட்டோம். பொதுமொழி அகராதியில் அந்தத் தொழில் கலைச் சொற்களையும் பாதுகாக்கவில்லை. அதன் கருவி வடிவத்தையும் பாதுகாக்கவில்லை.

மேலே காட்டிய உதாரணத்தின் அடிப்படையில் மட்டும் ஏதேனும் ஒரு களத்தில் உள்ள கருவிகளின் வளர்ச்சி நிலைகளை ஆய்வு செய்தல். அன்றிலிருந்து இன்றுவரை உள்ள சமுதாயத்தின் வளர்ச்சி, பொருளாதாரத்தின் வளர்ச்சி, மொழியின் வளர்ச்சி, மனித மூளையின் பயன்பாடு போன்றவைகளைக் கண்டுபிடித்து விடலாம்.

## தமிழகத்திட்டங்களில் சில குறைபாடுகள்

இதுவரை நடந்துள்ள தொழில் கலைச்சொற்கள், மற்றும் கருவிகள் பற்றிய ஆய்வுத்திட்டத்தில் முழுமையான களப்பணி இன்னும் நடந்தேறவில்லை என்றே கூறலாம். அதற்கு சில காரணங்களும் அமைகின்றன.

1. சுய ஆர்வத்தோடு பணியாற்றும் தகவல் சேகரிப்பவர் குறைவு.
2. தகவல் சேகரிப்பவருக்குப் பல்கலைக்கழகங்களினால் கொடுக்கப்படும் ஊதியம், பயணப்படி, தினப்படி போன்றவை மிகவும் குறைவு.
3. தகவல் தருபவருக்குக் கொடுக்கப்படும் ஊதியப்படியும் குறைவு.

4. தகவல் சேகரிக்கச் செல்பவர் சரியான தகவல் தருமிடத்தைத் தேர்வு செய்வதில் குறைபாடு.
5. ஆய்வுத்திட்டம் குறுகிய காலமாக இருப்பது.
6. தகவல் சேகரிப்பவர் நாட்டுப்புற மக்களிடம் நேரடியாகச் சென்று தகவல் பெற, கடின உழைப்பைச் செலுத்த ஆர்வம் செலுத்தாமை.
7. பணியாற்றுபவர்கள் பல வேலைகளை ஒப்புக் கொள்ளுவதால் முழுமையாக ஈடுபடமுடியாமை.
8. அரசாங்கத்திற்கு ஏதேனும் தகவல் கொடுத்தால் போதும். அறிக்கை அனுப்பினால் போதும் என்ற அலட்சியப் போக்கு.
9. அனுப்பிய அறிக்கை உண்மையிலே எடுக்கப்பட்டுள்ளதா, அல்லது காப்பி அடித்து எழுதப்பட்டுள்ளதா என்று பல்கலைக்கழக மானியக்குழுவும், அதை அறிக்கை குழுவிற்கு அனுப்பி சரிப்பார்க்காதது.
10. அறிக்கை தவறாக இருந்தாலோ, சரியான தகவல் கொடுக்காமல் இருந்தாலோ, பணத்தைத் திரும்பப்பெறும் விதிமுறையைக் கொடுக்காதது.
11. களப் பணியாற்றுபவர்கள் திடீரென்று வேறுபணிக்கு மாற்றப்படுதல் தானாக மாறிச் செல்லுதல்.
12. வெறும் பணத்திற்காகவே திட்டங்களைப் பெற்றுக் கூடுதல் கவனம் செலுத்தாமை

போன்றவை சில காரணங்களாகக் கொள்ளலாம். இதை ஓரளவிற்குச் சரிசெய்து சுய ஆர்வத்துடன் பணி செய்தால் முழுமையாக ஆய்வு, வெளிவர ஏதுவாகும்.

## தகவல் சேகரிப்புக் களங்கள்

தமிழகத்தில் எத்தனையோ களங்கள் ஆய்வாளர்களால் விரல் பதிக்கமுடியாதவைகள் நிறைய உள்ளன. அவ்வாறு பார்க்காத தொழில்கள் நிறைய நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அந்தந்தத் தொழில்களிலும் எத்தனையோ கருவிகள் பயன்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அந்தக் கருவிகளின் பெயர்கள், அகராதிகள் ஆய்வேடுகளில் காணுதல் அரிது. அந்தக் கருவிகள் எல்லாம் அடுப்பெரிக்கவும், கரையானுக்கு உணவாகவும் பயன்படத் தயாராக இருக்கின்றன.

உதாரணமாகச் சில தொழில் வகைகளை மட்டும் பார்ப்போம்.

1. விவசாய அனைத்து தொழில்களும்
2. மீன் பிடித் தொழில்
    1. உப்பு நீர்
    2. நன்னீர்
3. கட்டடத் தொழில்
    1. கூரை வீடு கட்டுதல்
    2. மண் சுவர் வைத்தல்
    3. கால்வாய் கொட்டகை போடுதல்
    4. பந்தல் அமைத்தல்
    5. பனை சாத்து தயாரித்தல்
    6. ஓட்டு வீடுகட்டப் பயன்படும் பொருள்கள் தயாரித்தல்
4. வேட்டையாடுதல்
5. செங்கல் ஆலை
6. நெசவுத் தொழில்
7. பொற்கொல்லற் தொழில்
8. மண்பானைத் தொழில்
9. ஓவியத் தொழில்
10. சுதை சிற்பத் தொழில்
11. சமையல் தொழில்
12. தச்சுத் தொழில்
    1. கோயில் வாகனம் தயார் செய்தல்
    2. வீட்டிற்குத் தேவைப்படும் பொருள் செய்தல்
13. பாய், கூடை முடைதல் தொழில்
14. செருப்புத் தைக்கும் தொழில்
15. கைவினைப் பொருள் தயாரித்தல் தொழில்
16. பனை மரத்தொழில்
17. உப்புத் தயாரித்தல் தொழில்
18. இரப்பர் தயாரிக்கும்/எடுக்கும் தொழில்
19. வெல்லம் காய்ச்சும் தொழில்
20. கால்நடைகளுக்கு லாடம் /சூடு போடும் தொழில்

21. நாடகக் கலைத் தொழில்

22. நாட்டுப்புற நுண்கலைகள்

    1. சிலம்பு
    2. கம்பு
    3. கரகம்
    4. கோலம் – மேலும்...

23. கோவிலுக்குப் பூசை செய்யும் தொழில்

24. கசாப்புக் கடைத் தொழில்

25. சவரம் செய்யும் தொழில்

26. நாட்டு மருந்து தயார் செய்தல் தொழில்

27. காவடி, அலகு போடுதல் தொழில்

28. கும்பாபிஷேகம் செய்யும் வேலைகள்

29. கிணறு வெட்டும் தொழில்

30. ஜோதிடத் தொழில்

31. எண்ணெய் ஆட்டுதல் தொழில்

32. விளையாட்டுக் கருவிகள்.

இன்றும் எத்தனையோ தொழில்கள் பெயர் கூடத் தெரியாமலும், அதன் கருத்துப் புலப்படாமலும் இருக்கின்றன. எனவே மேற்கண்ட களங்களில் உள்ள தொழில் கருவிகள், அதன் பாகங்கள் போன்றவற்றை தொகுத்து தொழில் கருவி கலைச்சொற்கள் அகராதி ஒன்று அமைப்பது தமிழ்மொழிக்குச் சிறந்த சேவை. ஒரு வேலை இது தொடர்பில் பல நூல்கள் வந்திருந்தாலும் அதனைத் தொகுத்து தொழில் கருவிகளின் களஞ்சிய நூலாகத் தொகுத்து ஒருங்கே வெளியிட வேண்டும்.

## கருவிகளின் வகைப்பாடுகள்

மேற்கண்ட தொழில்களுடைய தொழில் கருவிகளைத் தொகுத்து அதன் தன்மை, பயன்பாடு அடிப்படையில் கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

வடிவத்தில் மட்டும்

1. பல்வேறு தொழில்கள் – பல்வேறு கருவிகள்.
2. ஒரே தொழில் – பல்வேறு கருவிகள்
3. ஒரே கருவி – வட்டார அமைப்பில் பல்வேறு வடிவம்.

இவ்வகை நோக்கில் அந்தக் கருவிகளைப் பதிவு செய்தல்.

வடிவம் மற்றும் வார்த்தையுடன்

ஒரு தொழில் கருவிகள் வட்டார ஒப்பீட்டு அமைப்பில் :

1. வடிவம் மாறுபட்டு வார்த்தை ஒன்றாக இருத்தல்.

2. வடிவம் ஒன்றாக இருந்து வார்த்தை மாறுபடல்

3. வடிவம் மாறுபட்டு வார்த்தையும் மாறுபடல்.

இன்னும் இத்தொழில் கருவிகளை அமைப்புத் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

## அமைப்புத் தன்மையில் கருவிகள்

I சுடு மண்ணால் செய்தது

II மரத்தால் செய்தது

III உலோகத்தினால் செய்தது

IV இரும்பு, மரம் மற்றும் துணைப்பொருள்களால் ஆனது. (முடி. நூல்)

## செயல்பாட்டின் அடிப்படையில் கருவிகள்

1. மனிதனால் மட்டுமே பயன்படுத்தப்படும் கருவி.
2. மனிதனும் மிருகமும் இணைந்து செயல்படுத்தும் கருவி.
3. மிருகத்தினால் மட்டுமே பயன்படுத்தப்படும் கருவி.
4. மனிதன் இயந்திரத்தினால் செயல்படுத்தும் கருவி.

## தரவு சேகரித்தல்

1. முதலாவதாக தமிழக நூலக/பதிப்பங்களில் எத்தனை தொழில் பற்றிய நூல்கள், பல்கலைக்கழகங்களில் எத்தனை ஆய்வேடுகள், எத்தனை பல்கலைக்கழக முதன்மைத் திட்டம் (Project) வந்துள்ளது என்பதைப் பற்றி முழுமையான தரவு சேகரித்தல்.
2. இரண்டாவதாக நேரடிக்களப்பணி தமிழகம் முழுவதும் செய்து கருவிகள், கலைச்சொற்கள், அதன் செயல்பாடு, விளக்கம், போன்றவற்றைப் பதிவு செய்தல். அக்கருவியைப் புகைப்படம் எடுத்தல். அனுபவம் பெற்ற புகைப்படம் எடுப்பவராக இருக்க வேண்டும். அப்போதுதான் அதன் சரியான வடிவமைப்பை பார்த்து புனையா ஓவியம் சிறப்பாக வரைய முடியும். மறைந்து போய், சிதைந்து போய் இருக்கும் கருவிகளை முதியோர்களிடம் கேட்டு, அதை படம் வரைந்து சரி பார்த்து பதிவு செய்தல், அழிந்து போன கருவிகளைப் புனையா ஓவியம் வரையும் போது மற்றவரிடம் ஒப்பிட்டு சரி பார்த்தல்.

3. சாதாரண அகராதியை விட இதில் கருவிகளின் வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் தகவல் சேகரிப்பவர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

## தரவு சேகரிப்பாளர்

1. தகவல் சேகரிப்பாளர் நாட்டுப்புறக் கலைகளைப் பற்றி ஓரளவாவது பரிச்சியம் உள்ளவராக இருக்கவேண்டும்.
2. தகவல் சேகரிப்பவர் தன்னார்வம் மிக்கவராக, சுய விருப்பு, வெறுப்பற்று வேலை செய்பவராகச் சோதித்து பணியமர்த்த வேண்டும்.
3. மொழிக்கு ஒரு புதிய கருத்தைக் கொடுப்பதில் தன்னார்வம் கொண்டவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
4. சாதாரண அகராதியில் வார்த்தைகளை விளக்க முடியாத விடத்துப் படம் கொடுக்கப்படும்.
5. ஆனால் இவ்வகராதியில் படத்திற்காகவே வார்த்தை கொடுப்பதால் ஒவ்வொரு கருவியும் படம் எடுத்தல், வடிவம் கொடுத்தல், போன்றவற்றில் கவனம் செலுத்தப் பயிற்சி பெற்றவராகத் தேர்வு செய்யப்பட வேண்டும்.
6. பெரும்பாலும் இப்பணியில் ஆண் தகவல் சேகரிப்பாளரே பொருத்தமுடையது.
7. வெட்கப்படாமலும் பல கருவிகளை அடி நிலை மக்கள் பயன்படுத்துவதால் அவர்களிடம் விருப்பு வெறுப்பு அற்று பணியாற்றுபவராக இருக்க வேண்டும்.

## களப்பணி இடம் தெரிவு செய்தல்

தமிழ்நாடு வட்டார வழக்கு நிறைந்த மாநிலம், வட்டார வழக்கு எல்லை நம்மிடம் சரியாகப் பகுக்கப்படாததால் ஒவ்வொரு மாவட்டத்தையும், ஒரு மையப் பகுதியாகக் கொண்டு 31 மாவட்டத்திற்கும், களப்பணியாளர்களை நியமிக்க வேண்டும். குறிப்பிட்ட தொழில், குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே நிகழ்வதால் அங்கே கூடுதல் கவனம் செலுத்துதல்.

- ❖ சில தொழிலைச் செய்பவர்கள் நாடோடிகளாக இருப்பதாலும் அவர்கள் அடிக்கடி இடம் விட்டு இடம் பெயர்வதாலும் அவர்களிடம் கூடுதல் கவனம் செலுத்துதல்.
- ❖ ஒவ்வொரு மாவட்டத்திலும் இனம், மொழி, தொழில் பிரிவு, சமுதாய அமைப்பு வாரியாகத் தரவு சேகரித்தல்.

---

- சில தொழில் குறிப்பிட்ட காலக்கட்டங்களில், மட்டுமே நடைபெறுவதால் அந்தக்காலகட்டங்களில் சென்று தரவு சேகரித்தல்.
- ஒரு தொழில் பற்றி பெரும்பான்மை இடத்தில் முழுமையாகத் தரவு சேகரித்துக் கொண்டு அதை மற்ற வட்டாரத்தில் அதே தொழிலில் ஒப்பிடுதல்.
- தமிழ் நாட்டில் சில தொழில்கள் ஒரு மாவட்டத்தில் மட்டுமே நடைபெறலாம். அதற்கு மற்ற வட்டாரத்தில் தொழில் ஒப்புமை இல்லாமல் இருக்கலாம் இதைக் கவனத்தில் கொள்ளுதல்.
- களப்பணியில், சிறு கருவிகளைக் கையோடு விலைக்கு வாங்குதல், பெரும் விலை மதிப்புடைய கருவிகளைச் சரியான கட்டமைப்பில் புகைப்படம் எடுத்தல்.
- புகைப்படத்தை அப்படியே போடுவதை தவிர்த்து, அதன் புனையா ஓவியத்தை சரியான வடிவத்தில் உருவாக்குதல்.

**தகவலாளி**

நாட்டுப்புறக் கருவிகள் பல வகைகளில் உள்ளன. தொழிலுக்குத் தகுந்தவாறு வேறுபடுகின்றன. சில காலங்களில் வயதிற்குத் தகுந்தவாறு கருவிகள் மாறலாம்.

அதனையும் கருத்தில் கொண்டு கீழ்கண்டவாறு வகைப்பாடு செய்து அதன் அடிப்படையில் தரவு சேகரிக்க வேண்டும்.

I 1–15 வயது உள்ளவர்கள்

II 15–30 வயது உள்ளவர்கள்

III 30–50 வயது உள்ளவர்கள்

IV 50–80 வயது உள்ளவர்கள்

இந்தப் பிரிவு கொண்ட ஆண் பெண் இருவரையும் கொண்டு கருவிகளின் தரவுகளைச் சேகரிக்க வேண்டும். உதாரணமாக: மனித வளர்ச்சியில் வயதிற்குத் தகுந்தவாறு கருவிகள் மாறுபடலாம்.

நடவண்டி<br>
மரப்பாச்சி<br>
டயர் ஓட்டுதல் (போன்ற ஓடி விளையாடுதல்) – சிறுவயது<br>
சூதாட்டம் – 20 க்கு மேல் – வளர்ந்த நிலை.<br>
தடிக்கழி – 70 க்கு மேல் – முதிர்ந்த நிலை<br>
பாக்கு இடிகட்ட – பல் விழுந்தவுடன்

இது போன்ற அனைத்தும் வயதின் அடிப்படையில் அமைகின்றன. சில கருவிகள் மதங்களுக்கென்றும், சாதிகளுக்கென்றும் மாறுபடலாம். இவை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். தகவலாளி அனைத்து மக்கள், இனம், மொழி கொண்டவர்களையும் தகவலாளியாகச் சேர்க்க வேண்டும்.

## தலைச்சொல் அமைத்தல்

இவ்வகராதி ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனி அகராதியா? வட்டார வழக்கு இல்லாமல் தொழில் கருவிகளின் அகராதியா? தனிப்பட்ட தொழில் பிரிவு இல்லாமல் தமிழகத்தில் உள்ள அனைத்து தொழில் அகராதியா என்பதைத் தீர்மானித்தல்.

பல்வேறு மாவட்டத்திலுள்ள ஒரு தொழிலை அனைத்து வட்டார, மாவட்டங்களோடு ஒப்பிடுதல். அவ்வாறு ஒப்பிட்டதைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.

1. எழுத்து வடிவத் தலைச்சொல்
2. இலக்கணக்குறிப்பு
3. அதன் செயல்பாட்டு அமைப்பு விளக்கம்.
4. சொல்லுக்கு இணையாக வட்டார வழக்கு வார்த்தை மாற்றம்.

வடிவம் மாறுபட்ட இடத்திற்கு வடிவம் கொடுத்தல். அதனோடு வட்டார/மாவட்ட சுருக்கக் குறிப்பீடு. அகராதியில் நாம் அனைத்துக் கலைச்சொல்லிற்கும் படம் கொடுப்பதால் விளக்கம் அதன் அமைப்பை விளக்காமல் அதன் செயல்பாட்டை விளக்குவதாக அமைய வேண்டும்.

# துணை நூல்கள்


இராமனாதன். பி., இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, வெளியீடு: இன்ஸ்டிடியூட் ஆப் சவுத் இண்டியன் ஸ்டடீஸ், சென்னை – 2.

இராமநாதபிள்ளை.ப. (1977), தேவாரத் திருப்பதிகத் திரட்டு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு.

இலக்குவன். அரு. (பதி.ஆ). (1980). அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும், பூம்புகார் பேரவை கல்லூரி வெளியீடு, மேலையூர்– 107.

சுப்பிரமணிய முதலியார். சி.கே. (உ.ஆ.) (1946), பெரியபுராணம் மூன்றாம் பகுதி– இரண்டாம் பாகம், ப. 1695–1898.

சுந்தரபாலு (2005),. சைவசித்தாந்தப் பெருமன்றம் சென்னை நூற்றாண்டு விழா மலர். (மலரும் சமுதாயம் – பக்கம் 9)

சுந்தரபாலு (2005), திருக்கோயில்களும் வழிபாடுகளும், தமிழியல் துறை, அண்ணாலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

சுந்தரபாலு (2006) தகவல் நேரம், மணிபாரதி பதிப்பக வெளியிடு, சிதம்பரம்.

செம்பியன் (1992), நாவுக்கரசர் காட்டிய நல்லறம், அம்மன் பதிப்பகம், சென்னை–3.

செங்கல்வராயபிள்ளை (1959), தேவார ஒளிநெறிக் கட்டுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு.

சேக்கிழார் (1982), பெரியபுராணம் மூலம், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் (1990), அப்பர் விருந்து, கலைவாணி புத்தக வெளியீடு, சென்னை – 17.

தாமரைக் கண்ணன். தி. (1989), திருநாவுக்கரசர், பராசக்தி பதிப்பகம், அச்சிறுபாக்கம், (அணிந்துரை– கிருபானந்த வாரியர்).

திருநாவுக்கரசு (1978), அப்பர் வரலாற்று ஆய்வுரை, மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை – 82.

திருநாவுக்கரசர் & சுந்தரர் (1974), தேவாரத் திருப்பதிகங்கள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு.

திருநாவுக்கரசுநாயனார் (1957), தேவாரத் திருப்பதிகம், தருமபுர ஆதினம் வெளியீடு.

நடேசகவுண்டர். கு. (1972), அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு.

Agesthialingom S, 2002. **Tamil moli amaippiyal**. Chidambaram Meyyappan Tamil Aivakam.

Chithiraputhiran, H. 2004. **collum porulum**. Thanjavur. Annam Publication.

Krishnamurti. Bh. 1962 **ma:ndalika vrittipadako:sam** – A Telugu Dialect Dictionary of Occupational Vocabularies: Hyderabad: Andrapradesh Sahaitya Akademi.

Rajasekharan Nair, N. 2005. **A study of Dialect variation in Tamil Agricultural Vocabulary**. UGC – Major Research Project (Progress Report), CAS in Linguistics Annamalai University.

Sundarabalu S. 2005. **naavukkaracarin ulavaram etu?** in A. Nagalingam (ed), Caiva sidhanda perumanram nu:rra:ntuvila: malar (1905-2005) Chennai: Sidhandha Peramaram.

Sundarabalu, S 2006. **Semantic fields and lexical structure in modern Tamil** (unpublished Ph.D. Thesis) Annamalai Nagar, Annamalai University.

Sundarabalu, S. 2002. **Occupational terms of Shannar in Tranquebar Taluk**: M.A. Dissertation. Annamalai Nagar. Annamalai University.

Sundrabalu, S. & N. Rajasekharan Nair, 2004. **nattuppura karuvikalil manvetti – moliyiyal nookku** in P. Thankarasu & Paari (eds), Veerkalaiteeti. Vo:2 Annamalai Nagar, Annamalai University.

The Hindu, Sunday, April 27-2008. Vol. 131- No. 17 Page. 20.

The Hindu, January 13, 2008 Page. 19.

The Hindu, May 3 2008 Vol. 131 No. 106.

The Hindu, November 21, 2007 Vol. 130 No. 277.



**சி**த்தாந்த ரெத்தினம் **முனைவர் சா. சுந்தரபாலு** நாகை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம் மாமாகுடியில் பிறந்தவர். தொடக்கக்கல்வியை மாமாகுடியிலும், மேல்நிலைக் கல்வியை ஆக்கூர் அரசினர் உயர் நிலைப் பள்ளியிலும் பயின்றவர். பி.லிட். பட்டப்படிப்பை தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியிலும் எம்.ஏ.(மொழியியல்), எம்.ஏ.(தமிழ்) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பயின்றார். தற்காலத் தமிழில் "பொருண்மைக் களமும் சொற்கள் அமைப்பும்" என்ற தலைப்பில், அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயராய்வு மையத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் சித்தாந்த ரெத்தினம் பட்டம் பெற்றவர். 1996-98 "நம்ம ஊரு செய்தி" (மயிலாடுதுறை) பத்திரிக்கையில் மாணவ நிருபராகப் பணியாற்றியுள்ளார். 1998-2000 சென்னையில் தமிழாசிரிய ராகப் பணி செய்துள்ளார். 2002-2005 பல்கலைக்கழக மானியக்குழுவின் முதன்மைத் திட்டத்தில் **"வட்டார வழக்கு விவசாயக் கலைச்சொல் அகராதி"** பணியின் கீழ் தரவு சேகரிப்பாளராகத் தமிழகத்தின் அனைத்துப் பகுதியிலும் சென்று களப்பணி ஆற்றித் தமிழ் மொழிக்குச் சிறந்த தரவுகள் தந்தவர். 2006-ம் ஆண்டு செம்மொழித் திட்டத்தில் **தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்** அவர்களிடம் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றி பேராசிரியரின் நன்மதிப்பைப் பெற்றவர். 2007-2008 இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், தென்மண்டல மொழிகளின் பயிற்று மையம், மைசூரில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். தென்னிந்திய மொழிகளின் பயிற்றுமொழி ஆய்வுக் கூடத்திற்கு (இடைநிலைப் பருவம்) பாடம் எழுதியுள்ளார். ஐந்திற்கும் மேற்பட்ட பணி பட்டறைகளில் பங்கேற்றவர். தமிழக மற்றும் இந்திய பல்கலைக் கழகங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். **எம்.ஏ. மொழியியலில் தங்கப் பதக்கமும், ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ஒரு தங்கப்பதக்கமும் பெற்றவர்.** மைசூர், எஸ்.ஆர்.எல்.சி.யில் தமிழாசிரியர்களுக்கான ஐந்திற்கும் மேற்பட்ட புத்தாக்கப் பயிற்சிகளுக்கு (Orientation Programme) ஒருங்கிணைப்பாளராக இருந்துள்ளார். தற்போது கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.